காவேரி

EAD **The Cauveri -**
IDEAL MAGAZINE FOR THE HOME

இதோ!

"கிட்டப்பா" மார்க்

புகையிலை & சீவலைப்பற்றி எழுதியிருக்கிறதே !!

படித்துப் பார்ப்போம் !!!

ரிஜிஸ்டர் நெ. 61.

"கிட்டப்பா"

டிரேட்மார்க்

"கிட்டப்பா" மார்க் சிவபுரி புகையிலை & சீவல் தினுசுகளையே எப்பொழுதும் உபயோகியுங்கள்.

குணத்தில் சிறந்தது. எங்கும் கிடைக்கும்.

பொறுப்புவாய்ந்த ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

பிராஞ்ச் :
16, ஹைரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

A. D. சுல்தான் & Co.,
கும்பகோணம்.

N. B:—குணம், மணம், காரம் இவைகளுக்காகச் செயற்கை என்பதே சேர்க்கப்படாதது. பல மார்க் புகையிலைகள் மாதிரி குணங்களுக்காக பல கெட்ட எஸ்ஸன்ஸ் வகைகள் சாமான்கள் சேர்க்கப்படாத இயற்கை குணமுள்ளது "கிட்டப்பா" மார்க் புகையிலைதான் என்பதை அன்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அ. அபூபக்கர் ருவுத்தர்,
புரொப்ரைட்டர்.

இந்தியக் கைத்தொழிலை நீங்கள் ஆதரியுங்கள்

குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர் மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். **வி. எஸ். & ஸன்ஸ்** பெம்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பி தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கை தேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.

தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைடர்கள்:— **வி. எஸ். & ஸன்ஸ்**

கும்பகோணம்.

The Southern India Confectionery Factory

Proprietors:- **V. S. & Sons,**

KUMBAKONAM.

ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய் தற்கால மோஸ்தரில்
உடைக்குத்தக்க போட்டி விலையில்

புதுச் சரக்குகள் கிடைக்குமிடம்

M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

தி காமன் வெல்த் பாங்கு லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: பெரியதெரு, கும்பகோணம்

பிராஞ்சுகள்:—கொடவாசல், ஆடுதுறை, ஜயங்கொண்டசோழபுரம், வலங்கைமான், திருவிடமருதூர்.

கரண்டு அக்கவுண்டுகள், ஸேவிங்ஸ் பாங்கு டிபாஸிட்டுகள், பிக்ஸட் டிபாஸிட்டுகள், கால் டிபாஸிட்டுகள் முதலியவை ஏற்றுக்கொள்ளப்படும்.

அங்கீகரிக்கப்படும் ஸெக்யூரிட்டிகளின்மேல் கடனும் காஷ் கிரெடிட்டும் கொடுக்கப்படும்.

நெல், அரிசி, தானியங்கள், நூல், பீஸ்-குட்ஸ், தங்க நகைகள், வெள்ளிக்கட்டிகள் இவைகளின்மேல் பணம் தரக்கூடும்.

மற்றும் எல்லாவிதமான பாங்கு அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்படும்,

V. K. ராஜகோபாலன்,
செக்ரடரி,

பொருளடக்கம்

சுபானு மலர் 2		ஆனி இதழ் 11

OFFICE OF THE REGISTRAR 10 JUL 1943 MADRAS

ஓர் நற்செய்தி	...		4
பஞ்சமேன்?	...	...	5
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்	...	ராமய்யா	8
விளம்பர யுகம்	...		12
விதியின் மயக்கமா மதியின் மயக்கமா?	...	டி. சி. துரை	13
கதம்பம்	...	...	17
நான் கேட்ட முதல் கச்சேரி	...	கி. ராமதுரை	20
வழி காட்டி	...	'ஹரிணி'	25
பிசகு யார்பேரில்?	...	"கௌரி"	29
குரல் பயிற்சியும் தானம் பாடுவதும்	...	ஆர். கே. விசுவநாதன்	34
அனுபமையின் காதல்	...	குகப்ரியை	38
பாம்பாட்டி	...	பாசரசு	43
விடிந்தது	...	எம். எஸ். கமலா	45

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

219012

காவேரி

சுபானு
மலர் 2

"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்

ஆனி
இதழ் 11

ஓர் நற்செய்தி!

•

தமிழ் மக்களின் பூரண ஆதரவு காரணமாக, **காவேரி**யின் இதழ்கள் மாதந்தோறும் அதிகரித்துக்கொண்டே வருவதினால், ஏராளமான பிரதிகள் அச்சிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு வருகிறது. இதைச்சரிவர சமாளிக்கவும் இதர சௌகரியங்களை உத்தேசித்தும் **காவேரி**க்கென ஒரு தனி அச்சுக்கூடம் வாங்கி, அதை நம் காரியாலயத்தில் அமைத்திருக்கிறோம். இச் செய்தியை நேயர்களுக்குச் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். இதற்குக் **காவேரி கலர் பிரஸ்** என்று பெயரிட்டிருக்கிறோம். இதில் பலவிதமான அழகிய எழுத்துக்கள், புதிய இயந்திரங்கள், கலர் பிரிண்டிங்குக்கெனப் பிரத்தியேகமான மிஷின், இன்னும் சகல வசதிகளும் இருக்கின்றன. பொது ஜனங்களுக்கு வேண்டிய அச்சு வேலைகளும், கலர் பிரிண்டிங்குகளும் இங்கே செய்து கொடுக்கப்படும். அன்பர்களின் ஆதரவை எதிர்பார்க்கிறோம்.

ஸ்ரீ

திருவளருங் காவேரித் திங்களிதழ் மிக்கோர்
உருவளரு மாற்று னுயரப்—பொருவிலனும்
ஆரா வமுத னடியிணைக ளேத்திடுவாம்
சீரார் திருவருளாற் சேர்ந்து.

ஓர் அன்பன்.

OFFICE OF THE ... 10 JUL 1943 MADRAS

பஞ்சமேன்?

காகிதப்பஞ்சம், கோதுமைப்பஞ்சம், அரிசிப் பஞ்சம், துணிப் பஞ்சம்—ஆக எங்கே சென்றாலும் பஞ்ச ஓலம்தான். இந்தியாவிற்குள் யுத்தம் புகவில்லை. இந்தியாவில் தான்யங்களின் உற்பத்தியோ, பஞ்சின் உற்பத்தியோ குறையவில்லை. ஆனால் பொருள்கள் அகப்படுவது மட்டும் துர்லபமாகிவிட்டது. இதற்குக் காரணம் முக்கியமாக இரண்டு. யுத்தத்தின் காரணமாக ராணுவத்திற்கு ஏராளமான காகிதம், உணவுப்பொருள்கள், நெசவுப்பொருள்கள் தேவையாய் இருக்கின்றன. இதன் காரணமாகப் பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடிய பொருள்களில் குறைவு உண்டாகிவிட்டது. இது தவிர்க்கமுடியாத காரணம். யுத்தம் என்றாலே சிலசில பொருள்களுக்குப் பஞ்சம் ஏற்படுவது சகஜம். ஆனால், இதனால்மட்டும் இந்நாட்டில் இப்பெருத்த பஞ்சம் ஏற்பட்டுவிட்டது என்று நினைப்பது தவறு.

நாட்டிற்குத் தேவையான உணவுப்பொருள்கள், துணிகள் முதலியவைகளைக் கணக்கிட்டு ராணுவத்திற்குச் செலவானதுபோக மீதி இருந்தால் அதை அயல்நாடுகளுக்கு அனுப்புவதை நாம் ஆக்ஷேபிக்கமுடியாது. ஆனால், அந்நிய ஆட்சியின் முறையில் ராணுவத்திற்கு முதல் முதலிலும் இந்தியாவுக்குச் சமீபத்திலுள்ள நேச நாடுகளுக்கு அடுத்தபடியாகவும் மீதி இருந்தால் அது உள்நாட்டிற்கு என்பதாக இந்திய கவர்ன்மெண்டார் திட்டம் வகுத்து நடத்திவருகிறார்கள். இதன் காரணமாக இந்தியமக்கள் பஞ்சத்தில் வாடிவதங்கும் பொழுதும் ஏராளமாக வெளிநாட்டிற்குத் தான்யங்களும், துணிமணிகளும் அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்நாட்டில் பஞ்சம் ஏற்படுவதற்கு மூலகாரணம் இதுதான்.

துணி விலையை எடுத்துக்கொள்ளுங்கள். இதன்விலை ஒன்றுக்கு ஆறு மடங்கு அதிகரித்திருப்பதாகக் கவர்ன்மெண்டார் கணக்கே கூறுகிறது. மில் முதலாளிகள் அமித லாபத்தை உத்தேசித்துச் செய்யும் சூழ்ச்சி இது என்று தோற்றலாம். ஆனால், காரணம் அதுவன்று மில் முதலாளிகள் அனைவரும் ஜூன் மாதம் 1ஆந்தேதி பம்பாயில்கூடி ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். அதில் பெரும்பான்மையான துணியைக் கவர்ன்மெண்டாரே ராணுவத்திற்காகவும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காகவும் எடுத்துக்கொண்டதினால்தான் நாட்டில் துணிப் பஞ்சம் ஏற்பட்டு விலை தலைகால் தெரியாமல் ஏறிவிட்டது என்று ஓர் அறிக்கை விட்டார்கள். 1941ஆம் வருஷம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் துணி சாமான்கள் கணக்கு வழக்கில்லாமல் சென்று கொண்டிருந்தன; அவற்றைத் தடை செய்யாவிட்டால் உள்நாட்டில் திண்டாட்டம் ஏற்படும் என்று மில்முதலாளிகள் வற்புறுத்தியதாகவும் அதற்குக் கவர்ன்மெண்டார் செவிசாய்க்கவில்லை என்றும் அவ்வறிக்கை கூறுகிறது. யுத்தத்திற்குமுன்பு பத்துக்கோடிகஜத்துணிகள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாவது வழக்கம். ஆனால், 1942ஆம் வருஷத்தில் நூறுகோடிகஜத் துணிகள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இதைத் தவிர, ராணுவத்திற்காகக் கவர்ன்மெண்டார் அநேக கோடிகஜத்துணிகளை வாங்கிக்கொண்டு விட்டார்கள். பொதுஜன உபயோகத்திற்காக மீதியிருந்த துணி நூற்றுஎண்பதுகோடி கஜங்கள்தான். சாதாரணமாக இந்தியாவில் ஒரு வருஷத்தில் 620 கோடி கஜங்கள் செலவாகும். இதன் காரணமாகத்தான் விலைவாசிகள் ஒன்றுக்கு 6 மடங்கு அதிகமாய் விற்கநேரிட்டது.

ஆனால் இவ்வருஷம் இந்திய மில்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் பொது ஜனங்களுக்குக் கொஞ்சம் அதிகமான துணி கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சமீபத்தில் மில் முதலாளிகளும் மத்திய சர்க்காரும் சேர்ந்து துணியின் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஒரு கமிட்டியை நிர்மாணம் செய்திருக்கிறார்கள். ஏழை ஜனங்க

ளுக்கு எளிய விலையில் கிடைக்கும்படிக்கு 'ஸ்டாண்டர்ட் கிளாத்' என்ற ஓர் வகைத் துணியைத் தயாரிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால், இந்த ஆர்ப்பாட்டங்களினால் துணிகளின் விலை குறைந்ததாகத் தெரியவில்லை. மில் முதலாளிகள் கவர்ன்மெண்டார் சொற்படி ஏழைகளின் நன்மைக்காக 150 கோடி கஜம் துணியை மலிவான விலைக்கு விற்க ஒப்புக்கொண்டுள்ளார்கள். ஆனால், இத் திட்டம் அமுலுக்கு வராததன் காரணத்தை விசாரிக்குங்கால் மில்முதலாளிகள் கவர்ன்மெண்டாரின். பேரில் அவநம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்று தெரியவருகிறது. சூயஸ் ஸுக்குக் கிழக்கிலுள்ள வெளி நாடுகளுக்கு மலிவான விலையில் துணியை வாங்கி ஏற்றுமதிசெய்வதற்காகக் கவர்ன்மெண்டார் இத்திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள் என்று எங்கும் பிரஸ்தாபம். மேலும், கர்னல் அமெரி 150 கோடிகஜம் மலிவான துணியை ஏற்றுமதி செய்வதற்காக இந்திய கவர்ன்மெண்டாரைத் தயார் செய்யும்படி கேட்டிருப்பதாக ஓர் வதந்தி உலாவுகிறது. இவற்றையெல்லாம் உத்தேசித்தால் மில் முதலாளிகள் விலையைக் குறைத்தாலும் அது நம் நாட்டுப் பொது ஜனங்களுக்குக் கிட்டுவது துர்லபம் எனத் தோன்றுகிறது. அந்நிய ஆட்சியினால் நாம் அடையும் பலன்களுள் இது ஒன்று.

அரிசி விலையை எடுத்துக்கொள்ளுங்கள். அமெரிதுரை இதன் கட்டுப்பாடு மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்று பார்லிமெண்டில் ஒப்புக்கொண்டிருக்கிறார். நாம் அவருடன் முழுமனத்துடன் பரிதாபப்படவேண்டியது தான். அவர்கள் செய்துள்ள ஏற்பாடு யாருக்கும் நன்மை அளிக்கக்கூடியதாக இல்லை. சென்னையில் மக்கள்படும் அவதியைப் பார்த்தால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு இவ்விஷயங்களையெல்லாம் சமாளிக்க அறிவு உண்டா என்ற சந்தேகம் எழுகிறது. நாம் சந்தேகிப்பது என்னவென்றால் கட்டுப்பாடு, கட்டுப்பாடு என்று சொல்லிப் பெரும்பாலான உணவுப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிவிடுகின்றன- ஜில்லாவுக்கு ஜில்லா கட்டுப்பாடு, மாகாணத்திற்கு மாகாணம் கட்டுப்பாடு; இவையெல்லாம் எதற்கு என்பது தான் நமக்கு விளங்கவில்லை. இவைகளினால் உள்நாட்டுச் செலவை (Consumption) எவ்வளவு சிக்கனமாகச் செய்ய முடியுமோ அவ்வளவு செய்து வெளிநாடுகளுக்குத் தானியங்களை ஏற்றுமதி செய்யப் படுகிறதோ என்ற சந்தேகம் எழுகிறது. பகிரங்கமாக ஏன் கவர்ன்மெண்டார் வெளிநாட்டுக்கு இவ்வளவு அரிசி ஏற்றுமதியாகிறது என்ற புள்ளி விவரங்களைக் கொடுக்கக்கூடாது? ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்கு உணவுப் பொருள்கள் செல்லக்கூடாது என்று தடை செய்வது என்ன காரணம்? எதற்காக மக்களிடையே காரணமின்றிப் பஞ்ச உணர்ச்சியைக் கவர்ன்மெண்டார் உண்டுபண்ணவேண்டும்? சில அர்த்தமற்ற நிபந்தனைகளை நீக்கினால் நாட்டில் இவ்வளவு வறுமை தாண்டவமாடாது. கவர்ன்மெண்டார் தங்கள் ராணுவத்தேவைக்காகவும் வெளிநாட்டு ஏற்றுமதிக்காகவும் மலிவாக வாங்கவேண்டுமென்ற காரணத்தினால் வியவசாயிகளைக் கஷ்டப்படுத்தி நாட்டின் மூலாதாரமான வியவசாயத்தொழிலைச் சீர்குலையச் செய்யவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் சிப்பந்திகளுக்குக் கடிகாரம் தேவை

சொல்ப பணச் செலவில் நம்பத்தகுந்த கடிகாரம் வேண்டுமென விரும்பும் எல்லாத் தொழிலாளிகளும் இந்த **கீ-லெஸ் லீவர் வாட்ச்சை** வாங்கலாம். இது உறுதியான நிகரற்ற மணிகாட்டும் கருவி. விலை ரூ 28 தான்.

'அல்கா' சாமான்களால் சரியான வேலைப்பாடில்லாமல் நம்பத்தகாத அல்ப விலைக்கு விற்கப்படும் அனுமதேய வாட்சுக்களை வாங்குவதைவிட ரூ 28 கொடுத்து காரண்டியுள்ள **"வெஸ்ட் எண்டு வாட்ச் கம்பெனி"** பெயர் பூண்ட வாட்சுகளை வாங்குவது நலம்.

செகண்டஸ் பாகட்

15'' சயிஸ் நிக்கல் கேஸ் சாதா டயல்' ரோமன் அல்லது அராபிக் ரூ 28

ரேடியம் எண்களும் முட்களும் ரூ 3 அதிகம்

வெஸ்ட் எண்டு வாட்ச் கம்பெனி

பம்பாய் : : கல்கத்தா

WEST END WATCH Co

BOMBAY CALCUTTA

அம்மாஞ்சியின்

மே மாதம் 30ஆம் தேதியன்று காலை சுமார் 10 மணி இருக்கும். அன்று ஞாயிற்றுக்கிழமை. அம்மாஞ்சி "ஹிந்து" பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தான். அவனைக் காண்பதற்கு எங்கள் பந்துக்களில் ஒருவரான பிச்சுவையர் என்பவர் வந்துசேர்ந்தார். அவர்கள் இருவருக்கும் நடந்த சம்பாஷணையை அப்படியே எழுதிவிடுகிறேன். பின்வரும் குறிப்புக்களில் அ—என்றால் அம்மாஞ்சி, பி—என்றால் பிச்சு மாமா.

பி—(பத்திரிகையைப் படித்துக்கொண்டே) பார்த்தாயா அம்மாஞ்சி, நம்முடைய சாம்பமூர்த்தி மதுரைக்குப்போய், தியாகையர் விஷயமாக நிரம்பவும் ஆராய்ச்சி செய்திருப்பதாகத் தெரிகிறதே!

அ—அடே, பிச்சு! பிச்சு! பேப்பரில் எழுதிவிட்டால் பெரிய வேலை செய்ததுபோல் சொல்லுகிறாயே! பட்டணத்தில் எத்தனை பெரிய மனுஷாள் அதே ஜோலியில் இருக்கிறார்கள், அவாளுடைய பெயர்களை மாத்திரம் குறிப்பிடப்படாது; நன்றாய் இருக்காது; ஆனால், அவர்களைப்பற்றி எல்லாருக்கும் தெரியும். 'அகப்பட்டதடா பிராமணார்த்தம், மூட்டையை இறக்கு" என்பதுபோல், பேப்பருக்கு எழுதுவதென்றால் எப்பொழுதும் தயாராய் இருப்பவர்கள் எத்தனையோ பேர்!

பி—இந்தாப்பா, சாம்பமூர்த்தி என்னோடே படித்தவன். அவனைப்பற்றி நீ இந்த மாதிரி சொல்லுவது நன்றாகவே இல்லை.

அ—பிச்சு என்கிற பேர் உனக்குத்தான் சரி. பேப்பரில் எழுதும் சம்பிரதாயத்தைப் பற்றி நான் சொன்னேனே தவிர சாம்பமூர்த்தி அய்யரைப்பற்றி எனக்கு ஏன் குறை? ஆனாலும் பேப்பரில்போட்டுப் பிரமாதப்படுத்தும்படியாக அவர் என்ன செய்துவிட்டார்? தமிழ் இசை இயக்கத்தைப்பற்றிப் பேசுவதற்காகக் கும்பகோணம் போனார். அங்கிருந்து எட்டினாற்போல் இருக்கிறதே என்று மதுரை போனார். சௌராஷ்டிர சபைக்காரரிடம் போய், புதிதாக வெளிவந்து இருக்கும் நோட்டுப் புஸ்தகங்களைப் பார்த்தார்! அடுக்கடுக்காக எண்ணினார்! ஐம்பதுக்கு மேலிருப்பதாகத் தெரிந்துகொண்டார்!

"ஹிகின்பாதம்" கம்பெனியில் பெரிய மனுஷாள் புஸ்தகங்களின் முதல் ஏட்டைப் பார்ப்பதுபோல் சாம்பமூர்த்தியும் நோட்டுக்களைப் புரட்டிப் பார்த்தார். புதிய உருப்படிகளின் பெயர்களை எழுதிக்கொண்டார். சௌராஷ்டிர சபை மெம்பர்களைத் தட்டிக்கொடுத்து, "கங்கிராசுலேட்" செய்தார். "ஹிந்து" பேப்பருக்கு ஒரு எழுத்து எழுதி வீசினார். பிறகு ரயில் ஏறி வந்துவிட்டார்.

பி—ஆனால் உன் அபிப்பிராயம் என்ன? கர்னாடக சங்கீதத்திற்காக அவர் உழைத்தது போதாது என்கிறாயா?

அ—சிவ! சிவ!! அப்படி எல்லாம் சொல்லுவேனா பிச்சு? தற்காலத்தில் கர்னாடக சங்கீதத்திற்காக "நான் தொண்டுசெய்கிறேன், இன்னும் செய்யக் காத்துக்கெண்டிருக்கிறேன்" என்பதாக எவ்வளவோ பெரியமனுஷாள் பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருக்கிறார்கள்! அவர்கள் எல்லாரையும்விட சாம்பமூர்த்தியை ஒரு கை தூக்கலாகவேதான் மெச்சிக்கொள்ளவேண்டும். அவர் என்ன, ஒரு பிரமாத வேலை பண்ணி இருக்கிறாரே? அதை நீ கவனித்தாயா? தியாகையர்வாள் ஜாதகத்தையே அவர் கணித்துவிட்டார். 'கலி வருஷம் 4868 ஆகிய சர்வஜித்து, சித்திரை மாதம் 25ஆம் தேதி, வைசாக சுத்த ஸப்தமி, திங்கட்கிழமை புஷ்ய நட்சத்திரம் கடக லக்னம் உதயாதி 15·5 நாழிகைக்குச் சுப ஜனனம்' என்பதாக எழுதியிருக்கிறார்! உனக்கும், எனக்கும் இனி என்ன குறைச்சல். ராசி சக்கரம் போடவேண்டியதுதான். ஜாதகத்தைக் கணித்துக்கொண்டு, ஜோஸ்யரிடம் போகவேண்டியதுதான்.

பிச்சு—என்னப்பா அம்மாஞ்சி, இந்த விஷயம் உனக்குப் பரிகாசமாக இருக்கிறதோ?

அ—பரிகாசமா? சாம்பமூர்த்தி அய்யர் எழுதி இருப்பதையே பார்! 'மதுரையில் இருக்கும் டாக்குமெண்டுகளில் முக்கியமானது என்னவென்றால் தியாகய்யருடைய பிறந்த தினத்தைப்பற்றிய குறிப்பு' என்று அவர் சொல்லுகிறார்! நானும் இதைப் படித்துப் படித்து ஆலோசிக்கிறேன். இது தானா முக்கியமான டாக்குமெண்டு என்று கேட்கிறேன்? எனக்கு விஸ்தாரமாக விளங்கவில்லை. "மார்ஸ்டன்" என்பவனும், "வின்ஸன்ட் ஸ்மித்" என்பவனும் இந்து தேச சரித்திரத்தைப்பற்றி எழுதியதைப்போலவே இருக்கிறது. ஆனால் சாம்பமூர்த்தி அய்யரைப் பழித்துப் பயன் என்ன? தமிழ் நாட்டில் அனேக பிரபுக்களும் அதி மேதாவிகளான உத்தியோகஸ்தர்களும்

அபிப்பிராயங்கள்

கூட ஜாதகப் பரீட்சையில் ஈடுபட்டிருக்கும் போது, தியாகையர்வாளுடைய ஜாதகத்தைச் சரியாகக் கணிக்கக்கூடிய வசதி இப்பொழுது ஏற்பட்டுவிட்டது என்று அறிந்து நம்மை சந்தோஷப்படும்படி சொல்வதும் நியாயம் தான் போலும்! புதிய கீர்த்தனங்களைப் பாடம் செய்து பிரசாரப்படுத்தவேண்டும் என்பதாக ஒருவரேனும் இன்னும் முயற்சி செய்வதாகத் தெரியவில்லை.

பி—இதற்காக என்ன செய்யவேண்டும் என்பது உன் உத்தேசம்?

"அ—உலகத்தோடு ஒத்து வாழ்!" ஸ்ரீ தியாகராஜ ஆராதனைச் சபையார்கள் என்ன செய்கிறார்களோ அதுதான் நியாயம் எனப்படும்! தியாகய்யர்வாளுடைய ஜாதகம், உருவப்படம், அவர் உடுத்த உடைகள், அணிந்த பாதரக்ஷை, எழுதிய நோட்டுக்கள், இவைகளைப் பத்திரப்படுத்தி, படம் பிடித்து, பேப்பரில் எழுதி, மீட்டிங்குகள் கூடி, தடபுடலாகப் பேசி, மாலை போட்டும் போட்டுக்கொண்டும், ஊர்வலம் சென்று, சமாராதனைகள் செய்து, சாப்பிட்டு, அகில இந்திய ரேடியோ மூலமாக ஒலிபரப்பி, ஆய்ந்து ஓய்ந்து, பட்டணம் திரும்பிவந்து, படுத்து உறங்குவது!

இவ்வளவுதான் நடக்கப் போகிறது—அய்யர்வாளுடைய கீர்த்தனங்கள், அவருடைய சம்பிரதாயம் இவையெல்லாம் போலி இசை வெள்ளத்தில் அடிபட்டுப் போம்—நோட்டுப் புஸ்தகங்கள் வெளிவந்ததைப்பற்றிய படாடோபம்தான் மிஞ்சும்.

பி—என்ன அம்மாஞ்சி! எப்போது பார்த்தாலும் 'அஸ்து' 'அஸ்து' என்றே சொல்லிக் கொண்டிருக்கிறாயே?

அ—(வெகு கோபத்துடன்)—டே பிச்சு—எழுந்து வெளியே போடா! காலங்கார்த்தாலே வந்து சண்டைக்குக் கால் புராண்டறையே! யாரோ என்னமோ பேப்பரில் எழுதிவிட்டாராம், இங்கே நீ வந்து முட்டையிட்ட கோழிரக்கையைத் தட்டிண்டு க்ளக் க்ளக் ளக்—கொ—கொ—கோ'ன்னு கத்துவதுபோல் பெனாத்தரையே -முட்டாள்-எழுந்து போடா- அம்பட்டனைக் கூப்பிட்டு உன் மூஞ்சியிலே இருக்கிற எட்டுநாள் தாடியை வழிச்சுண்டு வாடா—சர்வ விகாரதாரணா!

பிச்சு மாமா கிரகணமானார்.

"ராமையா"

ஜூன் மாதம் மூன்றாம் தேதியன்று திருச்சியிலிருந்து தஞ்சாவூர் லக்ஷ்மிநாராயணரும், மதராஸிலிருந்து டொக்கா ஸ்ரீ ராமமூர்த்தியும் பாடினார்கள். லக்ஷ்மிநாராயணருடைய கச்சேரியில் விசேஷம் என்னவென்று கேளுங்கள்; —காம்போதி ராகம் பாடிவிட்டு, ஒரு பெரிய உருப்படி எடுத்து வீசப்போகிறார் என்று எண்ணியிருக்கையில் "இவன் யாரோ அறியேனே சகியே" என்ற பரத நாட்டியப் பதத்தைப் பாடித்தள்ளினார். அம்மாஞ்சி சொல்லுகிறான்—"நீவேணா பாரு, ராமய்யா, இன்னமே; வித்வான்களெல்லாம், நலங்குப் பாட்டு, லாலிப் பாட்டு, ஊஞ்சல் பாட்டு எல்லாம்தான் பாடப் போகிறார்கள். தமிழ்ப் பாட்டும் பாட வேண்டியிருக்கிறது. தமிழில் கீர்த்தனைகளாகப் பாடாந்தரம் இல்லை. சரி-சுறண்டவேண்டியதுதான். இப்போது பரதநாட்டியப் பதத்

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற குழந்தைகளின்
டானிக்

தில் வந்து இருக்கிறது. அடியே, கிளியே, சகியே, கண்ணே, முத்தே, என்று நல்ல கரடு முரடான புருஷாள் எல்லாரும் பாட ஆரம்பித்தால், ஸ்திரீகள் எல்லாரும், பயலே, தடியா, உலக்கை, குண்டு என்றுதான் ஸாஹித்யங்களில் கல்பனை செய்யவேண்டும். தலை கீழ்ப் பாடம்தானே இப்போதைய ரீதி. இன்னும் கொஞ்ச நாளிலே பெரிய வித்வான்கள் எல்லாரும் "நலங்கிட நீர் வாருமையா சுந்தர குமாரா" என்றும்,

"செட்டியாரே, செட்டியாரே,
செம்பவழச் செட்டியாரே,
என் ஆர்பவழச் செட்டியாரே,
எங்கள் அம்மானைக் கண்டீரோ?"

"கண்டேன் கடைத்தெருவில்
கல்பூரங் கொள்ளச்சே;
பார்த்தேன் கடைத்தெருவில்
பச்சவடம் கொள்ளச்சே;
பாவாடை கொள்ளலாம்;
பட்டாடை கொள்ளலாம்;
பச்சைப் பாலகனைக்கொள்ளக்
கிடைக்குமோ செட்டியாரே"

என்று நீலாம்பரியில் தாலாட்டுப் பாட்டும், நட்ட நடுக்கச்சேரியில் பாடித்தள்ளுவார்கள். நீயும் நானும் இஞ்சிதின்ன குரங்குமாதிரி இதைக் கேட்டுக்கொண்டு இருக்கவேண்டியது தான்"

டொக்கா சீனமூர்த்தி பந்துலு அன்று "எந்தரோ மஹானுபாவுலு" பாடினார்! என்ன தமாஷ்—ஸ்வரங்களையெல்லாம் விட்டுவிட்டு ஸாஹித்யங்கள் மாத்திரம் பாடினார்! பிறகு தாமாக ஸ்வரம் அடுக்கினார்! பஞ்சரத்தினக் கீர்த்தனைக்கு ஸ்வரம் பாடாமல் ஸாஹித்யம் மாத்திரம் பாடுவது, பூணூல் இல்லாமல் பரிசேஷணம் பண்ணுவது போலேதான். இன்னொன்று கவனித்தீர்களா, டொக்கா சீனு மாமா பண்ணின வேடிக்கையை

"எந்தரோ-வோ-வோ-ஓ"—
"எந்தரோ-ஓ-ஓ-வோ"—

என்று ஒவ்வொரு சரணத்தையும், (தயிர்க் காரி ஓய், தயிரூ—வோ" என்று நிறுத்துவது போல்) நிறுத்திப் பாடினார். அம்மாஞ்சி இதைக் கேட்டு, அன்று இரவு முழுதும், "என்ன பாட்டு, ஓ-வோ-ஓ", "என்ன ரேடியோ— வோ-ஓ-வோ", என்று சொல்லிக் கொண்டேயிருந்தான்.

சமீபமாக ஸ்ரீ ம. ஷ. சுப்பலக்ஷ்மி அம்மாள் பாடியதாகக் கேள்வி. அம்மாஞ்சியும் நானும் இவருடைய கச்சேரியைக் கேட்பதில்லை என்று நிர்ணயத்திருக்கிறோம். கேட்டால் எங்களிருவருக்கும் உள்ள அன்னியோன்யம் மாறி, மனஸ்தாபம் ஏற்படுகிறது.

எல்லோருடைய அபிமானமும், ஆதரவும்,
அன்பும் நிறைந்த

R. சுந்தரேசய்யர் & ஸன்ஸ்

பித்தளை, செம்பு, வெண்கலப் பாத்திரம்

இந்தக் கடையிலேயே தங்கள் தேவைக்கு
வேண்டியதை வாங்கி ஆதரிக்க
வேண்டுகிறோம்

Prop.—R. சுந்தரேசய்யர்

பொற்றாமரை வடக்கு :: கும்பகோணம்.



"புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது.

'ரிஷ்ய சிருங்கர்' தமிழ் படத்தில் பிரதம ஸ்திரீபாகம் வகித்தவரும், போப்பாண்டவரால் புகழப்பட்டவரும், இனிய சங்கீத சம்பத்துடையவருமான திறமைவாய்ந்த தென்னிந்திய நடிகை ஸ்ரீமதி வஸுந்தராதேவி சொல்லுகிறார்:

"தனிப்பட்ட நறுமணத்திற்காக நான் எப்பொழுதும் நரஸூஸ் காபி, டீயையே உபயோகிக்கிறேன்.

Vasundhara Devi.

நரஸூஸ் காபி

விளம்பர யுகம்

இந்தக் காலத்தைக் கலியுகம் என்று சொல்லுவதைவிட விளம்பரயுகம் என்று சொல்லுவதே முற்றிலும் பொருந்தும்! மனிதனுக்கு உணவு எவ்வளவு முக்கியமோ அதைவிட விளம்பரம் வாழ்வில் அவசியமாகிவிட்டது. ஓர் மனிதன் உயிருடன்தான் இருக்கிறான் என்பதற்குக் கூட விளம்பரம் அவசியம்.

விளம்பரம் பல ரகம். பத்திரிகையில் விளம்பரம் செய்வது சர்வ சாதாரண விஷயம். குழந்தை பிறந்தால் விளம்பரம்-"மிஸ்டர் காலகண்ட முதலியார் மனைவி மாயாவதி அம்மாளுக்கு......ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது" என்ற விளம்பரத்தைக் கண்ணுறும் ஆயிரக்கணக்கான வாசகர்களில் சிலராவது மாயாவதி அம்மாளைப்பற்றிச் சிந்திப்பார்கள். குழந்தையைப் பெற்ற தம்பதிகள் விளம்பரத்தைக் கண்டவுடன் உச்சி குளிர்ந்துபோய்விடுகிறார்கள். திரும்பத் திரும்ப பற்பலமுறை விளம்பரத்தை வாசிக்கிறார்கள். பலருக்குக் காட்டிப் பெருமையடைகிறார்கள். குழந்தை பிறந்ததைவிட விளம்பரம் வெளிவந்ததே அதிக மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் அளிக்கின்றது.

அம்மாதிரியே கலியாணமும். தம்பதிகளின் போட்டோ காதலை இன்னும் அதிகரிக்கச் செய்கிறது! வாசகர்கள் பெண்ணின் அழகைப் பார்த்து மகிழ்கிறார்கள். பொறாமைப் படுவோருமுண்டு. தம்பதிகளில் ஜோடி சரியாக, வாசகரது மனதிற்குத் திருப்தியளிக்காவிடில் "இந்த அழகான பெண்ணுக்கு இந்தக் கோட்டான்தானா வாய்க்கணும்" என்று தங்களது ஆத்திரத்தை வெளியிடுவார்கள்.

இறத்தல்; ஒரு மனிதன் இறந்துவிட்ட சமாசாரம் அவசியம் பத்திரிகையில் வெளிவந்தாகவேண்டும்! எப்பொழுது ஆசாமி வாயைப் பிளந்து போகப்போகிறான் என்று ஏங்கிக்கிடப்பவர்களை நாம் அறிவோம். இறப்பு விளம்பரத்தைப் படித்தால் வாசகர்களுக்கும் சிலசமயம் அழுகை வரும். "அவரது ஆத்மா சாந்தியடையக் கடவுளைப் பிரார்த்திக்கிறோம்" என்று சொல்லிப் பல்லவி அநுபல்லவி சகிதம் ஒரு பாட்டுமிருக்கும்!

பத்திரிகை விளம்பரங்களில் இன்னும் பல ரகமுண்டு. "ராகுகால முதலியார்" இன்று காலை ராமேச்வரம் புறப்பட்டார், "சென்னியப்ப நாயுடு சென்னை வந்து சேர்ந்தார்," "போலீஸ் இன்ஸ்பெக்டர் புளுகுமலைப் பிள்ளைக்குப் பிரிவு உபசாரம் நடத்தப்பட்டது." "சிவராமய்யருக்கு இரண்டு நாளாக ஜல தோஷம்" இவைபோன்ற தலை போகிற விஷயங்கள்.

காசை எறிந்தால் பத்திரிகைக்காரர்கள் விளம்பரம் செய்யத் தயார்!

பத்திரிகை விளம்பரம் எல்லாவற்றிற்கும் பயனளிக்காது, பத்திரிகையைவிட வதந்தி விளம்பரம் வெகுதூரம் பரவும்! " ஏன் சார் அவன் கொஞ்சம் 'அல்கா' பேர்வழி அல்லவா" என்று ஒருவன் சொல்லிவைப்பான். இந்த மாதிரி வதந்திகள் காட்டுத்தீபோன்று பரவிவிடும். ஸ்திரீகளின் பதிவிரதா தருமத்தைக் குறித்து அபவாதம் பேசும் அயோக்கியர்கள் வதந்தி மார்க்கத்தையே வழிபடுவார்கள்.

வியாபாரத்துக்கு விளம்பரம் அத்யாவசியம். "சரக்கு மிடுக்கோ செட்டி மிடுக்கோ" என்ற பழமொழியைத் தமிழர்கள் நன்கு அறிவார்கள். காலணா மதிப்புள்ள சாமானைக் கால் ரூபாய்க்கு விற்க முடிகிறதென்றால் அதன் ரகசியம் விளம்பரம். வெள்ளைக்காரர்கள் விளம்பரம் செய்வதில் நிபுணர்கள். வியாபாரமே அவர்களது ஜீவநாடி. விளம்பர விஷயமாய் மேல் நாடுகளில் கோடிக் கணக்கில் பணம் செலவு செய்யப்படுகின்றது. விளம்பரத்தை ஒரு அருங்கலையாகக் கொண்டுள்ளார்கள். விளம்பரக் கலையில் தேர்ச்சி பெறக் கலாசாலைகளும் உள்ளன. மேல்நாட்டு வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிக்கிறார்களேயென்று நம்நாட்டு வியாபாரிகள் பொறாமைப்படுவதில் பிரயோஜனமில்லை. விளம்பரத்தின் மகத்துவத்தை நம்நாட்டு வியாபாரிகள் இன்னும் சரிவர உணரவில்லை.

மனிதர்களுக்கு மட்டும் விளம்பரம் அவசியமென்று எண்ணவேண்டாம். மிருகங்களுக்கும் புகழை விளம்பரம் அளிக்கின்றது. மிரு

(16-ம் பக்கம் பார்க்க.)

16

விதியின் மயக்கமா மதியின் மயக்கமா?

டி. சி. துரை

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் ஏறினேன். என் பெட்டி படுக்கைகளை வாங்குவதற்காகத் திரும்பி, போர்ட்டர் பக்கம் கையை நீட்டினேன். அப்பொழுது 'துரைக்கண்ணு! துரைக்கண்ணு!' என்று அழைக்கும் ஒரு ஸ்திரீயின் குரல் கேட்டது. திரும்பிப்பார்த்தேன். அவள் தனது சிறிய மைந்தனை அவ்விதம் கூப்பிட்டு அழைத்துச் சென்ருள்.

வண்டியும் புறப்பட்டது. இரவு எட்டுமணி. வண்டி தனிக்கம்பார்ட்மெண்ட். இருநாடோடிகளேகூட உட்கார்ந்திருந்தனர். பேச்சுத் துணைக்கு ஒருவருமில்லாததினுல் படுக்கையை விரித்துப் படுத்தேன். ஜிலுஜிலுவென்ற காற்றும் ஓடும் வண்டியின் கடகட சப்தமும் தவிர மற்றபடி நிசப்தமும் ஓர் தனிப்பட்ட உணர்ச்சியை உண்டாக்கியது.

'துரைக்கண்ணு!' என்ற சப்தம் என் ஹ்ருதய வீணையை மீட்டியது. எனது பால்ய நணபனது வாழ்க்கை, என் மனத்திரையில் ஓடத்தொடங்கிற்று.

துரைக்கண்ணு என்ருல் துரைக்கண்ணுதான் அவன் தந்தை இட்டபெயர் ராஜகோபாலன். அருமைக்குழந்தையாதலால் "ராஜா" என்று அழைப்பார். பள்ளிக்கூட வாசத்தில் அவனது தோற்றத்தை மெச்சி நாங்கள் இட்ட பெயர் 'துரைக்கண்ணு'.

பள்ளியில் படிக்கும்பொழுது குறுகுறுவென்ற கண்களும் கறுத்து அடர்ந்து சுருண்ட கேசமும், கலீர்கலீர் என்ற சிரிப்பும், உபாத்தியாயர் முதல் மாணவர் வரை யாவர் உள்ளத்தையும் வசீகரித்துவிட்டன. பூர்வ ஜன்ம வாஸனு பலத்தால், அவனுக்கு நல்ல ஸங்கீத ஞானமிருந்தது. அதனுல் அவன் தந்தை அவனுக்குப் படிக்கும்பொழுதே ஸங்கீதமும் கற்பித்து வந்தார். நல்ல ஸுகமான சாரீரம். தனியான ஒரு ஜிலுஜிலுப்பு. அதனுல் எங்களுக்கு அவன் பாடக்கேட்பதில் மிகவும் ஆவலும் ஆனந்தமும், உண்டு. எங்கள்வகுப்பு உபாத்தியாயர் ஸேதுராமய்யர், தினம் அவனைக் கடவுள் வணக்கம் பாடச்சொல்லுவார். அவ்வளவுதான், எங்களுடைய உத்சாக நிலையை எட்டிப்பிடிக்க முடியாது. எங்களைவிட மாணவிகளின் முகத்தில் அதிக குதூகலத்தைக் காணலாம். அப்பொழுது பார்க்கவேண்டுமே அவர்கள் பண்ணிக்கொள்ளும் ஸ்டைலை. இப்படியாகப் பள்ளியில் எப்பொழுதும் அமர்க்களம்தான் துரைக்கண்ணின் செய்கைகளினுல்.

இந்தத் திருவிளையாடல்களில் ஈடுபட்ட துரைக்கண்ணு கூடியசீக்கிரம் தன் பள்ளிக்கூடத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும்படியாயிற்று என்பதைச் சொல்லவேண்டுவதில்லை. தகப்பனுர் படிப்பில் கவனம் செலுத்தும்படி எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. அதனுல், ஓர் நல்ல சங்கீத வித்வானிடத்தில் சிக்ஷைக்கு ஏற்பாடு செய்தார். தெய்வ பலத்தால் அதில் தயாராஞன். பதினைந்து வயதிலேயே கச்சேரி செய்யும் நிலைமைக்கு வந்துவிட்டான். சிறு பையன் என்ற அன்பினுல் அநேகர் அவனை அநேக கச்சேரிகள் செய்ய அனுமதித்தார்கள். கொஞ்ச நாட்களில் நல்ல பெயரும் புகழும் கிட்டின. அத்துடன் யௌவனத்தின் சேஷ்டாம்சங்களும் முரட்டுப்பிடிவாத குணமும் வளர்ந்து வரலாயின.

துரைக்கண்ணுவின் ரூபமானது உற்றுக் கவனித்தால் சாமுத்திரிகா லக்ஷணங்களுடன் கூடிய "அழகு" என்று சொல்லமுடியாது. அவனுடைய முகத்தின் வசீகரமும் கபடமற்ற பேச்சும், சிரிப்பும் பார்ப்பவர்களுக்கு ஓர்வித கவர்ச்சியை உண்டுபண்ணும்சக்திவாய்ந்தவை. "பார்யா ரூபவதிசத்ரு" என்ருர் ஒரு பெரியார். ஆனுல் துரைக்கண்ணு விஷயத்தில், அவன் அழகு சில விஷயத்தில் நன்மைகளையும், சில விஷயத்தில் அவனது வாழ்க்கையையே பாதிக்கக்கூடிய தீமைகளும் ஏற்பட ஹேதுவாயிற்று.

பால்ய, கௌமார, யௌனமாகிய மூன்று பருவங்களிலும், அவனது தோற்றமும் குணமும் மற்றவரிடம், முக்யமாக ஸ்திரீகளிடையே பலவிதக் கிளர்ச்சியை உண்டுபண்ணக்கூடியவையாக இருந்தன. பால்ய வயதில் அவனது விளையாட்டையும்சிரிப்பையும்கண்ட ஸ்திரீகள் "இக்குழந்தைக்குத் தாய்" என்று சொல்லிக் கொள்ளும் பாக்கியம் நமக்கு இல்லையே என்று ஏங்குவார்கள். விளையாட்டிலும் மற்றக் குழந்தைகள் இவனிடமே சலுகை காட்டும்.

கௌமார பருவம் நடந்து வரும் நாட்களில் சமவயதுள்ள பெண்களிடை அவனது மதிப்பு உயரலாயிற்று. ஓர் உதாரணம். எங்கள் ஊரில் குடிக்கும் ஜலம் கொண்டுவருவதற்கு கோவிலுக்குள் நுழைந்துதான் குளத்திற்குச் செல்லவேண்டும். இப்பெண்கள் ஜலம்

கொண்டுவரும்பொழுது துரைக்கண்ணு படியில் நின்றுகொண்டு, பின்னலைப் பிடித்திழுப்பதும், முதுகில் தட்டுவதும், தலையில் குட்டுவதுமாகச் சேஷ்டைகள் செய்வான். அப்பெண்கள் அவற்றைத் தடுக்காமல், தங்களது பாக்யமென நினைத்துச் சிரித்துக்கொண்டே செல்லுவார்கள். அதுவே அவனது மனதில் பெண்களிடம் பழகும் மரியாதையை அறியாதபடி செய்துவிட்டது. அப்பொழுதே அப்பெண்கள் பெரியவர்களிடம் சொல்லி இவனைக் கண்டிக்க ஏற்பாடு செய்திருந்தால் அவனுக்கு ஓர் எச்சரிக்கையாக இருந்திருக்கும். நான் அவ்விஷயத்தில் எவ்வளவு சொல்லியும் அவன் காதில் ஏறவில்லை. மதனகாம ராஜனும், மந்திரியும்போல், சினேகபந்தமானது, அவனைப் பிரியாமலே சமயங்களில் ஏற்படும் தப்புக்களை மறைத்துவிடும்படி செய்தது.

யௌவனத்தை எட்டிப்பார்க்கும் வயதில் அவன் தோற்றம், இன்னும் வசீகரத்தையடைந்தது. அத்துடன், துர்ப்பழக்கங்களும் வளரலாயின. சிகரெட், பாட்டில், இவைகளை அனாயாசமாகக் கையாளத் தொடங்கினான். கன்னிகைகளான எந்தப் பெண்ணும் இவனையடைய எவ்விதத் தியாகத்தையும் செய்யச் சித்தமாக இருந்தார்கள். இதில் அவன் கைக்குள் சிக்கிய பெண்கள் எவ்வளவோ பேர்? இவனது பிரயத்தனமில்லாத வகையில், "விளக்கில் விழும் விட்டில் என" பெண்கள் இவனிடம் கள்ளப் பழக்கம் ஏற்படுத்திக்கொள்ளலாயினர். நல்லகாலமாக, இவன் ஸ்பர்சித்த பெண்கள் நல்லவரனுக்கே வாழ்க்கைப்படும்படியான பாக்கியத்தையடைந்தார்கள். அவ்விஷயங்களிலும், அதிர்ஷ்டசாலியாகவே விளங்கினான் துரைக்கண்ணு.

யௌவன தசையில் கணவனுடன் குடும்பம் நடத்தும் பெண்கள்கூட, தாங்கள் இவனைக் கணவனாக அடையவில்லையே என்று பெருமூச்சுவிடும் நிலைமையிலிருப்பார்கள். சிலர் நிறையை இழக்கவும் துணிந்தார்கள் என்றே சொல்லலாம்.

முப்பது நாற்பது வயதைக் கடந்த ஸ்த்ரீகள் இப்படிப்பட்ட ரூப ஸௌந்தர்யமுள்ள பிள்ளை இல்லையே, இவனைப் பெற்றவள் பாக்கியசாலியே என்று எண்ணுவார்கள். எவ்வளவோ பெயர்கள் வாய்விட்டுச் சொன்னதையும் கேட்டிருக்கிறேன். அவனது பாட்டைப்பற்றிப் புகழ்ச்சியான விஷயங்களைக் கேட்கும்பொழுது தங்கள் குழந்தைகளுக்கு ஏற்பட்ட புகழ்ச்சியென மகிழ்வார்கள். எங்கள் ஊர் ஸ்த்ரீகளின் மத்தியில் அவனை அடிக்கடி காணலாம்; கிருஷ்ணனைச் சுற்றும் கோபியரென, அவனைச் சுற்றுவார்கள்; எப்படியிருந்து என்ன? சேறும், செந்தாமரையும் போலாயின, அவனது குணமும் ரூபமும்.

இவனது கீர்த்தி இவ்விதம் பரவி வரும் நாளில் பக்கத்து ஊரில் ஒரு கல்யாணத்தில் கச்சேரி செய்வதற்காகப் போயிருந்தோம். கச்சேரி ஆரம்பமாகிக் கொஞ்சம் நேரமாயிற்று. வர்ணமும், சில கீர்த்தனைகளும் வெகு இன்பமாகப் பாடினான். சபையில் ஒரே கரகோஷமாக இருந்தது. "வாதாபிகணபதிம்" என்ற கீர்த்தனையைப் பாடி ஸ்வரம் பாடும்பொழுது சபையோர் அபரிமிதமாகக் கரகோஷம் செய்தார்கள். இப்படிப் பாடிக்கொண்டிருந்தவன் திடீரெனப்பாட்டை நிறுத்திப் பிரமித்து இருந்தான். நான் என்னவென்று அறிய அவன் நோக்கிய திசையைப் பார்க்க, அங்கே திரிலோக ஸுந்தரியென வியக்கத்தக்க ஒரு யுவதி இவனைத் தன் வேல்விழியின் கூரம்புகளாலும், புன்னகையாலும் தன்வயப்படுத்திக்கொண்டிருந்தாள்.

பிறகு பாட்டுக்கள் சில்லறை உருப்படிகளிலும் கவனக்குறைவு உள்ளவையாயின. கச்சேரியை ஒருவிதமாகக் கஷ்டப்பட்டு முடித்துவிட்டு நாங்கள் இறங்கியுள்ள விடுதிக்குச் சென்றோம். அச்சமயம் அப்பெண்மணி ஏதோ முக்யமான காரியம் உள்ளவள்போல் நாங்களிருக்குமிடம் வந்து ஒரு அசைப்பும், புன்னகையும் செய்த வண்ணம் சென்றாள். அப்புன்னகைப் பார்வையில் விழுந்த துரைக்கண்ணு, மதுவுண்ட வண்டின் நிலைமையை அடைந்தான். அவ்வளவுதான் அர்ச்சுனனுடன் சென்ற கிருஷ்ணனது நிலைபோலாகிவிட்டது எனது நிலைமை. என்ன செய்வது. நானே தூது சென்று அப்பெண்ணைக் கேட்கத் தைரியமில்லாமல் மற்றொரு பெண்ணை (அவள் தோழியை)ச் சிநேகம் பிடித்து விஷயத்தை விளக்கித் துரைக்கண்ணுவை ஆகாயத்தில்வைத்து, விஷயத்தை அறிந்தேன்.

அப்பெண் கன்னிகையென்றும், தகப்பனார் இல்லையென்றும், அவள் தாயாருக்கு ஒருபெண்ணும், ஒரு பிள்ளையும்தான் என்றும தெரியலானேன். அச்சமயத்தில் அப்பெண்ணே அவ்விடம் வந்தாள். என்னிடம் "பாடகருக்கு விவாகமாய் விட்டதா? அவர் உங்களுக்கு என்ன உறவினர்?" என்று கேட்டாள்.

பழம் நழுவிப் பாலில் விழுந்ததென, "கல்யாணம் ஆகவில்லை; நீ இஷ்டப்பட்டால் நான் எப்படியாவது உங்கள் திருமணத்தை முடித்து வைக்கிறேன்" என்று சொன்னேன். அதற்கு அவன் "மணந்தால் இவரையே மணப்பேன். இல்லையேல் கன்னிகையாகவே காலம் கழிப்பேன்" என்றாள்.

அன்று இரவு பெண்களின் கூட்டத்தில் அவளும் அவளது குருவும் இரு வீணைகள் வைத்துக்கொண்டு வாசித்தார்கள். சுசீலா பாடினாள். அதைக் கேட்க என்னையும் துரைக்கண்ணுவையும் அவள் குரு வருந்தி அழைத்து, அவர்களுக்கு முன்னால் உட்காரவைத்தார். துரைக்கண்ணு அவளை விழுங்கிவிடுபவன் போல் பார்த்துக்கொண்டிருந்தான். தான் இவளை அடைந்துவிட்டால் எல்லாவிதமான

தூர்ப்பழக்கத்தையும் விட்டுவிடுவதாக உறுதி கூறினான். அதன் பிறகே இவ்விஷயத்தில் முயலலுற்றேன்.

பிறகு இரு பக்கத்திலும் ஆக்ஷேப சமாதானங்கள் நடைபெற்றன. முக்கியமாகப் பெண்ணைச் சேர்ந்தவர்கள், குடிகாரனும், ஸ்திரீலோலனுமாகிய இவனுக்குப் பெண்ணைக் கொடுக்கக்கூடாது என்று தடுத்தார்கள். ஓர் உத்தியோகஸ்தனுக்குக் கொடுப்பதென்று நிச்சயம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். ஆனால் துரைக்கண்ணுவைவிட அப்பெண்ணே 'அவன் எப்படி இருந்தாலும் பரவாயில்லை, அவனையே மாலையிடுவேன்' என்று ஒரே பிடிவாதமாகச் சொல்லிவிட்டாள். கடைசியில் ஐப்பசி அடைமழையில், சௌபாக்யவதி சுசீலாவிற்கும், சிரஞ்சீவி ராஜகோபாலனுக்கும் கல்யாணம் நடந்தேறியது.

"நல்ல அழகி; S.S.L.C. வரை படித்திருக்கிருள். சங்கீத வித்வானுக்கேற்பச் சங்கீதம் பயின்றவள்; தம்பதிகள் பார்வைக்கு மிகப் பொருத்தமானவர்கள்; இவ்வளவும் சேர்ந்து ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் அமைவது மிகவும் துர்லபம். இவைகளுடன் நல்ல குணவதியும்கூட. இவை யாவும் ஒருங்கே அமையப் பெற்றதால் இனிமேல் துரைக்கண்ணு ஒழுங்காக இருப்பானென்று நினைத்துச் சந்தோஷப்பட்டேன்.

2

அவன் கல்யாணமான மறுமாதம் நான் உத்யோக நிமித்தம் வடக்கே வெகு தூரம் சென்றுவிட்டேன். நான் சாதாரணமாகப் பெற்றோர்கள் பார்த்துச் செய்த கல்யாணத்தையே ஏற்றுக்கொண்டேன். துரைக்கண்ணுவின் கல்யாணமான தை மாதத்திலேயே எனது விவாகமும் நடந்தேறியது. கொஞ்ச நாளைக்கு எனக்கும் துரைக்கண்ணுவுக்கும் கடிதப் போக்குவரத்து நடந்தது. பிறகு அது நின்றுவிட்டது. இப்படி மூன்று வருஷங்கள் சென்றுவிட்டன. என் உத்யோகம் சென்னைக்கு மாற்றப்பட்டது. மனைவியைப் பிறந்தவீட்டில் விட்டுவிட்டு உத்யோகம் ஒப்புக்கொள்ள, மாமனூர் ஊரில் ரயிலேறும் பொழுது துரைக்கண்ணுவை ஞாபகம் மூட்டும் சப்தம்தான் என்னைத் தட்டி எழுப்பிற்று. "நாளையே ஊருக்குக் கடிதமெழுதி, துரைக்கண்ணு என்ன செய்கிறான்? என்பதை அறியவேண்டும்" என்று மனம் துடித்தது.

உத்யோகம் ஏற்ற மறுநாள் சாயங்காலம் பீச்சில் மரீனுவில் போய்க்கொண்டிருந்தேன். துரைக்கண்ணுவின் ஞாபகம் என்னை மிகவும் வாட்டிற்று. அதே சிந்தனையுடன் சென்றுகொண்டிருந்தேன். விச்வம் என்று பின்புறமாக யாரோ எனது தோளைப்பிடித்தாற் போலிருந்தது; திரும்பினேன். கலீரென்ற சிரிப்பு. நான் பேசச் சக்தியற்றுவிட்டேன். ஏனென்றால் என் தியானத்திலிருந்த துரைக்கண்ணு எதிரில் பிரத்யக்ஷமாகிவிட்டான்.

"ஏண்டா இங்கே எங்கே வந்தாய்?" என்றான் துரைக்கண்ணு.

"நீ இங்கேதான் இருக்கிறாயா?" என்றேன்.

"இல்லேடா, இப்பொழுதுதான் சமீபத்தில் வந்தேன். ஏண்டா நேயே! (இது எங்களுடைய அன்பழைப்பு) ஏன் கடிதமே போடவில்லை" என்றான். "ஏண்டா நேயே நீ மாத்திரம் எழுதிக் கிழித்துவிட்டாயோ?" சரி அதிருக்கட்டும் உனது காதலி எப்படி? இருக்கிறாள் என்றேன்.

"என் சுசீலா ஸௌக்யமே. ஒரு குழந்தையுமிருக்கிறான், உனக்கு?" என்றான்.

"பிரசவத்திற்குப் பிறந்தகம் சென்றிருக்கிறாள்" என்றேன். அதற்குள் எனது மேலதிகாரி அழைப்பதாக ஒரு ப்யூன் வந்து கூப்பிட்டதால் என் அறையின் விலாசத்தைக் கொடுத்து இரவு வரும்படி சொல்லிவிட்டுச் சென்றேன். இரவு எட்டு மணிக்கு என் அறைக்கு வந்து சேர்ந்தேன். துரைக்கண்ணைக் காணவில்லை. அவன் வரவிற்காக என் ஹ்ருதயம் மிக்க ஆவலுடன் துடித்தது. சரியாக எட்டரைக்கு அவன் வந்தான். இருவரும் ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வந்தோம். ரேடியோவின் பக்கத்திலுள்ள இரு நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டோம். வெற்றிலையில் சுண்ணும்பைத் தடவிக்கொண்டே, "உன் உத்யோகம், குடும்பம் எப்படி?" என்றான் துரைக்கண்ணு. "நான் ரேடியோவைத் திருப்பியவாறே ஏதோ ஒருவிதமாகக் கவலையில்லாமல் காலங்கழிக்கிறேன்" என்று சொல்லும் பொழுதே, ரேடியோ, அலைமோதுதே, அலைமோதுதே" என்று பாடத் தொடங்கியது. அதுவரை குஷியாக இருந்த துரைக்கண்ணுவின் முகம் வாட்டத்தைக் காண்பித்தது.

"விச்வம், அவசியம் இப்பாட்டை நீ கேட்க வேண்டுமா?" என்றான். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒரு காலத்தில் இம்மாதிரியான பிளேட்டுக்களைத் துவாரம் விழும்படி திரும்பத்திரும்ப வைக்கும் துரைக்கண்ணுவா இப்படிச் சொல்லுகிறான்? என்ற ஆச்சரியத்துடன் "இம்மாதிரிப் பாட்டுக்கள் தான் உனக்குப் பிடிக்குமே" என்று இந்த ஸ்டேஷனைத்திருப்பினேன். ஏன்?" என்றேன்.

"நீ சொல்லுவது வாஸ்தவமே. ஆனால் இப்பொழுது இருக்கும் நிலைமையை நீ அறிந்தால் தான் காரணத்தை விளக்கமுடியும்" என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே இப்பாட்டுமுடிந்தது. அடுத்தாற்போல் "பார்த்தது யார் கண்களோ, பொல்லாத உன் கண்களே" என்று படத்தொடங்கினது. சட்டென எழுந்து ரேடியோவை நிறுத்திவிட்டான் துரைக்கண்ணு.

(தொடரும்.)

(12-பக்கம் தொடர்ச்சி)

கங்களதனால் ஆனந்தமடைகின்றனவா? என்பதை நம்மால் திட்டமாகச்சொல்ல முடியாது காளைகளில் எந்த நாட்டுக் காளை உயர்ந்த ரகம் என்பதை விளம்பரத்தினால் அறியலாம். 'ரோஸ் மேரி' என்ற பந்தயக் குதிரையின் வால் 2 அடி என்பது நமக்கு விளம்பர மூலமாகத்தெரிந்தவுடன் ஜட்காவண்டிக் குதிரையின் வாலும் இரண்டடிக்கு வெட்டப்படுகிறது.

விளம்பரத்தை வெகு முக்கிய சாதனமாக அரசாங்கம் கொண்டுள்ளது. ஒவ்வொரு தேசமும் விளம்பர விஷயமாய்ப் பணத்தை வாரி இரைக்கின்றன. பத்திரிகைவிளம்பரம், ரேடியோ விளம்பரம் இவைகளை நன்கு பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள். பிரசாரமெல்லாம் விளம்பரமல்லாமல் வேறு என்ன!

இதிலிருந்து விளம்பரமெல்லாம் "பொய்" என்று முடிவுகட்டிவிடக்கூடாது. அரசாங்கமென்றால் எல்லாம்தானிருக்கும். ஹிட்லர் பெரிய வல்லரசாகிய பிரான்ஸ் தேசத்தை அடிபணியச்செய்த விந்தையின் ரகசியம் பிரசாரமே. ஜப்பானும் அதேமாதிரி. ஏன்? நமது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் விளம்பர சாமர்த்தியம் எழுதிமுடியாது. அமெரிக்க மக்களுக்கு "இந்தியாவுக்குச் சுதந்திரம் ஏற்கனவே அளித்தாய்விட்டது" என்று பிரசார விளம்பரம் செய்வதைச் சிலராவது நம்புகிறார்கள். யுத்த சமயத்தில் பிரசார விளம்பரம் வெகு அவசியம். அதற்காக அரசாங்கங்கள் பல இலாக்காக்களை அமைத்துள.

விளம்பரமில்லாவிடில் மனிதன் வாழமுடியாது, அரசாங்கங்கள் நடைபெறா. வியாபாரம் ஓங்காது, உலகம் பாழ்த்துவிடும்.

The Finest Writing Fluid
for Fountain & Steel
Pen Use

NATIONAL INK

The Choice of Critics.

Manufacturers :

SRI RAM CHALK
INDUSTRIAL FACTORY,
BRIHMANKOIL STREET, KUMBAKONAM.

Agents Wanted in unrepresented areas.

கதம்பம்

மலடி பெற்ற குழந்தை!

பல காலமாக மலடியோவெனச் சந்தேகிக்கப்பட்ட நேசதேசஅம்மை வட ஆப்பிரிக்காவில் காலடிவைத்ததும் கருவுற்ருள்! பலவிதக் கஷ்டங்களுக்குள்ளாகி கடைசியில் டுனிஷ்யா மகா க்ஷேத்திரத்தை அடைந்ததும் அந்த அம்மை ஒரு குழந்தையைப் பெற்ருள். அதுவும் வெற்றிக் குழந்தை!

நேசதேசஅம்மை ஆனந்தத்தில் மெய்மறந்து கூத்தாடுகிருள். மாமாக்களாகிய சர்ச்சில் துரையும் ரூஸ்வெல்ட் பிரபுவும் கும்மாளமடிக்கிருர்கள்; கூடிக்கூடி குழந்தையின் ஜாதகத்தைக் கவனிக்கிருர்கள்.

தாம் அப்போதைக்கப்போது போட்ட சிம்ம கர்ஜனையின் விளைவாகவே குழந்தை நழுவி விழுந்ததெனச் சர்ச்சில்துரை மார்தட்டிப்பேசலாம். இறுமாப்புக்கொள்ளலாம். உற்பத்தி விஷயத்தில் தாம் காட்டிய நிபுணத்துவமே குழந்தையை விரைவில் கொண்டுவந்ததென ரூஸ்வெல்ட்பிரபு மனப்பால் குடிக்கலாம்.

வெற்றிக் குழந்தை பிறப்பதற்கு உண்மையில் உதவிகள் செய்தது யார்? ருஷ்யரும் இந்தியரும் தாம்! ஜர்மனியின் முழு ராக்ஷஸ பலத்தையும் எதிர்த்து ருஷ்யர் தாங்கி நிற்காவிடில் கர்ப்பமே சிதைந்துபோயிருக்கலாம். இந்தியச் சிப்பாய்கள் தங்கள் வீரதீரத்தைக் காட்டி உலகிலேயே தங்களுக்கு நிகராகப் போர்புரிய வல்லோர் இலரென்னும் பெரும் புகழை நிலைநாட்டினர்.

இப்படி மகத்தான உதவிகளைச் செய்து வெற்றிக் குழந்தையை உருவுடையதாகச் செய்த ருஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் கிடைத்த சன்மானம் என்ன? அவமதிப்பே!

நாளிதுவரை(ஏன்?)சமீபத்தில் வாஷிங்டனில் நடந்த கூட்டத்தில்கூட ருஷ்யா பங்கெடுத்துக்கொள்ளவில்லை. காரணம் தெரியவில்லை. அவதூருகிய வதந்திகள் கிளம்பியதும் அமெரிக்க மாமா ஒரு தூதரை அனுப்பிவைத்தார்.

இந்தியாவின் உதவி அப்போதே மறக்கப்பட்டுவிட்டது. இந்தியத் தலைவர்கள் இன்றும் சிறையில்தான் அவதிப்படுகிருர்கள். அமெரி துரையின் அகந்தை அகலவில்லை. இந்திய விடுதலைக்கும் மார்க்கம் ஏற்படுவதாகத் தெரியவில்லை.

வெற்றிக்குழந்தை பிறந்துவிட்டால்மட்டும் போதாது என்பதை மாமாக்கள் உணரவில்லை. பாலாரிஷ்ட வியாதிகளான மாந்தம், கட்டி, இழுப்பு, சுரம், சன்னி முதலிய கண்டங்களுக்குத் தப்பி வெற்றிக்குழந்தை வளர வேண்டும். அப்படி வளர்வதற்கு இந்தியா போன்ற அடிமை நாடுகளின் விடுதலை இன்றியமையாதது. கட்டாய உதவிகளைவிட மனப்பூர்வமான நல்லெண்ணத்துடனும், நம்பிக்கையுடனும்கூடிய உதவியே பலனளிக்கும். வெற்றிக்குழந்தையும் கொழு கொழுவென்று வளரும். குழந்தையின் க்ஷேமத்தில் மாமாக்களுக்குக் கருத்து உண்டா? கார்யத்தில் காட்டட்டும்; பசப்பு வார்த்தைகளும் இறுமாப்புப் பேச்சுக்களும் பலனளிக்கா.

வெளிவந்த ரகசியம்!

ஆசை வார்த்தைகளைச்சொல்லி ஏமாற்றுவதில் பிரிட்டிஷாருக்கு அபார சாமார்த்தியமுண்டு. ஆனுல் ஆத்திரத்தில் அவசரப்பட்டு உண்மையைக் கக்கிவிடுவதுமுண்டு. இந்தியா சம்பந்தப்பட்ட யுத்த ரகசியமொன்றைச் சர்ச்சில் வெளியாக்கினுர் "பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் குலைக்க நான் முதன் மந்திரி உத்தியோகம் பார்த்துவரவில்லை" என்ருர். அதாவது இந்தியாபோன்ற அடிமை நாடுகள்—சிரஞ்சீவியாக — என்றும் அடிமையாகவே வாழ வேண்டுமென்று குறிப்பிட்டார். அந்த ரகசிய ஸங்கதி நமக்குச் சொல்லாமலே தெரிந்திருந்தாலும்விஷயம் வெட்ட வெளிச்சமாக்கப்பட்டது சற்று ஆறுதலளித்தது.

இப்பொழுது இன்னெரு யுத்த ரகசியம் வெளிப்பட்டுவிட்டது! அமெரிக்க கவுன்சில் மெம்பர் ராபர்ட்டு டாப்ட் துரை, "உலக சுதந்திரத்துக்காகவும் விடுதலைக்காகவும் நாங்கள் சண்டை செய்யவில்லை; எங்களுக்கு அக்கரையுமில்லை. இருப்பதைக்காப்பாற்றிக்கொள்ளவும் கிடைத்ததை முடியுமாஞல் சுருட்டிக் கொள்ளவும் (grab) தான் இந்த யுத்தம்—" என்று சொல்லியுள்ளார்.

இப்படிப்பட்ட வெகு முக்யமான யுத்த ரகசியத்தை உலகிற்கு விளக்கிக்காட்டிய

டாப்ட் துரைக்கு முடிந்தால் முந்நூறு கோடி பவுன் சன்மானம் அளிக்கலாம். ஆனால் சுரண்டிச் சுரண்டி இந்தியா வறண்ட நிலைமையை அடைந்துவிட்டது. நமது மனமார்ந்த வந்தனத்தையாவது செலுத்திவைப்போம்!

நன்றிசெலுத்தித் தொலையுங்கள்.

கடலிலுள்ள நீரையெல்லாம் வடியவைத்துவிடுவதெனக் கங்கணம் கட்டிக்கொண்டான் ஒரு புத்திசாலி! தேசபக்தர்களைச் சிறையிலிட்டுவிட்டால் காங்கிரஸை ஒழித்துவிடலாமென எண்ணிப் பிரிட்டிஷ் சர்க்கார் காரியங்களைச் செய்துவருகின்றனர்; என்ன மதியீனம்!

சமீபத்தில் நடந்த இந்தியா சட்டசபைத் தேர்தல், "காங்கிரஸின் பலம் எத்தன்மை வாய்ந்தது?" என்பதை சந்தேகத்துக்கு இடமில்லாமல் விளக்கிக் காட்டிவிட்டது. காங்கிரஸ் அபேக்ஷகர் கூட்டம் கூட்டக்கூடாதெனத் தடை உத்தரவு பிறப்பித்ததோடு சில்லறை சேஷ்டைகளும் செய்துபார்த்தனர். தேசத்துரோகக் கட்சி அபேக்ஷகருக்கு ஏராளமான வசதிகள் அளிக்கப்பட்டன. மக்கள் அன்பும் ஆதரவும் அமோகமாக அமைந்துள்ள காங்கிரஸ் அபேக்ஷகர் வெற்றிபெற்றார். எதிரி பட்டை நாமம் சாத்தப்பட்டார். சர்க்காருக்கு இது நல்ல படிப்பினையாக விளங்குமென்று எண்ணுகிறோம்.

நிற்க, காங்கிரஸ் அபேக்ஷகர் வெற்றிபெறப் பலமாக உதவி செய்தவர்கள் (1) அதிகாரக் கடவுள் (2) திரு. ராமசாமி நாயக்கர் (3) முத்தையா முதலியார். வாக்காளர்களும் கடவுளும் தத்தம் கடமைகளைச் செய்தார்களாகையால் அவர்கள் செய்தவை உதவியாக மாட்டா!

அசட்டு உத்தரவுகளையிட்டுக் காங்கிரஸ் அபிமானிகளுக்குச் சர்க்கார் அதிக ஊக்கத்தை ஊட்டினார்கள். திரு. ராமசாமி நாயக்கர் தாம் "தொட்டகை விளங்காது" என்ற ரகசியத்தை உணர்ந்து எதிரிகளுக்கு வேலை செய்தார். ராஜீய வாழ்வில் ப்ச்சோந்திபோல் திரியும் முதலியார் காங்கிரஸ்மீது வசைப் புராணம் பாடிக் காங்கிரஸின் புகழை அதிகமாக்கினார்.
இப்படி மகத்தான உதவிகளைப்புரிந்து காங்கிரஸ் அபேக்ஷகர் வெற்றிபெறச் செய்த மேலே சொல்லியவர்களுக்கு இந்திய மக்களின் சார்பாக நமது நன்றியைச் செலுத்தித் தொலைப்போம்.

ஆப்டோன் ப்ளாக்குகளும்
அழகான கலர் ப்ளாக்குகளும்
செய்யுமிடம்!

எம். ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

சம்பந்தியும் பிச்சைக்காரனும்.

பிச்சைக்காரர்களின் தொல்லைகள் அதிகரித்துவிடவே வீட்டு எஜமான் ஒரு வேலையாளை அமர்த்தி, "கண்ட நாய்களையெல்லாம் உள்ளே நுழையவிட்டால் கண்ணைப் பிடுங்கிவிடுவேன்" என்று கடுமையான உத்தரவு போட்டுவிட்டார். வீட்டுக்காரனின் சம்பந்தி வந்தார். வேலைக்காரன் வந்தது யாரென்று தெரிந்துகொள்ளாமல் "போ, அய்யா கண்ட நாய்களெல்லாம் உள்ளே நுழையப்பார்த்து கழுத்தை அறுக்குது" என்று சொல்லிக் கடமையை நிறைவேற்றினான்.

"டெய்லி ஓர்க்கர்" (daily worker) என்ற பிரபல சீமைப் பத்திரிகை சர்ச்சில் சர்க்காருக்கு பிடித்தமானதை எழுதாமல் ஏதாவது 'கலாட்டா' பண்ணிவந்தது. அடக்குமுறை அவ்வளவாகப் பயன்படவில்லை. "குழப்பத்தையும் அமைதிப் பங்கத்தையும் விளைவிக்கக்கூடிய விஷயங்கள் கொண்ட இதழையும் வெளிநாடுகளுக்கு அனுப்பச் செய்யவேண்டாம்" என்று தணிக்கை ஆபீசுக்குத் தாக்கீது அனுப்பப்பட்டது.

சமீபத்தில் சர்ச்சில்துரை அமெரிக்காவில் செய்த திருவிளையாடல்களைக்குறித்து அந்தப் பத்திரிகை எழுதத்தொடங்கி அந்தத்துரையின் சாமர்த்தியத்தை அபாரமாக புகழ்ந்து தலையங்கம் எழுதியது. "சர்ச்சில்" என்ற வார்த்தையை படித்தவுடன் விஷம விஷயம் கொண்டதெனத் தணிக்கை ஆபீஸர்கள் முடிவுகட்டிப் பத்திரிகை இதழ்களை அப்படியே அமுக்கிவிட்டார்கள். பின்புதான் தவறு தெரிந்ததாம்.

சர்ச்சில் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கே இந்தக் கதியென்றால் இந்தியா சம்பந்தப்பட்ட உண்மை விஷயங்களைத் தணிக்கை ஆபீஸர்கள் எந்தக் கதிக்கு உள்ளாக்குவார்கள் என்பதை வாசகர்கள் சிந்தித்து உணரவேண்டுகிறோம்.

காலனை வேண்டுங்கள்!

வாழ்வில் மனிதன் எவ்வளவு கஷ்டப் பட்டாலும் சாகமட்டும் மனம் வராது! தூக்குப் போட்டுக்கொண்டுவிடலாமென்று தோன்றி ஆயத்தமாய் ஒரு கயிற்றையும் தேடியெடுத்துச் சுருக்கும் முடிவான். உடனே மனைவியின் ஞாபகமோ, குழந்தையின் நினைவோ அல்லது பக்கத்துவீட்டுக் கடன் காரன் கொடுக்கவேண்டிய முக்காலணாவின் ஞாபகமோ வந்து தொலையும்!

சுகத்திலேயே உருண்டு, புரண்டு வாழ்பவனைப்பற்றிக் கேட்கவே வேண்டாம். சாகாமலிருக்க ஏதாவது கிடைக்கக்கூடியதாயிருந்தால் எத்தனை பொருள் வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராகவிருப்பான்.

சாதாரணமாக அவனவன் ஆயுட்காலம் பிரும்மாவால் அழுத்தமாக அழிக்கமுடியாமல் எழுதப்பட்டுவிட்டதென்றும் காலம் முடிந்தவுடன் காலன் வந்தே தீருவானென்றும் மக்கள் கருதியுள்ளனர். ஆனால், காலனையும் ஏமாற்றிவிட ரசாயன ஆராய்ச்சி நிபுணர்கள் பாடுபட்டு வருகிறார்கள்.

பால்யத்தைத் திருப்பிவிட முடியுமென பல ஆராய்ச்சிகள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. இப்பொழுது அமெரிக்க ஸர்ஜன் ஜெனரல் டாக்டர் தாமஸ்பாரன் (Thomos Parran) புதியதான ஆராயச்சியில் இறங்கி, "மனிதன் வாழ்நாளைக் கணக்கிட முடியும். அந்த வாழ்நாளைக் குறைந்தது பத்து வருஷங்களாவது நீடிக்கச் செய்யலாம். சில சத்துப்பொருள்களைப்பற்றி நான் செய்த ஆராய்ச்சியே இந்த முடிவிற்கு என்னைக் கொண்டுவந்து விட்டது" என்று சொல்லியுள்ளார்.

இவ்வளவு உன்னத நோக்கங்கொண்ட டாக்டரின் ஆராய்ச்சி முடிவுபெறும் வரை அவரது உயிரைக் கவராதிருக்க அந்தக் காலனை வேண்டுவோம்!

தனலக்ஷ்மி பாங்கு லிமிடெட்,

கும்பகோணம்.

தனலக்ஷ்மி பாங்கு லிமிடெட் ரிஜிஸ்டார்டு ஆபீஸ் இது வரை 55-நெ. பெரிய தெருவிலிருந்துவந்ததை **7—6—43** தேதியிலிருந்து **லக்ஷ்மிவிலாச அக்கிரஹாரத்தில் 13-நெ. கட்டிடத்திற்கு** மாற்றப்பட்டிருக்கிறது.

எப்போதும்போல் யாவத்து பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

A. L. **பாலகிருஷ்ண் அய்யர்,**

மானேஜிங் டைரக்டர்.

நான் கேட்ட முதல் கச்சேரி

கி. ராமதுரை

தியாகராஜ ஸ்வாமிகள் தம்முடைய பாடல்கள் இவ்வளவு தூரத்திற்குச் சிதைக்கப்படும் எனத் தெரிந்திருந்தால் கட்டாயம் பாடல்களைப் பாடியேயிருக்கமாட்டார். என்னை இம்முடிவிற்கு வரச்செய்ததற்குக் காரணம் சமையல் அறையிலிருந்து வந்துகொண்டிருந்த "வினாயகுனி" கீர்த்தனையே

"ஏ! பங்கஜம் பாடாமல் கார்யம் செய்யேன்" என்று ஓர் கூச்சல் போட்டேன்.

அவள் கத்துகிற கத்தலில் கேவலம் என் கூச்சல் எங்கே காதில் விழப்போகிறது? மனதை வேறு விஷயத்தில் திருப்ப மேலே பலகையில் பழையபுஸ்தகம் ஏதாவது இருக்கிறதா? என்று கையாப் துழாவி பார்த்தேன். தலையில் ஏதேதோ குப்பை செத்தைகள் அர்ச்சனையான பிறகு கையில் ஒரு புஸ்தகம் சிக்கியது. அது ஏதோ ஒரு பழைய பத்திரிகையின் ஸங்கீத இதழ். மேலாக ஓர் திருப்புத் திருப்பினேன். அதில் "நான் செய்த முதல் கச்சேரி" "என் முதல் அனுபவம்" என்றெல்லாம் தலைப்பிட்ட பெரிய பெரிய பாகவதர்களுடைய கட்டுரைகளைக் கண்டேன். எனக்குத் திடீர் என ஓர் எண்ணம் உதித்தது.

அஃதாவது நான் கேட்ட முதல் கச்சேரியைப் பற்றி ஏன் எழுதக்கூடாது? என்பது.

எங்கள் ஊரில் ஸங்கீத சபா என்று ஒன்று இன்றும் கிடையாது. உண்டானாலும் அல்பாயுஸ்தான். அதாவது கச்சேரி நடப்பதற்கு முன் சபை என்று ஒன்று ஜனனமாகும், கச்சேரிக்கு மறுநாள் அந்தச் சபா மூடப்பட்டு விடும். சபை இந்த அழகில் இருந்தால் கச்சேரி எப்படி நடக்கும்? ஏதோ வருஷத்திற்கு ஒன்று இரண்டு. அப்படி நடந்தவைகளில் ஒரு தடவை பாகவதரும் பக்க வாத்தியங்களும் எதிர்பாராதவிதமாக ஜோராக அமைந்து விட்டன.

கச்சேரியைப்பற்றிச் சொல்லுமுன் எங்கள் வீட்டிலுள்ளோர் ஜாபிதாவை தெரிந்துகொள்வது நல்லது. என் தகப்பனார் ஸங்கீதம் என்றால் "மலிவாக வந்தால் வாங்கிப் போட்டுவை" என்பார். என் தாயார்—அவள் மனதிற்குள் கரை கண்டவள் என எண்ணம். என் சிறிய தாயார் — அவள் அடாணாவில் 'பைரவி'ங்கிற பாட்டுப்பாடு என்பாள். எனது சிற்றப்பா கொஞ்சம் ஸங்கீதம் தெரிந்தவர். லலிதா—என் சித்தியின் பெண். வயது மூன்று. பிறந்த தினத்திலிருந்து முகாரி ஆலாபனம் செய்து வருகிறது. எங்கள் பாட்டி–தாயாரின் தாயார்–—பெண்ணைப்போலத்தான். கடைசியாக ஸ்ரீமதி பங்கஜம் அடியேன் ஸஹதர்மிணி, பெரிய ஸங்கீத அபிமானி. ஆனால் நாம் பாடு என்றாலோ 'ஊஹூம்' என்று வாயைத் திறக்கமாட்டாள். பாட ஆரம்பித்தாலோ கீறல் விழுந்த ப்ளேட்டுத்தான்; ஓயவேமாட்டாள்

ஒரு நாள் வாய் தவறி வரப்போகும் கச்சேரியைப்பற்றிச் சொல்லிவிட்டேன். அவ்வளவுதான் அதுவே எனக்குப் பெரிய சனியனாய் ஜனித்தது. எனது பாட்டி "ஏண்டாப்பா, எனக்கு ஒரு டிக்கட்டு கிடைக்குமா?" என அடி போட்டாள். என் சிறிய தாயார் "இந்தா, நான் சித்தி கேட்கிறேன். எனக்கு ஒரு டிக்கட் வந்தாகணும்" எனக் கீச்சுத் தோனியில் ஆர்டர் போட்டுவிட்டாள். என் தாயாரோ, "யாரு, மேக்குடி திருமலை அய்யங்காரா. ஆகா என்னமா பாடுவார்.? அப்போ ஒரு கச்சேரி நடந்தது. ரமணி அப்போ வயத்திலே நாலு மாஸம். உங்கப்பாதான் போகக்கூடாதென்று. குதிச்சாளே குதிச்சா அப்படி குதிச்சா" எனச் சொல்லி ஒரு குதியும் குதித்துக் காண்பித்தாள்.

சமையல் அறைபக்கம் பார்த்தேன். பங்கஜம் கண்ணை ஒரு விதமாக சுழற்றி முகத்தை வக்ரமாக வைத்துக்கொண்டு புன்முறுவல் பூப்பதாக எண்ணிக்கொண்டு பல்லைக் காட்டினாள். அதற்கு "நானும் வருகிறேன்" என்று பொருள். கடைசியாக என் தகப்பனார் எல்லாம் கிடந்து அலையறதுகள். கச்சேரியாம் கச்சேரி, பிழைப்பேதான் கச்சேரியாய் இருக்கே" எனச் சொல்லிக்கொண்டே போய் விட்டார்.

இவ்வளவு பேருக்கும் டிக்கட்டிற்கு எங்கே போவது? கஷ்டப்பட்டு எனக்குத் தெரிந்த சபா மெம்பர்களை எல்லாம் பார்த்து ஒருவாறாக டிக்கட் சேர்த்துவிட்டேன்.

மாலை 5 மணிக்கு கச்சேரி. 4 மணிக்கென்று சொன்னால்தான் இவர்கள் புறப்படச் சரியாயிருக்கும் என எண்ணிப் பகல் இரண்டு மணி முதல் அவர்களைப் புறப்படச் சொல்லிக்

கொண்டிருந்தேன். இந்த அமர்க்களத்தில் அவள் வரவில்லையாம். அவள்தான்—யார்?—என் மனைவி; என்ன இழவோ கோபம். கோபமும் தாபமும் சமயத்திற்குத் தானே வரும். சரி, வராவிட்டால் போகிறது என மற்றவர்களை ஜரூர்ப் படுத்தினேன். என் தகப்பனார் நல்ல வேளையாகக் கிராமத்திற்குப் போய்விட்டார். அவர் இருந்தால் நடு நடுவே அவரும் சேர்ந்து கத்தல் போட்டிருப்பார்.

பின்னல் கச்சேரி, முகம் தேய்த்துக்கொள்ளும் படலம், அலங்கார அமர்க்களம், ''புறப்பட்டாச்சு, புறப்பட்டாச்சு'' என சொல்லிக் கொண்டே அகாரணமாய் இங்குமங்கும் நடமாடல்; இதற்குள்ளெல்லாம் மணி டண் என 4-30 ஆகிவிட்டது.

ஒருவாறாக மணி 4-45-க்குச் எல்லோரும் புறப்பட்டோம். எங்கள் வீட்டிலிருந்து கச்சேரி நடக்கும் இடம் கால் மைல் இருக்கும். நானும் புது வேஷ்டி அங்கவஸ்திரம் சகிதம் புறப்பட்டேன்.

பாதி தூரம் போயிருப்போம் ''ஏன் ராஜி (என் தாயார் பெயர்) வடுமாங்கா ஊறுகாய் ஜாடியை மூடினயோ'' எனப் பின்னால் மெதுவாக வந்துகொண்டிருந்த பாட்டி அங்கிருந்தபடி கத்தினாள். சட், நடு ரோட்டில் கூடவா இந்தத் தொண்டை. என் தாயார் சாவதானமாக, ''ஞாபகம் இல்லையே வீட்டிலே தான் ஒண்ணு......'' என ஆரம்பித்துவிட்டாள்.

''சரி மூடாவிட்டால் மோசம் போகாது, மணி 5 அடிக்க 5 நிமிஷம்தான் இருக்கு, நடங்கோ'' என்றேன்.

அதற்குள் அந்த கிழவி ''இந்தா, துரை! நீ அவர்களைக் கூட்டிண்டுபோ, நான் ஒரு எட்லே போய்ப் பார்த்துட்டு வந்துடறேன் அதுவும் பாவம் ஒண்டியா இருக்கும், மனஸு கேட்கிறதா'' எனச் சொல்லிக்கொண்டே என் பதிலை எதிர்பாராதவள்போல் திரும்பிவிட்டாள்.

''ஏண்டா தள்ளாத வயது எப்படியடா தனியா போவாள்? நீ கொஞ்சம் வீட்டுவாசல் மட்டும் போய்விட்டு வாடா'' என்று என் தாயார் பிடுங்க ஆரம்பித்துவிட்டாள்.

நீங்கள் போங்கள் நான் பாட்டியை வீட்டிலே கொண்டுவிட்டு வருகிறேன்'' எனச் சொல்லிக்கொண்டே ஊர்ந்துகொண்டு சென்றுகொண்டிருந்த பாட்டியைப் பின் தொடர்ந்தேன். அப்பொழுது மணி 5.

வீட்டு வாசல் வந்ததும் ''சரி நீ போயேண்டா, நான் வரமாட்டேனா? எனக்குத் துணை வேறயா?'' எனப் பாட்டி சொன்னதின்பேரில் கச்சேரியைப் பார்க்க விட்டேன் கம்பி.

மணி அப்பொழுது 5-15.

கச்சேரி வாசலில் ஒரே கும்பல். ஒரு ஓரத்தில் என் தாயார் எல்லோரும் நின்றுகொண்டிருந்தனர். ''ஏன் நீங்கவெல்.........'' என்பதற்குள் ''டிக்கட்டை நீ, வைத்துக்கொண்டிருக்கியே'' எனச் சித்தி கிச்சு மூச்சென்று எங்கிருந்தோ பதில் சொன்னாள்.

என் பையில் கையைப் போட்டேன். அட க்ரஹசாரமே! தலையைக் கிறுகிறு எனச் சுற்றியது. காரணம்? சட்டைப்பை காலி. பழைய சட்டையில் டிக்கடெல்லாம் வைத்திருந்தேன். புதிய வண்ணான் சட்டை மாற்றும்பொழுது டிக்கட் எடுத்து வைத்துக்கொள்ளவில்லை. கோதண்டத்திலிருந்து கிளம்பிய ராமபாணம் என்பார்களே! அதுபோல் கிளம்பினேன், வீட்டைநோக்கி.

அந்தக் கால்மைலும் எப்படியோ நாலு மைலாக மாறியதுபோல் இருந்தது.

ஒருவிதமாக வீட்டிற்கு வந்தேன், வாசல் கதவு பூட்டிக்கிடந்தது. நான் பூட்டைப் பார்த்து விழித்தேன். அது என்னைப் பார்த்து விழித்தது.

''ஏ பங்கஜம்'' என்று கத்தல் போட்டேன். நடு ரோட்டில் நின்றுகொண்டு கத்த லஜ்ஜையாய் இருந்தது. பக்கத்து வீடுகளில் விசாரிக்கலாமென்றால் புருஷர்கள் எல்லாம் மாலை வேளையானதால் வெளியே போய்விட்டனர். மணியோ 5-45 ஆகப்போகிறது. சிறிது நேரம் என்ன செய்வதெனத் தெரியாமல் தவித்தேன்.

அப்பொழுது அங்கே வந்தான் ஜய்யூ; அதாவது பக்கத்துவீட்டு ஜயராமன். அடடா, ஒரு புட்டி சீமையெண்ணெயைக் கண்டால்கூட அவ்வளவு ஆனந்தப்பட்டிருக்க மாட்டேன், ''டேய் ஜய்யூ, இந்தா, எங்க வீட்டு மாமி இருக்காளோ பார் சமத்தோல்யோ'' என்றேன்.

அந்தப் படுபாவி ''ஏனோ உங்களுக்கு வேணும்கிறபொழுது சமத்தாக்கும். உங்கள் வீட்டு மாடிமேலே ஏறி சிக்கிண்ட பட்டத்தை எடுக்க கூடாதுன்னு மிரட்டினேளே'' என்றான்.

''அதெல்லாம் சும்மாடா, வேணும்னா இப்பொழுதுபோய் எடுத்துக்கோ. எங்கே ஓடு பார்க்கலாம். இந்தா காலணா'' என்றேன். நான் துடித்துக்கொண்டிருந்தேன். போட்டு ரெண்டு மொத்தலாமா எனத் தோன்றியது. கார்யம் ஆகவேண்டுமே! கடைசியாக ஜய்யூ மனம் இரங்கினான்.

சிறிது நேரத்தில் பல்லைக்காட்டிக்கொண்டு சாவிக்கொத்தை விரலால் சுழற்றிய வண்ணம் வந்தாள் பங்கஜம்.

''சரி சீக்கிரம் கதவைத்திற; அப்புறம் ஆடலாம்'' என்றேன்.

"ஏன் நெல்லிக்கா உருண்டை மாதிரி குதிக்கிறேள். என்ன அப்படி தலைபோற அவசரம்" எனக் கேட்டுக்கொண்டே கதவைத்திறந்தாள். இவ்வளவு பரபரபிற்கும் கோபத்திற்கும் மத்தியில் அவள் பதிலைக் கேட்டுப் பொக்கெனச் சிரித்துவிட்டேன்.

பையில் டிக்கெட்டுகளைப் போட்டுக்கொண்டு திரும்பினேன். அறையின் வாசலண்டை நின்றுகொண்டிருந்தாள் பங்கஜம். தப்பித் தவறி "நீயும் வரயா" எனக் கேட்டுவிட்டேன்.

"நீங்கள் கேட்பேள்னு தெரியும். ட்ரெஸ் பண்ணிக்கொண்டாச்சு. செத்த இருங்கோ முகத்தைக் கழுவிண்டு கிளம்பறேன்" என ஓர் போடு போட்டுவிட்டு மறைந்தாள்.

செத்தநாழி, இந்த பெண்கள் சாகும் நாழிகையை என்ன சின்னபின்னப்படுத்துகிறார்கள்? சாக இவ்வளவு நேரம் மணிக் கணக்கில் வேண்டுமா? என எண்ணிக்கொண்டே உட்கார்ந்துவிட்டேன்.

மணியைப் பார்த்தேன் 6-20.

"ஐயையோ! "ஏய் பங்கஜம் மூஞ்சி தேய்த்துண்டது போதும் கிளம்பு" என்றதற்கு "அவ்வளவு அவசரமாய் இருந்தால் போகலாம்" என்ற பதில் வந்தது. போய்விடலாமா என யோசித்தான். ஆனால் மனசு வரமாட்டேனென்றது.

அப்படியும் இப்படியுமாய் 6-30 மணிக்குக் கிளம்பினோம்.

"கொஞ்சம் வேகமாய் வாயேம்மா"

"செத்த நின்னு போங்கோளேன். இந்தச் செருப்பு ஒண்ணு. நம்ப ஓர் பக்கம் காலை வைத்தால் அது ஓர்பக்கம் போகிறது. நடக்கத் தெரியலே. அவ்வளவு அவசரம் என்றால் அதைக்கையிலேதான் எடுத்துக்கணும்" என்று சொல்லிவிட்டாள். வாயைத் திறந்தால் பல்லைப் பிடுங்கற வழியாய இருக்கு.

"சரி வாங்கோ! எல்லோரும் உள்ளே போகலாம்" என்றேன். "ஏண்டா டிக்கட் பண்ணினயா?" என்றாள் கீச்சுக் குரலில் சித்தி.

"நாங்களெல்லாம் உள்ளே போறோம். உன் பாட்டியைக் காணோம். இருந்து கூட்டிக் கொண்டுவா" எனச் சொல்லிக்கொண்டே என்னை நிற்க வைத்துவிட்டு என் தாயார் மற்றவர்களுடன் உள்ளே போய்விட்டாள்.

அட ராமச்சந்திரா! ஜன்மேபி இம்மாதிரி பெண்களோடு வரக்கூடாது எனச் சங்கல்பம் செய்துகொண்டேன்.

மணியோ 7 ஆகிவிட்டது.

உள்ளே பாகவதர் காம்போதி ஆலாபனம் என் எரிச்சலை அதிகப்படுத்தியது. உள்ளே

வெற்றி! வெற்றி!! இணையற்ற வெற்றி!!!

அமுலிலிருக்கும் பாலிஸி தொகை	...	9 கோடி
மொத்த ஆஸ்தி	...	$2\frac{1}{4}$ கோடி சுமார்
ஆயுள் நிதி	...	2 கோடிக்குமேல்

$1\frac{1}{4}$ கோடிக்குமேல் புது பிஸினஸ்

[சென்ற ஆண்டைவிட 25 சதம் விருத்தி]

லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

லிமிடெட்

தலைமை ஆபீஸ்: **லாகூர்** :: இந்தியா முழுவதும் கிளைகள்

எங்கள் பது விரிவு திட்டத்திற்கு;—

ஏஜண்டுகளும் ஆர்கனைஸர்களும் தேவை.

சென்னை கிளை-

1, கதிட்ரல் ரோட், கதிட்ரல் P. O., சென்னை.

போகலாமென்றால் பாவம் வாசலில் வந்து நிற்குமே கிழம். வீட்டுச் சாவியோ என்னிடம் இருந்தது. கஷ்டகாலம், தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டேன்.

நான் என் பொறுமையை மீறும் தருணம். 7-30 மணிக்கு என் பாட்டி ஆடிக்கொண்டு வந்தாள். எனக்கிருந்த கோப மிகுதியில் ஒன்றும் சொல்லமுடியவில்லை. அவள் "பாவம் நீயா கார்த்துண்டிருக்கே, உங்கப்பா முசிரிலே யிருக்கறப்போ வெடரணரி டாக்டராத்து பெண்ணோடே நாத்தனாருக்கு......" "போரும் கிளம்பு" எனச் சொல்லிக்கொண்டே உள்ளே போனேன்.

கச்சேரியின் அருமையான முன்பாதி ஆகிவிட்டது. நிற்கக்கூட இடம் இல்லை. உட்கார்ந்திருந்தவர் மத்தியில் கொஞ்சம் இடம் இருப்பதுபோல் தென்பட்டது. "ஸார் கொஞ்சம்", "ஸாரி", "மன்னிக்கணும்", "அடடா" முதலிய வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே கும்பல் மத்தியில் புகுந்து அவர்கள் தோள், தலை மீது கையையும் தொடைகள்மீது காலையும் வைத்துக்கொண்டு போய்ச் சேர்ந்தேன். அங்கே போய்ப்பார்த்தால் இடம் காலி இல்லை. கண்ணை மூடிக்கொண்டு அப்படியே அமர்ந்துவிட்டேன். "எவண்டாவன் எருமை மாடுமாதிரி" எனச் சொல்லிக்கொண்டே அந்த மனுஷன் திரும்பினான். நல்ல வேளையாக அவன் எங்கள் ஆபீஸ் கிளார்க் சந்துரு. "பசு மாடு தாம்பா" எனச் சொல்லிக்கொண்டு ஒருவாறு ஒண்டிக்கொண்டு உட்கார்ந்தேன்.

சரியாக மணி 8. அப்பொழுது மிருதங்கம் தனி ஆவர்த்தனம் பலமாயிருந்தது. அவர்களுக்காவது கோபம் வந்தால் போட்டு நொறுக்க ஒன்று இருக்கிறது. நமக்கோ நாம்தான்.

பாகவதர் திருமலை அய்யங்கார் ஒருமுறை பொடியை உறிஞ்சிவிட்டு "ஆங்......" என்றாரம்பித்தார். ஏன் பக்கத்திலிருந்த ஒருவருக்கு என்ன தோன்றியதோ என்னவோ தாமும் தம் மட்டையை எடுத்துப் பொடியை எடுத்தார். அட பாபமே! என் கண்களில் வேறு பறந்து வீழ்ந்துவிட்டது.

கல்யாணியை ஓர் உலுக்கு உலுக்கிக்கொண்டிருந்தார் பாடகர். பின்னால் ஏதோ "ஏய், உய்" என்ற சப்தம் திரும்பினேன். யாரோ ஓர் பையன் எல்லோர் துடையிலும் காலை வைத்த வண்ணம் வந்து என் முதுகைத் தொட்டான்.

"மாமா, உங்களை யாரோ கூப்படறா" என்றான்.

"போடா என்னையிருக்காது" என்றேன்.

உஸ்! சட்! சப்தம்! முதலிய பாணங்கள் பறந்தன. அந்தப் பையன் விடுகிற வழியாய் இல்லை. அவனைப் பேசாமல் பின்தொடர்ந்தேன். பட்டகாலிலேயே படும்.

"இந்த லலிதாவைக்கொஞ்சம் வாங்கிக்கோ. கத்தித் தொலைகிறது. தூத்தம் வேணுமாம்" என்றாள் என் சித்தி.

"அதெல்லாம் முடியாது" எனச் சொல்லிவிட்டு நழுவப் பார்த்தேன்.

"கொஞ்சம் தீர்த்தம் வாங்கிக்கொடுபோரும்" என்றாள். லலிதாவும் என்னிடம் தாவ ஆரம்பித்தாள். குழந்தையை வாங்கிகொண்டுவிட்டேன். அது என்னிடம் தாவியதும் தண்ணீரிலிருந்து பிஸ்கெட்டிற்குத் தாவியது.

"அதெல்லாம் பிஸ்கெட் கிடையாது" என அதட்டல் போட்டேன். அந்தப் பிடாரி மூன்றரைக் கட்டையில் சுருதிகூட்ட ஆரம்பித்துவிட்டது. உடனே ஒரே சமயத்தில் ஆயிரம் குரல்கள் கிளம்பின. நானும் அங்கிருந்து கிளம்பினேன்.

கடைத்தெருவிற்குத்தான் போயாகவேண்டும் பிஸ்கெட்டிற்கு. குழந்தையோடு ஓடிப் போய் வாங்கித் தொலைத்தேன். மணி அப்பொழுது 8-45.

குழந்தையைத் தாய் வசம் தள்ளிவிட்டு என் பழைய இடத்தில் அமர்ந்தேன். பாகவதரும் துக்கடா எடுத்துவிட்டார். ஒரு பாட்டுக்கூட கேட்கக் கொடுத்துவைக்கவில்லை. இதுமாதிரி மனிதர்கள்கூட வந்தால் எங்கே கேட்பது? சரி துக்கடாக்களையாவது கேட்க முடிந்ததா? அதுவும் இல்லை.

மறுபடியும் அந்த "மாமா கூப்பிடறா" என அம்பி வந்துவிட்டான். இனி மறுபடியும் இங்கே வரக்கூடாது என எண்ணிக்கொண்டு கிளம்பினேன்.

"நாங்களெல்லாம் போறோம் நீ வரயா?" என்றாள் என் தாயார்.

"போங்களேன் என்னை என்ன கேள்வி?"

"நீயும் வாயேன். கச்சேரி முடியப்போறது" என்றாள். எனக்கு எப்படியிருக்கும்?

"நீங்கள் போங்கள் நான் வரேன்"

"சரி இருட்டிக்கிடக்கு. கொஞ்ச தூரம் துணைக்கு வா" என்று சித்தி கீச்சு குரலில் ஆக்ஞாபித்தாள்.

என் பாட்டியும் "ஆமாண்டா சிறுசும் கிறுசுமா போறோம், பயந்துண்டா?" என ஒத்தூதினாள். நீங்கள் நாலுபேரைப் பயமூட்டாமல் இருந்தால் போதாதா? என முணுமுணுத்துக்கொண்டே கிளம்பினேன்.

மணியோ 9-30. அவர்களை அனுப்பிவிட்டுத் திரும்பிவந்தேன். நான் வருகிறபொழுது பாகவதர் என்ன பாடிக்கொண்டிருந்தார் என வனைக்கிறீர்கள். வேறொன்றும் இல்லை. "ராஜீவ நயன தியாக........." என்றுதான்.

தலையை என்னவோ செய்தது. என்னை மறந்து நின்றுகொண்டிருந்தேன். முக்கால் வாசி கும்பல் கலைந்துவிட்டது. பாகவதரைச் சுற்றிப் பத்துப்பேர். எவ்வளவு நேரம் அப்படி நின்றேனோ தெரியாது.

"மாமா" என்ற குரல் என்னை எழுப்பியது.

"எவண்டா" எனக் கையை ஓங்கினேன். பக்கத்துவீட்டு ஜய்யூ நின்றுகொண்டிருந்தான்.

"சாவி உங்கள்கிட்ட இருக்காமே? வாங்கிண்டு வரச்சொன்னா" என்றான். சாவியை எடுத்து அவன் முன் விட்டு எறிந்தேன்.

"அட என் மேலே ஏன் எரிந்து விழறேள்" எனச் சொல்லிக்கொண்டே சாவியை எடுத்துக் கொண்டு ஓடினான் தடிப்பயல்.

அன்று இரவு நான் சாப்பிடாமல் என் அறையில் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். யாரோ தலையைத் தொட்டார்கள். அவள்தான் பங்கஜம்.

"கச்சேரி எப்படி?" என்றாள். அப்பொழுது பதில் சொல்லத் தோன்றவும் இல்லை, தெரியவும் இல்லை; எனக்கு வந்த கோபத்தில் அங்கிருந்த.............. செத்த இருங்கள் பக்கஜம் பாட்டை முடிக்கிற வழியாய்க் காணோம்; போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்.

சிக்கன வாழ்க்கைக்கும் தினசரி உபயோகத்திற்கும் தேவையான
எல்லாவிதமான ஜவுளிகளும்
புதுமாதிரியாகவும்—விலை நயமாகவும்
கிடைக்கும் இடம்:

கும்பகோணம்
பெரியதெரு

R. S. & Co.

தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் தேவையான
ஜவுளி தினுசுகளை எங்களிடமே வாங்கி
ஆதரிக்கக் கோருகிறோம்.

Prop. R. சுந்தரேசய்யர்.

வழி காட்டி

'ஹரிணி'

சரத்சந்திர சட்டர்ஜி எழுதிய நாவலின் மொழிபெயர்ப்பு.

சென்ற இதழ் தொடர்ச்சி.

7

மறுபடியும் துர்க்காபூஜை வந்தது. விடியற்காலம் கீழ்த்திசையில் உதய சூரியன் வருகையைக்கண்டு பக்ஷி ஜாலங்கள் ஆனந்தமாகக் கூக்குரலிட்டன. ஹேமா ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு, ரக்தமயமான சிவந்த கிழக்குப் பக்கத்தைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். தூரத்தில் எங்கேயோ மேளச்சத்தம் கேட்டது. சரத்காலத்தின் பரிபூர்ணமான கருணா ரசம் அதில் கலந்திருந்தது. அந்த ராகத்தின் இனிமை மெள்ள மெள்ள அவளுடைய சரீரத்தில் சஞ்சாரம் செய்ய ஆரம்பித்தது. அவளை யறியாமல் அவள் கண்களில் கண்ணீர் பெருகியது. "ஐயோ! குணி என்ன செய்கிறாளோ? எப்படியிருக்கிறாளோ? எங்கே இருக்கிறாளோ? ஒன்றும் தெரியவில்லையே!" என்று அவள் வாய் முணுமுணுத்தது.

கல்கத்தாவிலிருந்து அவள் வரும்போது குணேந்திரன் அவளைப் போகவேண்டாமென்று மன்றாடினான். புறப்படும்பொழுது அழுதுகொண்டே "ஹேமா! இன்னும் இரண்டு நாட்களாவது இரு. கோபத்துடன் போகாதே" என்றான். அவ்வளவு பலஹீனத்திலும் கீழே இறங்கி வாசல்வரை வந்து—"ஹேமா உன் மனது சரியான நிலையில் இல்லை; என்ன காரணமாவது இருக்கட்டும்; மனது மாறியிருப்பதால் ஒருநாளாவது தங்கிவிட்டுப்போ" என்று கெஞ்சினான். ஆனால், அன்று ஹேமா ஆத்மாபிமானியினுடைய கண்ணீரின் மதிப்பைச் சிறிதுகூடப் பொருட்படுத்தவில்லை. வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டாள். கடைசியாகக் குணிபாபு வண்டியின் கதவைப் பிடித்துக்கொண்டே, "ஹேமா! யோசித்துப்பார். இந்தக் காரியம் உன் மனதில் எப்பொழுதும் முள்ளைப்போல் உறுத்திக்கொண்டேயிருக்கும். நான் எனக்காகக் கூறவில்லை; உனக்காகத்தான் கூறுகிறேன்; இறங்கு; இன்று முழுவதுமாவது இரு" என்று மிக்க பரிதாபமாக வேண்டினான். அதற்குப் பதிலாக ஹேமா வண்டிக்காரனிடம் வண்டியை ஓட்டும்படி கூறினாள். இன்று அந்தப் பழைய சம்பவங்கள் அவள் கண் முன்பாகக் காட்சியளித்தன. படுக்கையில் வந்து தொப்பென்று விழுந்தாள். முகத்தைப் புதைத்துத் தேம்பித்தேம்பி அழுதாள். வெகுநேரம் அழுது அழுது அப்படியே தூங்கி விட்டாள்.

அவள் இவ்வளவு வருந்துவதற்குப் பல காரணங்களிருந்தன. புண்ய தீர்த்த யாத்ரை செல்வதற்கு ஐம்பது ரூபாய் வேண்மென்று கேட்டு அனுப்பினாள். சின்ன எஜமானருடைய உத்தரவில்லாமல் ஒரு காசு கூடக் கொடுக்க முடியாதென்று கணக்கப்பிள்ளை சொல்லியனுப்பிவிட்டார். ஹேமா தன் மைத்துனனிடம் பேசுவது கிடையாது. அவள் துணிந்து, மறைவில் நின்றுகொண்டு—"லாலாஜீ! நான் கேட்டால்கூடக் கணக்கப்பிள்ளை ரூபாய் கொடுக்கக்கூடாதா?" என்றாள்.

"முடியாது உங்களுக்குச்சாப்பிடத்தான் அதிகாரம் உண்டு. பணம் கொடுக்க முடியாது." என்று கண்டிப்பாகக் கூறினான் மைத்துனன்.

"அப்படியா? அதிகாரம் எவ்வளவுவரை உண்டு—இல்லை—என்பது எனக்குத் தெரியும். பணத்திற்காக வழக்குத் தொடர எனக்குச் சிறிதுகூட இஷ்டமில்லை, பற்றுதலுமில்லை. ஆனால் என்னை நீங்கள் அவ்வளவு திறமையற்றவளாக நினைக்கவேண்டாம். இஷ்டமிருந்தால் கொடு. இல்லாவிட்டால் வேண்டாம். பணத்திற்காக நான் பேராசைப்பட்டால், உன்னிடம் விரோதம் பாராட்டி உன்னுடைய இந்த வீட்டின் ஒவ்வொரு செங்கல்லையும் பெயர்த்துக் கங்கையில் எறிந்துவிட முடியும்" என்று கூறிவிட்டுப் போய்விட்டாள்.

பிறகு பணம் வந்தது. ஆனால் ஹேமா அதை வாங்கிக் கோபத்துடன் 'வராண்டா'வில் விட்டெறிந்தாள்; தன் அறைக் கதவை மூடித் தாழிட்டுக்கொண்டாள்; அன்று முழுவதும் சாப்பிடவில்லை; அழுது அழுது முகமெல்லாம் வீங்கிச் சிவந்துவிட்டது; ஏழுமணி அடித்தது;

கண்விழித்தாள்; எழுந்து குளித்துவிட்டுப்பூஜை அறையில் நுழைந்தாள். உடனே ஒரு வேலைக்காரி வந்து—"அம்மா! உங்கள் பிறந்தகத்திலிருந்து காணிக்கையுடன் சிலர் வந்திருக்கிறார்கள்" என்றாள்.

அடுத்த நிமிஷம் மங்கா அங்கே வந்து அவளை நமஸ்கரித்தாள். அவளைக் கண்டதும் ஹேமாவின் துக்கம் கரைபுரண்டோடியது. அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு குழந்தையைப் போல் அழுதாள். இரண்டு தினங்களாகவே அவள் கண்களில் கண்ணீர் உலரவில்லை. மங்காவைப் பார்த்தவுடன் ஏறக்குறைய ஒருவருஷமாகத் தடுக்கப்பட்டிருந்த கண்ணீர் வெள்ளம் போல் பொங்கி வழிந்தோடியது. மங்காவைத் தன்னறைக்கு இழுத்துச் சென்றாள், பிறகு

"மங்கா! குணிபாபு கடிதம் கொடுத்திருக்கிறாரா? சீக்கிரம் கொடு" என்றாள்.

"இல்லையம்மா! கொடுக்கவில்லை".

"நிஜமாகவா?"

"இல்லை ஜீ ஜீ! அவரால் எழுந்திருக்க முடிந்தால் தானே எழுத முடியும்."

ஹேமா திடுக்கிட்டாள். தன்னை மிக்க கஷ்டத்துடன் அடக்கிக் கொண்டாள்.

"ஏன் மங்கா! அவருக்கு என்ன?"

"உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா?"

"தெரியாதே. சீக்கிரம் சொல்லேன்."

"என்ன சொல்வது ஜீ ஜீ!" என்று அழ ஆரம்பித்துவிட்டாள்.

"ஐயோ! சொல்லேன் மங்கா! அழாதே!" என்று ஆத்திரப்பட்டாள்.

"நீங்கள் வந்த மறுநாளே மறுபடியும் அதிக ஜுரம் வந்துவிட்டது; பிறகு சற்றுக் குறைந்தது; மறுபடியும் வந்தது; இப்பொழுது அதிகமாகவிருக்கிறது; நான் திரும்பிப்போய் கண்ணால் பார்க்கப் போகிறேனோ இல்லையோ?" என்றுகூறி ஓவென்று அழுதுவிட்டாள். பிறகு, "ஜீ ஜீ! வியாதி எப்படியாவது இருக்கட்டும். யாரோ சித்தியாம், வந்திருக்கிறாள். சித்தப்பா, பிறகு அவர் பிள்ளை, நாட்டுப்பெண், தங்கை, தங்கை கணவர் எல்லாரும் ஒவ்வொருவராக வந்துவிட்டனர். வீட்டில் இடமே கிடையாது."

"அப்படியா! சரி! நான் வந்து எல்லாருக்கும் விடை கொடுத்து அனுப்பிவிடுகிறேன். அப்புறம்?"

"எல்லாரும் உண்டு உருட்டுகிறார்கள். வேடிக்கை விளையாட்டு! வீடு நிர்த்தூளிப்படுகிறது; பாபுஜீ மேலே விழுந்துகிடக்கிறார்; மருந்து கிடையாது; டாக்டர் கிடையாது; பத்தியம் கிடையாது; காற்று மாறினால் குணமாகும் என்று சொல்லுகிறார்கள்; ஆனால் யார் அழைத்துச் செல்வது?"

"ஏன்? நீங்களெல்லாம் என்ன செய்கிறீர்களாம்? நந்தன் அழைத்துச் செல்லக் கூடாதா?"

"ஐயோ! அதிர்ஷ்டமே! அவனைத்துரத்திவிட்டார்களே."

"அந்தப்பிள்ளை-அதுதான் அந்தச்சித்திபிள்ளை—பைத்யம் இருக்கே அது குடித்துவிட்டுக் கூத்தாடுகிறது. பாபுஜீகூடப் பயப்படுகிறார்."

"சரி! என் அண்ணா பிழைப்பாரா, மாட்டாரா? நிஜமாகச் சொல்லு."

"ஏன் பிழைக்கமாட்டார்? போய்ப்பார்த்து, முயற்சி செய்து கவனித்தால் கட்டாயம் பிழைக்கலாம். இப்படியே விட்டுவைத்தால் பிழைக்க முடியுமா?"

ஹேமா ஒரு நிமிஷம் கண்களை மூடி யோசித்தாள். பிறகு திடீரென்று மங்கா உன்னிடம் திரும்பிப்போக பணம் இருக்கிறதா?"

"ஏன்? இருக்கு. உங்களுக்குத் தெரியாதா? பாபுஜீ ஒரு ரூபாய்க்குப் பத்து ரூபாயாகத் தான் கொடுப்பது வழக்கமென்று?"

"எப்பொழுது போவாய்?" நாளைக்கா?"

"ஆம் நான் உடனே போகவேண்டும். அங்கே அவருக்கு யாருமில்லை. எல்லாரும் புதியவர்கள். "அப்பப்பா! அவர்களிடம் நான்தான்—கல்லு மனசு மனுஷியாகையால் இருந்துகொண்டிருக்கிறேன். என்னை அடிக்க வருகிறாள். 'பாபுஜீ இறந்துவிட்டால் சுகமாவிருக்கும்' என்கிறாள்" என்றாள்.

உடனே ஹேமாவின் கண்களில் நெருப்புப் பறந்தன. "உடனே புறப்படும் போகலாம்" என்றாள்.

"இன்றைக்கா?"

"ஆம், ஸ்டீமர் எப்பொழுது புறப்படுகிறது தெரியுமா?"

"இன்னும் ஒரு மணியில் புறப்படுகிறது."

"ஓடு, உடனே ஒரு வண்டி கொண்டுவா."

"என்ன ஜீஜீ! இன்று நல்ல நாளல்லவே?"

"நல்ல நாள்தான். போ, ஓடிப்போய் வண்டி கொண்டுவா. போ. உடனே போகவேண்டும். அண்ணா எப்படியிருக்கிறாரோ?" என்று கூறி வேகமாகத் தன்னறைக்குள் நுழைந்தாள்.

பிற்பகல் மூன்று மணி சமயம். சித்தி தன் மகனை ரொட்டி சாப்படும்படி வேண்டிக்கொண்டிருந்தாள். பக்கத்திலுள்ள மாடிப்படியில் ஏறிச் செல்லும் ஹேமாவைக் கண்டதும் சித்தி ஆச்சர்யமடைந்து "நீ யாரம்மா?" என்றாள்.

"நான் ஒரு பரதேசி"—என்று கூறிய வண்ணம் மேலே போய்விட்டாள்.

குணேந்திரன் சுவர்ப்பக்கமாகத் திரும்பிப் படுத்துக்கொண்டிருந்தான். தூங்குகிறானா? விழித்திருக்கிறானா? என்று தெரியவில்லை. மெதுவாகத் தலைப்பக்கமிருந்த சாவிக்கொத்தை எடுத்து இடுப்பில் சொருகிக்கொண்டாள். மேஜையின்மீது சில மருந்து 'சீசா'க்கள் இருந்தன. அவற்றையெடுத்துப் பார்த்தாள். பதினைந்து தினங்களுக்கு முந்திய தேதியிலிருந்து எல்லாம் வெட்டவெளிச்சமாக தெரிந்துவிட்டன. பிறகு இரும்புப் பெட்டியைத் திறந்து 'செக்' புத்தகத்தை எடுத்துப்பார்த்தாள். எவ்வளவு செலவாகியிருக்கிறதென்று கூட்டிக் கொண்டிருந்தாள். இதற்குள் சித்தி வந்து விட்டாள்.

"யாரடி நீ! பெட்டியைத் திறக்கிறாய்?"

"உஸ்! கத்தாதே. அவர் தூங்கட்டும்."

"ஐயோ! திருடுகிறாளே!" "என்று கூச்சலிட்டாள். குணிபாபு புரண்டு படுத்தான். அவன் இவர்களைப் பார்ப்பதை இருவரும் கவனிக்கவில்லை. "நான் திறக்காவிட்டால் யார் திறப்பார்கள்? நீயா? யார் திருடி?" என்றாள் ஹேமா. குணிபாபு மெதுவாக—"ஹேம்! எப்பொழுது வந்தாய்?" என்றான். இப்பொழுதுதான் வந்துகொண்டிருக்கிறேன். நான் என் சொந்த அறையில் பெட்டியைத் திறந்தால் ஆக்ஷேபிக்கும் இவள் யார்? இவளை உடனே போகச் சொல்லு. இவைகள் யாவும் என்னுடையதென்பதை அவளுக்குத் தெரிவி." குணிபாபு சிரித்தான்—"ஓகோ! அந்த உறவினால்தான் இவ்வளவு நாட்களுக்குப் பிறகு பெட்டியைத் திறக்க வந்தாயோ?" என்றான்.

ஹேமா செக் புத்தகத்தைப் புரட்டியவண்ணம் "ஆம்." என்றாள்.

"யாரப்பா இது?" என்றாள் சித்தி.

"என் தங்கை"

இந்தப் பதிலைக்கேட்டதும் ஹேமா நடுங்கிவிட்டாள். பிறகு தலைநிமிர்ந்து குணேந்திரனைக் கண்கொட்டாமல் பார்த்தாள். மறுபடியும் தலை குனிந்தாள். சித்தி ஆச்சர்யத்துடன்—"எப்படி? இதுவரை நான் கேள்விப்படவேயில்லை?" என்றாள். "கோபித்துக் கொண்டு போயிருந்தாள் சித்தி! இவைகள் எல்லாம் அவளுடையவைதான்" என்று சுருக்கமாகச் சொன்னான்.

சித்திக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவள் இதை நம்பவுமில்லை. பேசாமல் கீழேபோய் விட்டாள். அவள் சென்றபிறகு குணேந்திரன் ஹேமாவைப் பார்க்காமலே— "ஹேமா! என் மரணத்தறுவாயிலாவது உன் மனதில் இந்த எண்ணம்வந்ததே? அதுவே..." இதைச் சொல்லிக்கொண்டே அவள் முகத்தைப் பார்த்த குணேந்திரன் பயந்துவிட்டான். அவள் முகம் வெளிறடைந்து சவம்போல் காணப்பட்டது. திடீரென்று ஒரு தபஸ்வியின் கோபத்தின் சாபத்தினால் கல்லாகிவிட்டவள்போல் காணப்பட்டாள்.

குணிபாபு பயந்துகொண்டே— "ஹேமா" என்றான். ஹேமா பதில் கூறவில்லை, அசையக் கூட இல்லை. கண்கொட்டாமல் தரையைப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

குணிபாபு மிகவும் வேதனையடைந்தான்— "ஹேமா, ஒரு விஷயம் கேளேன்" என்றான்.

ஹேமா அதற்குப்பதிலாக ஒரு பெருமூச்சு விட்டு அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

குணேந்திரன் மெதுவாகத் தட்டுத்தடுமாறிக் கொண்டே கட்டிலிலிருந்து இறங்கி, ஹேமாவின் அருகில் வந்து நின்றான். எதிரில் அவனைக்கண்டதும் ஹேமா புயற்காற்றைப்போல் வேகமாக அவன் கால்களில் விழுந்து பாதங்களில் முகத்தை வைத்துத்தேம்பி தேம்பி அழுதாள், "ஐயோ! நான் குற்றமற்றவள், என்னை எல்லோரும் தண்டிக்கிறார்கள். ஆனால் .... ஆனால்.... .... நீயும் தண்டிப்பாயா? இப்படியாகுமென்று நான் கனவிலும் நினைக்கவில்லையே?" என்று கதறினாள்.

குணேந்திரன் பேசவில்லை. கரிய மேகக் கூட்டத்தைப்போல் அவளுடைய கூந்தல் அவன் பாதங்களை மூடிக்கொண்டிருந்தது. அதைப்பார்த்துக்கொண்டே சிறிது நேரம் மௌனமாக நின்றான். பிறகு மெதுவாக உட்கார்ந்து ஹேமாவின் நெற்றியில் வலது க்கையை வைத்துச் சாந்தமான குரலில்—"ஹேமா! உனக்கு நான் என்ன தண்டனைகொடுப்பேன்? நீ என்னைக் காதலித்தாய். ஆகையால், நான் என்னைக்கூடத் தண்டித்துக்கொள்ள முடியவில்லை. இது தண்டனை யல்ல—சகோதரீ! நான்கு வருஷங்களாக அனுபவித்த பயங்கரமான துக்கத்திற்குப் பிறகும், இறப்பதற்கு முன்னுமாக எனக்குச் சாந்தி கிடைத்திருக்கிறது. அந்த பரிசுத்தமான—கிடைக்கமுடியாத — சாந்தியைக் கடைசி சமயத்தில் நான் உனக்குக் கொடுத்துச் செல்வேன். எழுந்திரம்மா! ஹேமா எழுந்திரு; நாம் காசிக்குச் செல்வோம்" என்று கூறினான்.

ஹேமா முகத்தை மூடிய வண்ணம் அழுது கொண்டே—"புறப்படு, போகலாம். ஆனால் ... ஆனால், இதுதான் உன்னுடைய கடைசியான உத்தரவா? இதை என்னால் சகிக்க முடியுமா?" என்றாள்.

"ஆம். ஹேமா கட்டாயம் உன்னால் சகிக்க முடியும், பிரிவில்தான் ப்ரேமை ஜ்வலிக்கிறது. ப்ரேமையை மகிமை பொருந்தியதாகச் செய்வதற்குப் 'பிரிவு' உன்போன்ற நிகரற்ற பாக்யசாலியின் வீட்டு வாசலில்தான் கையை ஏந்தி நிற்கிறது. தெரியுமா? ஹேம்! அது தோன்றி மறையும் அல்ப ஆயுளுள்ள, நிலையற்ற ப்ரேமையின் குடிசையருகில் அவமானத்தினால் போவதுகூடக் கிடையாது. இதை நீ அறியும்பொழுது கட்டாயம் உன்னால் இதைச் சகிக்கமுடியும். இன்பத்தைத் தேடி அலைவதில்தான் - கிட்டாத இன்பத்தில் தான்—அதைத் தொடர்ந்து செல்லும்வரையில் தான்—இணையற்ற ப்ரேமையின் உயிர் இருக்கிறது. இதன் மூலமாகத்தான் ப்ரேமை சாகா வரம்பெற்று, உலகத்தில் உலாவுகிறது. தெரியுமா! ஹேம்! ஆயிரக் கணக்கான யுகங்களாக எவ்வளவு காவ்யங்கள் எவ்வளவு இனிமையான, விலை மதிப்பற்ற கண்ணீரை—ப்ரேமையின் கண்ணீரை உள்ளடக்கிப் பிரகாசிக்கின்றன. பார்! ராதாவினுடைய—நூற்றுகணக்கான வருஷங்களாகப் பரவியிருக்கிற—விரஹ வேதனைதான்—வைஷ்ணவர்களுடைய உயிர். இல்லாமையில்தான்—ஆமாம்—ஹேமா! நீயே யோசித்துப் பார். குறைவில்தான் நிறைவு இருக்கிறது. இதைக் கேள். துக்கத்தில்தான் இனிமையிருக்கிறது. என்ன அப்படிப் பார்க்கிறாய் ஹேமா! ஆமாம் ப்ரேமையின் சந்திப்பு இல்லாதபோது தான் ப்ரேமை பரிபூர்ணமாயிருக்கிறது. இதை நீ அறியும்போது உன்னால் எல்லாம் சகிக்க முடியும். எழுந்து உட்காரு ஹேமா! போகலாம். இன்றைய தினமே நாம் காசிக்குச் செல்வோம். இன்னும் இருக்கும் சில நாட்களை உனனுடைய பகவானுக்குத் தொண்டு செய்வதில் கழிப்போம். நம்முடைய கடைசி ஆராதனை உன்னுடைய பகவானுடைய ஆசீர்வாதத்தினால் அக்ஷயமாக வளர்ந்து உன்னை வாழ்நாள் முழுவதும் நல்ல வழியில், சாந்தியுடனிருக்கச் செய்யடும்.

முற்றிற்று.

போன்: 66 தந்தி: 'FLOWER'

—: கமர்ஷியல் . எம்போரியம் :—

பட்டு, சுதேசி ஜவுளி வியாபாரம்,

பெரியகடைத்தெரு, : கும்பகோணம்.

நவநாகரீகம் பொருந்திய பட்டு & நூல் புதுரகச்சேலை தாவணி ரகங்களும், எங்கள் சொந்த கைத்தறிகளிலேயே தயாரிக்கப்படுவதால் மிக உறுதியாகவும் நீடித்த உழைப்புக்கு ஏற்றதாகவும் கெட்டிச் சாயத்திற்கு உத்தரவாதமுள்ளதாகவும் கிடைக்கும்.

தவிர பீஸ்குட்ஸ் ரகங்களும், வாயில், ஷர்ட்டிங், கோட்டிங், காடா பீஸ் முதலியவைகளும் சுதேசி ஜவுளி வகைகளும் கிடைக்கும்.

ஒருமுறை விஜயம் செய்து பார்க்கக் கோருகிறோம்.

Proprietors:

South India Corporation Madras Ltd.,

Chakrapaniswami Koil South Gate,

KUMBAKONAM.

பிசகு யார்பேரில்

"கௌரி"

மாலை நேரம். இருள் தலையைக் காட்டிக்கொண்டிருந்தது. கிட்டு இன்னும் ஆபீஸிலிருந்து திரும்பி வரவில்லை. வீட்டு முன் கூடத்தில் உட்கார்ந்துகொண்டு கமலம் எதோ எழுதிக்கொண்டிருந்தாள். புழக்கடைப்புறம் வேலைக்காரி பாத்திரங்களைத் தேய்த்து வைத்திருந்தாள். மீனா எல்லாவற்றையும் அலம்பிக்கொண்டிருந்தாள். குழந்தை தாரா தாழ்வாரத்தில் உட்கார்ந்தபடி அழுதுகொண்டிருந்தாள். கமலம் எழுதும் மும்முரத்தில் ஈடுபட்டிருந்தாள். இவை ஒன்றும் அவள் செவியில் விழவில்லை. அப்பொழுதுதான் ராமு பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்தான். கமலம் எழுதிக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு உள்ளேசென்றான். பாத்திரம் அலம்பிக்கொண்டிருக்கும் மீனாவிடம் சென்று "அம்மா, திங்கறத்துக்குப் பக்ஷணம்" என்றான். மீனா ஒரு விழிவிழித்தாள், கையில் வைத்துக்கொண்டிருந்த உருளியை, "ணக்" கென்று கீழே வைத்தாள். "ஆமாம் வந்துவிட்டாயோன்னோ, நீயும் நானும் பிறந்திருக்கிற சவரணைக்குப் பக்ஷணம் ஒன்றுதான் குறைச்சல் நமக்கு" என்று சொல்லிக்கொண்டே "படேர் படே"ரென்று குழந்தையின் முதுகில் இரண்டு அறை ஓங்கி அறைந்தாள். ராமு வாயைத் திறக்கவில்லை. கண்ணைக் கசக்கிக்கொண்டே கமலத்தினிடம் சென்றுவிட்டான். ஏதோ முணுமுணுத்துக்கொண்டே மீனா உள்ளே சென்றாள்.

சாதாரணமாய் மீனா எப்பொழுதுமே அவ்வளவு படபடப்பாய்ப் பேசும் வழக்கமில்லை. பொறுமைசாலிதான். மனதில் எதாகிலும் குறைதானோ என்றால் அதுதான் அவளிடம் கிடையாது. அதைக்கொண்டுதான் அவளைக் குணசாலியென்று சொல்லவேண்டும். "எல்லோரையும்போல் தன் புருஷனும் பெரிய உத்தியோகம் செய்யவில்லையே, பெரிய பங்களாவாய்க் கட்டிக்கொண்டு தான் நகையும் நட்டுமாய் இருக்கவில்லையே" என்ற அந்த அசட்டு எண்ணங்களும் அவளுக்கு இல்லை. மானிடப் பிறவியே நற்குணம், துர்க்குணம் இரண்டையும் பின்னிக்கொண்டேதான் எழும்புகிறதென்றாலும் இரு குணங்களின் இடையும் சமமாய் இருக்குமென்று எண்ணலாகாது. ஒன்று மற்றொன்றைத் தன் அடிமைப்படுத்தத்தான் செய்யும். இதை எடுத்துக்கொண்டால் மீனாவிடம் நற்குணங்களின் சுவையே அதிகமாய் இருந்தனவென்று சந்தேகமின்றிச் சொல்லலாம். அவளுடைய எளிய அந்தஸ்தும் இன்று அவளுக்குப் புதியதில்லை. இருந்தாலும் இந்த நாலைந்து நாட்களாய் மீனா எப்பொழுதும்போலில்லை. சற்று வித்யாசமாய்த்தான் இருந்தாள். பேச்சில் ஒரு படபடப்பு. முகத்தில் ஜொலிக்கும் கோபம். பொழுது விடிந்தால் குழந்தைகளுக்கு விழும் அடி கணக்குக்கிடையாது. பாத்திரம் பண்டங்களைக் கேட்கவேண்டாம், எல்லாம் தக்காளிக்காய்தான். கிட்டுவிலிருந்து வேலைக்காரி வரையிலும் எல்லோருக்கும் ஒரே அர்ச்சனை தான். வழக்கமாய் நித்தியம் மீனா ஒரு வேளையும் கமலம் ஒரு வேளையுமாகத்தான் சமைப்பார்கள். இந்த நாலைந்து நாட்களாய் மீனா அதையும் கமலத்திற்குவிடவில்லை, தானே செய்தாள். கமலம் கேட்டுக்கேட்டுப் பார்த்தாள். ஒரே பிடிவாதமாய் நின்றாள். அவள்தானென்ன செய்யமுடியும்? "என்ன கோபமோ குறையோ; எல்லாம் தணியட்டும்" என்று பொறுமையாய்த்தான் இருந்தாள். இன்று பள்ளிக்கூடத்திலிருந்து வந்த குழந்தையை இப்படி அடித்தது அவளுக்குப்பிடிக்கவில்லை. மீனாவின்பேரில் அடங்காத கோபம் தான் வந்தது. பெரியவர்களுக்கு ஆயிரம் இருக்கலாம். அதற்குக் குழந்தை என்ன செய்தது! என்பதுதான் அவளுக்கு. எழுதுவதை நிறுத்திவிட்டு எழுந்திருந்தாள்.

கிட்டுவும் மீனாவும் ஸம்ஸாரம் செய்யத் தொடங்கிப் பன்னிரண்டு பதின்மூன்று வருஷங்களும் ஓடிவிட்டன. ஏழு வயது நிறைந்த "ராமு" தான் அந்தச் சம்சாரகௌகத்தின் முதல் துடுப்பு-குழந்தை தாரா இரண்டாவது. உத்தியோகத்தில் கடையது குமாஸ்தா உத்தி

யோகம்" என்பதுதான் உலகத்தின் நிர்ணயம். நம் கிட்டுவும் அதைச் சேர்ந்த ஒரு குமாஸ்தா தான். இருந்தாலும் உள்ளதை வைத்துக் கொண்டு திருப்தி அடைபவன் கிட்டு. கத்தை கத்தையாய் எழுதித்தள்ளும் அலுப்புப் பிடித்த இவ்வுத்தியோகத்தினிடையில் அல்ப ஸந்தோஷப்படகைச் செலுத்திச் செல்லும் துடுப்பு அவன் கையில் இருந்தது. தமிழ் மொழி என்றால் அவனுக்கு உயிர். அதிலும் கவிதை என்றால் அப்படியே உட்கார்ந்துவிடுவான். பாட்டுக்கள் இயற்றும் ஒரு சக்தியும் அவனுக்குத் துணைநின்றது. ஆபீஸ் வேலை தலை போனாலும் ஸரி, பாட்டு இயற்றுவதை அவனால் நிறுத்த முடியாது. ஏதாவது எழுதிக் கொண்டே இருப்பான். வீட்டிற்கு வரவேண்டியதுதான், மீனாவிற்கு வாசித்துக் காண்பித்துச் சந்தோஷப்படுவான். மீனா ஒரு நாள் கேட்பாள், ஒரு நாள் கேட்கமாட்டாள். சொல்வதைக் கேட்டு அனுபவிப்பவர் ஒருவர் இருந்தால்தானே அவனுக்குத் திருப்தி? இந்த விஷயத்தில் கமலம் வந்தது அவனுக்குப் பரம திருப்தி. அவன் ஒன்று எழுதுவான், கமலம் ஒன்று கேட்பாள். வீட்டில் அமர்க்களம்தான். உட்கார்ந்துகொண்டுவிட்டார்களானால் மணியே கிடையாது. மீனாவிற்கு இதெல்லாம் ஒன்றும் பிடிக்காது. தூக்கம்கூட வந்துவிடும். "அதெப்படியாவது போகட்டும், நம்மால் இல்லை" என்று சில நாட்கள் படுத்துக் கொண்டு தூங்கிக்கூடப் போய்விடுவாள். பிறகு மீனாவிற்கும் கிட்டுவுக்கும் சாதம்போடுவாள் கமலம்.

கமலமும் மீனாவும் சகோதரிகள். இரண்டு பேருக்கும் இரண்டு மூன்று வயது வித்தியாசம் இருக்கலாம். ஒரே வயிற்றில் பிறந்தவர்களாயினும் குணத்தில் வித்தியாஸம் அதிகம் என்றே சொல்லவேண்டும். கமலத்திற்கு இந்தக்காலத்து நாகரிகம் என்றால் சற்றுப் பிரியம். மீனாவிற்கு இதெல்லாம் பிடிக்காது. "ஆமாம், அலங்காரம் செய்துகொண்டுவிட்டால் ஆய்விட்டதாக்கும்"? என்று சொல்லிவிடுவாள். கமலத்திற்கு எல்லாவற்றிலும் ஆசை. படிப்பு, பாட்டு, வெளியில் போவது பேசுவது என்றால் போதும். ஏதோ தனக்குத் தெரிந்த படிப்பை வைத்துக் கொண்டு வெகு தூரம் வரையில் அதை விருத்தி செய்திருந்தாள் என்றே சொல்ல வேண்டும். இதிலும் மீனா நேர் விரோதம். புத்தகம் என்றால் அவளுக்குத் தூக்கம் வந்துவிடும். வீட்டு வேலையுண்டு அவள் உண்டு. அவளுக்கு இவ்வளவுதான் தெரியும். பண்டங்களைப் பாழ் செய்யக்கூடாது, செட்டும் கட்டுமாய்க் குடித்தனம் செய்யவேண்டும். பிறரிடம் போய்ப் பல்லை இளிக்காமல் கையில் இரண்டு காசு சேர்த்து வைத்துக்கொள்ளவேண்டும். அவளுக்கு வேண்டியது இவ்வளவுதான். கிட்டுவிற்கும் இந்த விஷயத்தில் மிகுந்த பெருமைதான். கமலம் வந்த புதிதில் இருவருக்கும் சற்றுச் சங்கோசமாய்த்தான் இருந்தது. ஆனால் அவள் வந்து மாதம் ஒன்று ஓடிவிட்டது. வீட்டிலோ வேறு இடம் கிடையாது. எல்லோரும் ஒரே இடத்தில்தான் கோலாட்டம்போட்டாக வேண்டும். கமலத்தின் சங்கோசம் இரண்டே நாட்கள்தான்—பறந்துவிட்டது. "பார், உன் தங்கை எவ்வளவு செட்டும் கட்டுமாய்க் குடித்தனம் செய்கிறாள்?" என்று கமலத்தினிடம் சொல்லி மகிழ்ந்துபோனான் கிட்டு. இப்பழைய நாட்கள் ஓடியதே தெரியவில்லை. இந்த ஒரு வாரமாய்த்தான் கமலத்திற்கும் மனம் சற்றுக் கலங்கியது.

அழுதுகொண்டிருந்த ராமுவைச் சமாதானப் படுத்தினாள். உள்ளே சென்று ஒரு கை சீடையை அள்ளி அவன் பையில் போட்டாள். குழந்தை தாராவிடமும் இரண்டு போட்டுவிட்டுச் சமையலறைக்கு வந்தாள். மீனா அப்பொழுது தான் அடுப்பு மூட்ட வந்துகொண்டிருந்தாள். "ஏன் மீனா? நானும்தான் பார்த்துக்கொண்டே இருக்கேன். குழந்தைகளைப் போட்டு ஏன் இப்படி அடிக்கிறாய்? குடித்தனத்தில் நமக்கு எவ்வளவோ இருக்கும். எதுவாய் இருந்தாலும் பொம்மனாட்டியா பொறந்தவாளுக்குக் கொஞ்சம் பொறுமை வேண்டாமோ? குழந்தைகள் என்னத்தைக் கண்டது பாவம்?" என்று அவளைச் சற்றுச் சமாதானப்படுத்த ஆரம்பித்தாள்.

மீனாவுக்கு நாலைந்து நாட்களாய்க் கனிந்து புகைந்துகொண்டிருந்த கோபம் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. அவளால் அடக்க முடியவில்லை. கமலத்தினிடம்தான் பேசுகிறோம் என்பதும் மறந்துபோய் விட்டது. கையில் வைத்துக்கொண்டிருந்த இரண்டு விறகுகளையும் "தடே"ரென்று கீழே போட்டாள். "ஆமாண்டியம்மா, நீங்கள்ளாம் ரொம்பப் படிச்சவா, ரொம்ப சமத்து, பொறுமையாய் இருக்கவும் உங்களுக்குத்தான் தெரியும், நான் அசடுதானே? எனக்கு என்ன தெரியும்?" என்று அவள் பேரில் எரிந்துவிழுந்தாள். 'படிப்பிற்கும் இதற்கும் என்ன வந்தது? என்ன இப்படி எல்லாம் பேசுவது?' என்று நினைக்கும்பொழுது கமலத்திற்கும் கோபம்தான் வந்தது. "உனக்குப் பழக்கத் தெரியாதென்று யார் சொன்னது, மீனா? இதெல்லாம் என்ன அசட்டுத்தனம்? இதெல்லாம் குழந்தைகள் பேரிலா காண்பிப்பது? ரொம்ப நன்றாய் இருக்கு, போ. என்ன சொன்னாலும் கேட்க மாட்டேனென்கிறாய்? பிடிவாதம் பிடித்துக்கொண்டு இரண்டு வேளையும் சமைத்தால் தள்ளுமோ உனக்கு? தள்ளவில்லையாக்கும். போய்ப் பேசாமல் படுத்துக்கொள், நான் சமைக்கிறேன்" என்றாள்.

"ஆமாம், படுக்கை வேறு வைத்திருக்கா எனக்கு? வந்தவர்களுக்கும் போனவர்களுக்கும் சமைத்துப் போடவேண்டியது. வாய் திறக்கப்படாது. இதைத்தவிர இந்த வீட்டில்

எனக்கு வேறு என்ன பாத்தியம்? என்னைப் போல் ஒரு அசடு இருந்தால்தானே கவலையில்லாமல் கூத்தடிப்பவர் கூத்தடிக்கலாம். படிப்பவர் படிக்கலாம், கேட்பவர் கேட்கலாம், எனக்கும் இரண்டு எழுத்துத் தெரிந்திருந்தால் இப்படியிருக்குமா? நானும் எங்கு வேணுமானாலும் போகலாம், யாருடன் வேணுமானாலும் பேசலாம். அப்பொழுது அலக்ஷ்யம் செய்வார்களா எல்லாரும் என்னை? தூக்கித்தான் தலையில் வைத்துக்கொள்வார்கள்" என்று கோபத்தோடு மேன்மேலும் அடுக்கிக்கொண்டே போனாள் மீனா.

இதைக் கேட்டாளோ இல்லையோ கமலம் அப்படியே தூணாய்ச்சமைந்து நின்றுவிட்டாள். மீனாவினுடைய கோபத்திற்குக் காரணம் இப்பொழுது அவளுக்குப் பளிச்சென்று விளங்கியது. அவளுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் கூரிய ஈட்டிபோல் உள்ளத்தில் பாய்ந்தது. வீட்டில் ஒருவர்பேரிலும் குற்றமில்லை. கிட்டுவின்பேரிலும் குற்றமில்லை. எல்லாவற்றிற்கும் தானே காரணம் என்று மனதில் நிச்சயப்படுத்திக்கொண்டாள். இங்கு வந்து மாதம் ஒன்று ஓடியது அவளுக்குத் தெரியவில்லை. இந்த ஒரு க்ஷணம் அவள் முன்பு ஓர் யுகம் போல் நின்றது. அவள் எதை வெண்டுமானாலும் சொல்லட்டும். அசடு, கைச்சமையலைப் பிடுங்கிச் செய்யலாம் என்று நினைத்தாள். ஆனால் மறுகணம் அவளையும் அறியாத ஓர் வேதனை வந்து அவளைச் சூழ்ந்துநின்றது. மீனாவின்பேரில் உள்ளத்தில் கனிந்திருந்த அன்பு கலங்கி வெறுப்பாக மாறியது. இனி அவ்விடம் ஒரு கணம் தங்குவதும் பிசகென்று உள்ளம் சுட்டிக்காட்டியது. மீனாவிடம் மேலே ஒன்றும் பேசவில்லை, சாமான் வைத்திருக்கும் அறைக்குச் சென்றாள். இறைந்துகிடந்த தன் சாமான்களை எடுத்துவைக்க ஆரம்பித்தாள்.

விளக்கும் வைத்துவிட்டது. கிட்டு ஆபீஸிலிருந்து வர அன்று சற்று நேரம்தான் பிடித்தது. வரும்பொழுது எப்பொழுதும்போலக் கையில் ஒரு காகிதக் கட்டுடன் வந்தான். கூடத்தில் ஒருவரையும் காணவில்லை. மீனா சமையலறையில் இருந்தாள். முன் அறையில் கமலம் படுக்கை கட்டிக்கொண்டிருந்தாள். "இதோ பார், இன்று ஒரு புதிய பாட்டுக்கட்டியிருக்கிறேன், உனக்கு நிரம்பப் பிடிக்கும், படித்துப்பார்" என்று சொல்லிக்கொண்டே கையிலிருந்த காகிதத்தைக் கமலத்தினிடம் நீட்டினான் கிட்டு. கமலத்தின் முகம் வாடியிருந்ததை அவன் கவனிக்கவில்லை. அவள் அவன் கொடுத்த காகிதத்தையும் வாங்கிக்கொள்ளவில்லை. "நான் இந்த வண்டியில் ஊருக்குப் போகிறேன்" என்றாள்,

கிட்டு :— "ஏன் திடீரென்று? ஊரிலிருந்து ஏதாவது கடிதம் வந்ததா?"

கம:— "ஆம்."

"ஆனால் தனியாகவா போகப்போகிறாய், நான் வேண்டுமானால் கொண்டுபோய்விட்டுத் திரும்பி வந்துவிடுகிறேன்." என்றான் கிட்டு. கமலத்தின் கலங்கிய உள்ளத்தை மற்றோர் முறை அடியோடு கலக்கினான் அசட்டுக் கிட்டு. "பைத்தியமே உனக்கென்னதெரியும் நடந்த விஷயம்?" என்று கேட்டுக்கொண்டிருந்தது கமலத்தின் உள்ளம்.

"வேண்டாம் நீங்கள் சிரமப்படவேண்டாம், மீனாவையும் குழந்தையும் தனியாக விட்டுவிட்டு நீங்கள் வரவேண்டாம். தெரிந்தவர்கள் போகிறார்கள்; அவர்களுடன் போய்விடுகிறேன்" என்றாள் அவள்.

"எவ்வளவு கவலை தங்கையைப்பற்றி" என்று சிரித்தான் கிட்டு. "ஆமாம்" என்றாள் அவள். கண்ணீரால் நிறைந்த அவளுடைய விழிகள் ஒரு முறை கிட்டுவைச் சுழன்று வந்தன. மேலும் அவள் அங்குத் தாமதிக்கவில்லை. மளமளவென்று உள்ளே சென்றாள். ஓர் இலையை எடுத்துப் போட்டுக்கொண்டாள். "நாளைக்கு வேணுமானால் போகலாமே கமலம்" என்றாள் மீனா. அவள் வார்த்தைகளில் ஒரு அனுதாபமும் சேர்ந்து தொனித்தது. "இல்லை, நல்ல துணையாய் அகப்படும்பொழுது போய்விடுகிறேன்" என்றாள் கமலம். மீனா பரிமாறினாள். கமலம் தலையைக் குனிந்தபடியே பலவந்தமாய் ஆகாரத்தை உள்ளே செலுத்தினாள்.

கமலம் ரயிலுக்குக் கிளம்பிவிட்டாள். தான் ஆவலுடன் கொண்டுவந்த புதுப்பாட்டைக் கமலம் வாசிக்கவில்லையே என்று கிட்டுவிற்கு மிகுந்த வருத்தம். இனிமேல் அவ்வளவு சிரத்தையுடன் அவன் பாட்டுக்களை யார் படிக்கப் போகிறார்கள். அதுதான் அவனுக்கு வருத்தம். கிட்டு ரயிலடிக்கும் வந்திருந்தான். வண்டி புறப்படும் சமயம் தன் கையிலிருந்த காகிதச் சுருளைக் கமலத்தினிடம் கொடுத்தான். அவளுடைய கரங்களும் அதை மறுக்கவில்லை. அதைப் பற்றித்தான் கிட்டுவிற்கு அளவிலாத ஸந்தோஷம். அவளை அனுப்பிவிட்டு வீடு வந்து சேர்ந்தான்.

சாப்பாடும் முடிந்தது. வந்து படுத்துக்கொண்டான். அருகில் குழந்தைகள் இரண்டும் தூங்கிக்கொண்டிருந்தன. கிட்டுவின் மனதில் சொல்லமுடியாத ஓர் வேதனை குமுறிக்கொண்டிருந்தது. அவனுக்கே ஒன்றும் விளங்கவில்லை, அறையில் கொளுத்திவைத்திருந்த ஊதுவத்தியின் மணம் "கம்"மென்று சூழ்ந்துநின்றது. வேலைகளை முடித்துக்கொண்டு வெற்றிலைத் தாம்பாளத்துடன் பாலையும் எடுத்துக்கொண்டு மீனா வந்தாள். அவள் தலையில் சூட்டியிருந்த மல்லிகை மலர் வத்தியின் மணத்துடன் கலந்து வீசியது. அவள் அறையிலிருந்த சேலை

யும் விசாலமான நெற்றியில் அகலமான குங்குமப் பொட்டும் அவளுடைய அழகை மேலும் சோபிக்கச் செய்தன. சின்றபடியே கிட்டுவின் கையில் பாலைக்கொடுத்தாள்—"சுள்" ளென்று ஏதாகிலும் கோபிக்கப் போகிறாளே என்று சற்றுப்பயமே அவனுக்கும். பாலை வாங்கிக் கொண்டான்.

"உட்காரேன் மீனு" என்று சொல்லிவிட்டு அவள் முகத்தைப் பார்த்தான். இரண்டு நாட்களாய் அவளுடைய முகத்தில் நிறைந்து வீசிய கோபத்தின் இடத்தை இப்பொழுது புன்னகை ஆக்கிரமித்துக்கொண்டிருந்தது. "என்ன? அப்படிப் பார்க்கிறீர்களே? புதிய மீனு வந்துவிட்டாளா என்ன? என்றாள்.

கிட்டு:— "இல்லை, இல்லை, கோபம் எப்படியிருக்கிறதென்று பார்த்தேன். அவ்வளவுதான். அப்பா! இவ்வளவு கோபமா? அப்படி என்ன தப்பிதம் செய்துவிட்டேன் மீனு?"

மீனு:— "எல்லாம் நீங்களே யோசித்துப் பாருங்கள், உங்களுக்கே தெரியும்."

கிட்டு:— "அதுதானே சங்கடம், யோசித்து யோசித்துப் பார்க்கிறேன், தெரிந்தால் தானே? அதிருக்கட்டும் மீனு, கமலம் திடீரென்று ஊருக்குப் போய்விட்டாளே? ஊரிலிருந்து கடிதம் ஏதாவது வந்ததா?"

சடக்கென்று என்ன கூறுவது என்று மீனுவுக்குத் தெரியவில்லை. சற்றே தயங்கினாள். "கடிதம் ஒன்றும் வரவில்லை" என்றாள் மெதுவாக. இதற்காகப்பொய்யா சொல்வது?

கிட்டு:— "அப்படியானால் பொய்யா சொன்னாள்? சொன்னால் நான் தடுத்துவிடுவேன் என்று அப்படிச் சொன்னாள்? நீயாவது சொல்லக்கூடாதா? இன்னும் பத்து நாட்கள் கழித்துப் போகலாம் என்றுசொல்லி இருப்பேனே."

மீனு மௌனமாய் நின்றாள். அவள் மனதில் ஏதேதோ எண்ணங்கள் ஒன்றின் மேலொன்று தடுமாறி விழுந்தன. "நான்தான் கோபித்துக் கொண்டேன்" என்றாள்.

ஒரு குலுக்கல் குலுக்கியது கிட்டுவுக்கு.

கிட்:— "கோபித்துக்கொண்டாயா ஏன்?"

மீனு:— "ஆமாம். இன்னொருத்தியாய் இருந்தால் இதை எல்லாம் பார்த்துக்கொண்டிருப்பா, கோபித்துக்கொள்ளாமல் வேறு என்ன செய்வாளாம்? வாயை மூடிண்டு பார்த்துக் கொண்டிருப்பாளோ?"

கிட்டு:-"அப்படி என்ன தலைமுழுகிப்போகிற காரியம் நடந்துவிட்டது? நடந்ததைச்சொல்லாமல் முண முணவென்றால் யாருக்குத் தெரியும். வந்தவளைக்கோபித்துக்கொண்டாளாம். நிரம்ப நன்றாய் இருக்குப் போ."

மீனு:— "ஆமாம்? நீங்கள் செயவதுதான் ரொம்ப நன்றாய் இருக்கு! எனக்கு மானம் போகிறது. ஊரார் வாயை மூடிக்கொண்டா இருப்பா? சிரிக்கமாட்டாளோ? நல்லதைச் சொன்னால் என்னமோ என்மேல் சீறி விழுகிறீர்களே, ரொம்ப நன்றாய்த்தான் இருக்குப் போங்க."

கிட்டு:— "போதும் போதும், புத்தி சொல்ல வந்துவிட்டயோ எனக்கு? அதிகமாய்ப் பேசாதே தெரியுமா? வந்தவளைக் கோபித்துக் கொண்டு ஊருக்கு விரட்டினளாம்! என்னமோ குதிக்கிறயே கிடந்து?—எனக்கு மட்டும் கோபம் வராது என்று நினைத்துக்கொண்டாயோ? எதற்காகக்கமலத்தைக் கோபித்துக்கொண்டாய்? என்ன செய்துவிட்டாள் அப்படி?"

மீனு:— "என் வாயைக் கிண்ட வேண்டாம். தெரியுமா? பேசாமல் பொறுமையாய் இருந்தால் என்னமோ ரொம்ப விரட்டுகிறீர்களே? எனக்கு ஒன்றும் தெரியாது பச்சைக்குழந்தை என்று நினைத்துக்கொண்டு விட்டீர்களோ? எனக்குப் பிடிக்கவில்லை கோபித்துக்கொண்டேன். நீங்கள் என்னமோ அப்படி உருகிப் போகிறீர்களே? அப்பாடா! ...." என்று ஓயாமல் படபடவென்று அடுக்கிக்கொண்டே போனாள். பால்போன்ற முகத்தில் இரத்தம் குழம்பியது. சற்றுப்படிந்திருந்த கோபம் மறுபடியும் படபடத்தது. கிட்டுவிற்கு ஒன்றும் விளங்கவில்லை. படுத்துக்கொண்டிருந்தவன் எழுந்து உட்கார்ந்தான்.

"மீனு, இதோ பார்-நம்முடைய கோபம் தாபம் எல்லாம் கிடக்கட்டும். வந்தவளை இப்படியா செய்து அனுப்புவது? நன்றாய் இருக்காது? அப்படித்தான் அவள் என்ன செய்து விட்டாள்? அதையாவது சொல்லு". என்று அவளைச் சற்று சமாதானப்படுத்த முயன்றான். மீனுவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. "நன்றாய் இருக்குமா? நன்றாய்த் தான் இராது. அதற்கு நானு பாத்தியம்; பிசகு யார்பேரில் என்று பார்க்கிறது தானே? நானும் வந்து இவ்வளவு வருஷமாச்சே; ஒரு நாள் ஒரு வேளை என்னை எங்கேயாவது அழைத்துப் போனதுண்டா? ஏதாவது ஒரு நல்லது பொல்லாததைச் சொன்னதுண்டா? என்னமோ பிரமாதப்படுத்துகிறீர்களே? இவ்வளவு பாட்டுப் படித்துப் படித்து ஆனந்தப்படுகிறீர்களே,ஒரு வார்த்தை, ஆசையுடன் எனக்குப் படித்துக்காண்பிக்கிறீர்களா இதுவரையில்? எல்லாம் நீங்களே யோசித்துப்பாருங்கள். எனக்கும் தஸ்புஸ் என்று இரண்டு எழுத்து தெரியவில்லைஎன்றுதானே இவ்வளவும் எல்லோரும் சின்னத்தனப்படுத்துகிறீர்கள்? நானும்தான் கவனித்துக்கொண்டே இருக்கிறேன். ஒருமாத

ஜம்மியின் லிவர்க்யூர் மூலம் புனர்ஜன்மம்

ஜம்மியின்
லிவர்
க்யூர்

• குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி நோய்களை குணப்படுத்துவதில் தாமதமோ, அசட்டையோ செய்வது ஆபத்தாகும். நோய் கண்ட மாத்திரத்தில் 36 வருஷ காலமாக கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.

• எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்,
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்,
மற்றும்:-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

மாச்சு, வேறு வேலைகிடையாது—பொழுது விடியவேண்டியதுதான் எதற்கு எடுத்தாலும் கமலம்! கமலம்! கமலம்! கமலம்! எல்லாம் யார்பேரில் பிசகு. என்னை ஒன்றும் நல்லதனப் படுத்தவேண்டாம்; எல்லாம் அவளையே......'' என்று ஆத்திரத்துடன் படபடவென்று அடுக்கிக்கொண்டே போவதற்குள் கிட்டு அவள் வாயைப்பொத்தினன். அவளுடைய வார்த்தைகள் அவனுக்குக் கோபத்தை உண்டாக்கவில்லை, சிரிப்பைத்தான் உண்டாக்கின.

கி:— "அசடே போ, இதை மனதில் வைத்துக்கொண்டா இவ்வளவு உறுமிக்கொண்டிருந்தாய்? என்னிடம் ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? அவளுக்கு எவ்வளவு வருத்தமிராது? நினைத்துப்பார்.''

மீனுவின் கண்களில் மிதந்து கொண்டிருந்த கண்ணீர்த் துளிகள் இரண்டு அவனுடைய கைகளில் உதிர்ந்தன. "வாஸ்தவமாய் நீங்களே யோசித்துப் பாருங்கள்: கமலம் வந்தாலும் வந்தாள், என்னைத் திரும்பிப் பார்த்தீர்களா நீங்கள்?'' என்று ஆரம்பித்தாள் அவள். அவளுடைய வார்த்தையில் அளவில்லாத ஓர் அன்பும் துக்கமும் பொங்கி வந்தன.

"பைத்தியமே போ'' என்றது கிட்டுவின் வாய். மீனுவை நோக்கிப் பறந்துகொண்டிருந்தன அவனுடைய கரங்கள். எதிரில் வைக்கப் பெற்றிருந்த பாலினல் மீனுவின் கோபாக்கினியைத் தணித்தான் கிட்டு. கமலத்தின் வாடிய முகம் அவனுடைய அகக்கண் முன்பு தோன்றிக்கொண்டிருந்தது. இந்நிகழ்ச்சி தொடங்கி வெகுநேரமாகிவிட்டதென்று அறிக்கை இடுபவன்போல் அம்புலி ஜன்னலின் வழியே எட்டிப் பார்த்தான். சந்தேக அலைகளினல் மோதப்பெற்று மீண்டுவந்த மீனு கிட்டுவின் கரங்களில் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தாள். கிட்டுவிற்குத்தூக்கம் வரவில்லை. "பிசகு யார்பேரில்''? என்று அவன் உள்ளம் அவனைக் கேட்டுக்கொண்டிருந்தது.

குரல் பயிற்சியும் :: :: தானம் பாடுவதும்

ஆர். கே. விசுவநாதன்

●

ஒலிகளினால் ஏற்படும் இன்ப உணர்ச்சியைத்தான் பொதுவாக நாம் ஸங்கீதம் என்று கொள்கிறோம். வீணைக்கம்பி துடித்து ஒலியை எழுப்புவதிலிருந்து ஒலிகளெல்லாம் துடிக்கும் பொருள்களிலிருந்து வெளிப்படுகின்றன என்பது தெளிவாகும். இவ்வாறு வெளிப்படும் ஒவ்வொரு ஒலிக்கும் ஒரு சுருதி உண்டு. இது பொருளின் துடிப்பு வேகத்தைச்சார்ந்தது. ஒரு ஸெகண்டிலே ஏற்படும் துடிப்புக்களின் எண்ணிக்கையைத்தான் நாம் சுருதி என்று கொள்ளுகிறோம். கட்டிப் பொருள், திரவப்பொருள், வாயுப்பொருள் என்ற மூவகைப் பொருள்களும் துடித்து ஒலியை எழுப்பும். ஆனால் துடிக்கும் பொருள் வாயுப்பொருளானால் இத்துடிப்புக்களை நாம் எளிதில் பார்க்க முடியாது. தக்க பரிசோதனைகளினால் காட்டலாம். ஒவ்வொரு ஒலிக்கும் சுருதியைத்தவிர முழக்கம், பண்பு என்ற அம்சங்களும் உண்டு. ஒரே சுருதியும் முழக்கமும் கொண்ட பல ஒலிகள் பலவேறு கருவிகளிலிருந்து தோன்றும்போது, அவற்றை வேறுபடுத்தி அறிவதற்குக்காரணமாய் இருக்கும் ஒலியின் சிறப்பியல்புகளே அவற்றின் பண்பு எனப்படும். புல்லாங்குழலின் ஒலியும் பிடிலின் ஒலியும் ஒரே அளவு சுருதி, முழக்கம் கொண்டிருந்தாலும் அவற்றின் பண்பு வேறுபடுகின்றன. மனிதனுடைய குரலின் பண்பு இவையிரண்டினின்றும் வேறுபடுகிறது. இப்பண்பு வேற்றுமை எதனால் ஏற்படுகின்றது என்று கவனிப்போம். ஒவ்வொரு ஒலியிலும் ஓர் மூல சுருதியுடன் பல்வேறு பரிவார சுருதிகள் கலந்து இருப்பதை உணர்ந்தார்கள். இப்பரிவார சுருதிகள் சூழ்ந்திருப்பதைக்கொண்டே ஒவ்வொரு ஒலியின் பண்பும் நிர்ணயிக்கப்படுகிறது. மனிதனது குரல் எல்லாவித வாத்தியங்களின் ஒலியைக்காட்டிலும் உன்னதமான பண்பைப் பெற்றிருப்பதற்கு வாய், தொண்டை, மூக்கு முதலிய உறுப்புக்களின் பயிற்சியே காரணமாயிருப்பதை உணர்ந்து, குரலைச் செவ்வனே திருத்துவதற்கு முக்கியமாகத் தானம் பாடுவதை நம்முன்னோர்கள் அமைத்திருக்கிறார்கள். தானம் பாடும் விதத்தைக் கவனிக்குமுன் பாடுவதற்கு உடலில் அமைந்துள்ள உறுப்புகளைக் கவனிப்போம்.

நாம் மூக்கினால் உட்கொள்ளும் காற்று, தொண்டைக்குட்சென்று சுவாசக் குழாய்க்குள் புகும். இச்சுவாசக்குழாய் மார்பினுள் இரண்டு கிளைகளாகப் பிரிகின்றது. அவற்றுள் ஒரு கிளை வலது பக்கத்தில் அமைந்துள்ள சுவாசப்பைக்கும், மற்றொரு கிளை இடது பக்கத்தில் அமைந்துள்ள சுவாசப்பைக்கும் செல்லுகின்றது. இச் சுவாசப்பைகளைத் தாங்கி நிற்க உடலிலே உறுதியான தசை ஒன்று உண்டு. அதற்கு இடைப்பரப்பி என்று பெயர். இதன் மத்தியபாகம் உயர்ந்து வில்லைப்போல் வளைந்திருக்கும். இத்தசைக்கு ஈரல்தாங்கி என்ற மற்றொரு பெயரும் உண்டு. நிற்க, சுவாசப்பைகள் அல்லது நுரை ஈரல்கள் விலா எலும்புகளினாலும் முதுகு எலும்புகளினாலும், மார்பெலும்பினாலும் அமைக்கப்பட்டுள்ள கூடு ஒன்றில் இருக்கின்றன. நாம் காற்றை உட்கொள்ளும்போது - நம்முடைய விலா எலும்புகள் சற்று மேற்பக்கமாகவும் முன்பக்கமாகவும் இழுக்கப்படுவதை உணரலாம். இவற்றை ஒன்றோடொன்று சேர்க்கும் தசைகள் சுருங்குவதால் இவ்வியக்கம் ஏற்படுகிறது. இதே சமயத்தில் இடைப்பரப்பி கீழே இழுக்கப்பட்டு, தட்டையாகி அதனால் அதன்மீது நிற்கும் நுரை ஈரல்கள் விரிவடைகின்றன, எனவே அவற்றிலுள்ள காற்றின் இறுக்கம் குறைவுபட நாம் சுவாசித்த காற்று உட்செல்லுகிறது. பின்னர் விலா எலும்புகளுக்கு இடையிலுள்ள தசைகளும், இடைப்பரப்பியும் தளர்கின்றன. அதனால் நுரை ஈரல்கள் சுருங்குகின்றன. அப்பொழுது அவற்றிலுள்ள காற்றின் இறுக்கம் அதிகமாகி வெளியே தள்ளப்படுகிறது. இதுதான் நாம் சுவாசம் விடும் முறை. நாம் நன்றாகச் சுவாசிக்க வேண்டுமென்றால் இடைப்பரப்பி நன்றாக மேலெழுந்து கீழிறங்கவேண்டும்.

இனி, வாய், தொண்டை இவற்றின் அமைப்பைக் கவனிப்போம். நாக்கினால் தடவிப் பார்த்து மேல் வாயின் முன் பாகம் கடினமாயும் பின் பாகம் தொண்டைவரையில் பரவியிருப்பதையும் கவனிக்கலாம். தொண்டையின் மேல் பக்கம் ஒரு குழாய்போல் அமைந்து, மூக்கையும், வாயையும் இணைப்பதைக் கவனிக்கவும். இதற்கு ஆங்கிலத்தில் (Pharynx)

பாரின்க்ஸ் என்று பெயர். இதன் அடிப்பக்கம் முன்புறத்தில் (Larynx) லாரின்க்ஸ் என்று சொல்லப்படும் ஒலிப்பெட்டிவரையிலும் பின்புறத்தில் உணவுக்குழல் வரையிலும் வியாபித்திருப்பதையும் உணரலாம். நாம் உட்கொள்ளும் காற்றை ஒலிப்பெட்டியின் மூலமாய்ச் சுவாசக் குழாய்க்கும், நாம் உட்கொள்ளும் ஆகாரத்தை உணவுக் குழலுக்கும் அனுப்புமாறு தொண்டையின் தசைகள் அமைந்திருக்கின்றன. எனவே நாம் சுவாசம் விடும் காற்று ஒலிப்பெட்டியிலிருந்து வந்து தொண்டை, வாய், மூக்கு வழியாக வெளிப்படவேண்டும் என்று அறியலாம். ஒலிப்பெட்டி சுவாசக் குழாய்க்குச் செல்லும் வழியில் இருப்பதைப் பார்த்தோம். அது அமைப்பில் ஒரு முக்கோணத்தை ஒத்திருக்கும். இம்முக்கோணத்தின் முனை சிலருக்குக் கழுத்தில் நன்றாக நீட்டிக்கொண்டிருக்கக் காணலாம். ஒலிப்பெட்டி நான்கு குருத்தெலும்புகளால் ஆக்கப்பட்டது. அதனுள் குரல் நாண்கள் என்ற இரண்டு பிகுவான சன்னத் தோல்கள் இருக்கின்றன. இவை பக்கவாட்டத்தில் தசைகளினால் இழுக்கப்பட்டுச் சுவாசக் குழாயின் துவாரத்தைக் கதவுகள்போல் மூடிக்கொண்டிருக்கின்றன. இந்நாண்கள் விலகி இருக்கும்பொழுது உண்டாகும் சந்து குரல் வளைவாய் என்று கூறப்படும். லாரின்ஜாஸ்கோப் என்ற கருவியினால் பரிசோதித்துப் பார்த்ததில் ஒருவர் பேசாமல் சுவாசித்துக்கொண்டிருக்கும்பொழுது குரல் நாண்கள் விலகி, குரல்வளைவாய் ‘V’ வடிவங்கொண்டிருப்பதைக் கண்டார்கள். அப்பொழுது குரல் நாண்களின் தசைகள் நெகிழாமல் இருப்பதையும் கண்டார்கள். ஆனால் பேச முயற்சி செய்தவுடன் குரல்நாண்களின் தசைகள் நெகிழ்ந்து குரல்வளைவாய் சிறியதாய்விடுவதைக் கண்டார்கள்.

இப்பொழுது சங்கீத வாத்தியங்களின் முக்கிய அம்சங்களைப்பற்றிச் சிறிது விசாரிப்போம். சங்கீத வாத்தியங்களில் அனேகவிதம் இருப்பதை அறியலாம். அவைகளில் பல சுருதிகளை அடுத்தடுத்து எழுப்புவதற்கும், அவ்வொலிகளின் முழக்கத்தைப் பெருக்குவதற்கும், மேளகர்த்தாக்களுக்குண்டான ஸ்வரங்களை வாசிப்பதற்கும் தக்க சாதனங்கள் அமைந்திருப்பதைக் கவனிக்கலாம். உதாரணமாக, பிடில் வாத்தியத்தை எடுத்துக்கொள்வோம். இதன் பெட்டியின்மேல் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும் கம்பிகளின் அசைவே ஒலிக்குக் காரணமாயிருப்பதை அறியலாம். இக்கம்பிகளை ஒரு வில்லின் உதவியால் அசையச் செய்கின்றோம். அவ்வாறு உண்டான அதிர்ச்சி பிடிலின் மேல் பலகையிலிருக்கும் குதிரையின் மூலமாய்ப் பெட்டி முழுவதும் பரவுவதால். பெட்டிக்குள்ளிருக்கும் காற்று அசைகின்றது. அதனால் ஒலியின் முழக்கம் அதிகரிக்கின்றது. மேலும் கம்பிகள் அசையும் பொழுது இடதுகை விரல்களினால் அவற்றைத் தொட்டு, நீளத்தைத் தக்கவாறு குறைத்து, வெவ்வேறு சுருதியுள்ள ஒலிகளை மேளகர்த்தாக்களின்படி எழுப்ப முடிகிறது. இவை நம் குரலைப்பொறுத்து எவ்வாறு அமைந்திருக்கின்றன என்று கவனிப்போம். நாம் பாடும் பொழுது நுரை ஈரல்களிலிருந்து வெளிவரும் காற்று குரல்நாண்களைத் துடிக்கச்செய்து அதனால் ஒலி உண்டாகிறது. அவ்வொலி தொண்டை, வாய், மூக்கு, முதலிய இடங்களில் உள்ள காற்றினால் பலப்படுத்தப்பட்டு வெளிக்காற்றில் பரவுகிறது. நுரை ஈரல்களிலிருந்து வெளிவரும் காற்றின் வலிமையைத் தக்கவாறு மாற்றி ஒலியின் முழக்கத்தை மாற்றிக்கொள்ளலாம். அதிர்ச்சியின் அளவு குரல்நாண்களின் அசையும் நீளத்தையும், பிகுவையும் பொறுத்திருப்பதால், தசைகளின் உதவியால் நாண்களின் நீளத்தையும், பிகுவையும் மாற்றி வேண்டுமென்ற ஸ்வரங்களைப் பாட முடிகிறது. இந்நாண்கள் ஸ்திரீகளுக்கு இருப்பதைக்காட்டிலும் புருஷர்களுக்குச் சற்று நீண்டும் தடித்தும் இருப்பதால் அவர்கள் பாடும் ஆதார சுருதி ஸ்திரீகளைவிடக் குறைவாகவே இருக்கிறது. மேலும் இளம் வயதில் குரல் நாண்கள் மெல்லியதாயிருப்பதனால் சிறுவர்களின் ஆதாரசுருதி பெரியவர்களின் சுருதியைக் காட்டிலும் உயர்வாகவே இருக்கின்றது. குரல் நன்றாக அமைந்த ஒவ்வொருவரும் மூன்று ஸ்தாயியில் அடங்கியுள்ள எல்லா ஒலிகளையும் எழுப்பக்கூடும். குரல் நாண்களைச் சிலர் கம்பி வாத்தியங்களுடனும் மற்றும் சிலர் நாகசுரம் போன்ற இரட்டைரீடு வாத்தியங்களுடனும் ஒப்பிடுகிறார்கள். ஒலியின் பண்பு பெரும்பாலும் வாய், தொண்டை, மூக்கு, மார்புக் கூடுகளினால் பாதிக்கப்படுவதால் இரண்டு உவமைகளும் பொருந்தும் என்று கூறவேண்டியிருக்கிறது.

இனி ஒருவர் பாடும்போது குரல்நாண்களிலிருந்து கிளம்பிய ஒலி, தொண்டை, வாய், மூக்கு முதலிய இடங்களில் எவ்வாறு மாறுதல் அடைகின்றது என்று கவனிப்போம்.

குறிப்பிட்ட அளவுள்ள காற்று நிறைக்கு இயற்கையான ஓர் துடிப்பு எண் உண்டு. இக்காற்று நிறையை மற்றொரு துடிப்பைக்கொண்டு செயற்கையாகத் துடிக்கச் செய்யலாம். இப்பொழுது உடனியக்கம் (Resonance) ஏற்படுவதாகக் கூறப்படும். இதற்கு ஒரு சான்று கூறுவோம். சற்றுமுன் சங்கீத வாத்தியத்திற்குப் பிடிலை உதாரணமாக எடுத்துக்கொண்டு அதில் ஒலி உண்டாகும் விதத்தைக் கூறும்போது கம்பி துடிப்பதினால் உண்டான அதிர்ச்சி குதிரையின் வழியாகப் பெட்டிக்குள்ளிருக்கும் காற்றுக்குப் பரவுவதைக் கண்டோம். அவ்வாறு பரவியதால் அக்காற்று,

கம்பியின் துடிப்பை ஏற்றுக்கொண்டு உடனியங்கி முழக்கத்தை அதிகரிக்கின்றது. ஒருவர் பாடும்போது குரல்நாண்களிலிருந்து கிளம்பிய ஒலியின் பரிவார சுருதிகளில் சில, தொண்டை வாய், மூக்கு முதலிய இடங்களில் உள்ள காற்றில் உடனியக்கத்தை உண்டாக்குகிறது. முன்பு கண்ட உதாரணத்தில் பிடில் பெட்டியினுள்ளிருக்கும் காற்றின் அளவு எப்பொழுதும் ஒன்றாகவே இருக்கும் என்று அறியலாம். ஆனால் நாம் பாடும்போது வாய், தொண்டை, மூக்கு முதலிய இடங்களில் உள்ள காற்றின் அளவு, நாம் அவற்றை வைத்துக்கொள்ளும் விதத்தைப் பொறுத்திருக்கிறது. எனவே உடனியக்கம் ஒவ்வொரு அமைப்புக்குத் தக்கவாறு மாறுகின்றது. அதனால் ஒலியின் பண்பை எப்படி வேண்டுமென்றாலும் மாற்றச் சாத்தியமாகின்றது. சில சமயம் மார்புக் கூட்டிலுள்ள காற்றிலும் உடனியக்கம் ஏற்படுகிறது. கீழ்ஸ்தாயியில் பாடும்போது ஒவ்வொருவருக்கும் அவர் மார்பிலிருந்து ஒலி வெளிவருவதாக ஏற்படும் உணர்ச்சியிலிருந்து இதை நன்கு உணரலாம். உடனியக்கம் தொண்டை, வாய், மூக்கு முதலிய இடங்களில்மட்டும் நிகழ்ந்தால் தலையிலிருந்து ஒலி வெளியே போவது போல உணர்ச்சி உண்டாகும். மேல் ஸ்தாயியில் பாடும்போது இதைக் கவனிக்கலாம். ஒலியின் பண்பு உடனியக்கத்தினால் மட்டும் மாறுகின்றது என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் முன்பு கூறிய லாரின்ஜாஸ்கோப் என்ற கருவியினால் பரிசோதித்துப் பார்த்ததில், கீழ் ஸ்தாயியில் பாடும்பொழுது நாண்களிடையே அதன் நீளம் முழுவதிற்கும் சந்து ஏற்பட்டு அவை அசைவதையும், மேல் ஸ்தாயியில் பாடும்போது அவற்றின் நுனியில் மட்டும் சந்து ஏற்பட்டு அவை அசைவதையும் கண்டார்கள். எனவே ஒலியின் பண்பு குரல்நாண்கள் அசையும் விதத்தையும் குரல்வளைவாயின் அமைப்பையும் பொறுத்திருக்கின்றது என்ற கொள்ளவேண்டியிருக்கின்றது. வாய், மூக்குகளிலுள்ள காற்றில் நிகழும் உடனியக்கத்தை ஹெம்ஹோல்ஷ் என்ற விஞ்ஞானி நன்கு பரிசோதித்துக் காட்டினார். உயிரெழுத்துக்களை நாம் கூறும்போது ஒவ்வொரு உயிரெழுத்துக்குத் தக்கவாறு வாய் மூக்குகளின் அமைப்பை மாற்றி வைத்துக் கொள்வதை உணரலாம். அவ்வாறு உச்சரிக்கும்போது வாயினருகில் ஹெம்ஹோல்ஷ் தக்க ஒலிக்கவட்டை வைத்து அவ்வமைப்புக்குண்டான சுருதியையோ சுருதிகளையோ கண்டுபிடித்தார். இவ்வாறு சோதனைகள் நடத்தி உயிரெழுத்துக்களின் பண்பை நன்கு உணர்ந்து காட்டினார்.

இனி, குரல்பயிற்சிக்கு வேண்டிய முக்கிய விஷயங்களைப் பார்ப்போம். ஒலிநாண்களை அசைக்கும் காற்று வெளியே வரும்பொழுது தொண்டை, வாய், மூக்கு முதலிய இடங்களில் தங்கு தடையின்றி வரப்பழகுவதை ஒவ்வொரு பாடகரும் மேற்கொள்ளவேண்டும். நுரையீரல்களிலிருந்து வெளிவரும் காற்றை வேண்டுகிற அளவுக்குத் தசைகளின் உதவியால் அதிகப்படுத்தவோ, குறைக்கவோ முடியும். எனவே குரலை திருத்துவதற்குமுன் சுவாசத்திற்குண்டான தசைகளைச் சிறந்த முறையில் உபயோகிக்கப் பழகவேண்டும். இதற்கு ஈரல்கள் கொள்ளும் அளவு காற்றை நிரப்பி, அதை நிதானமாக வெளியிலனுப்பக் கற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு இடைப்பரப்பியின் உதவியையும் விலா எலும்புகளை ஒன்றோடொன்று சேர்க்கும் தசைகளின் உதவியையும் பெற வேண்டும். சுவாசம் உட்கொள்ளும் நேரத்தைக் குறைத்து வெளியிடும் நேரத்தை எவ்வளவு அதிகப்படுத்த முடியுமோ அதுவரையில் அதிகப்படுத்தப் பழகவேண்டும். வாய், நாக்கு முதலியவற்றை நம்மிஷ்டப்படி அசைக்க அவற்றின் தசைகளைப் பழக்கவேண்டும். குரல்நாண்களைக் கட்டுப்படுத்துவதற்குண்டான தசைகளைக் காதின் உதவியைக் கொண்டுதான் பழக்கவேண்டும். ஏனெனில் இவற்றின் தசைகள் காது நரம்புகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. எனவே குரல்நாண்களை நன்றாகக் கட்டுப்படுத்துவதற்கு கேள்விஞானம் வேண்டும் என்று அறியலாம். பிறவிச்செவிடர்களைப் பேசும்படி செய்துவிடலாம். ஆனால் பாடும்படி செய்வது முடியாது. சிலர் பாடும்பொழுது தொண்டையைவிட்டு ஒலி கிளம்புதற்குச் சிரமப்படுவதுபோல் தோன்றுவதைக் கவனிக்கலாம். இவர்கள் பாடும்போது தொண்டையைக்குறுக்கிச் சிரமப்படுத்திக்கொள்வதால் தொண்டை, வாய், மூக்கு முதலிய இடங்களில் உள்ள காற்றில் சரியானபடி உடனியக்கம் உண்டாகாமல் போய்விடுவதே இதன் காரணமாகும். வாயை நன்றாக மூடிக்கொண்டு அகாரசாதகம் செய்வதினால் இக்குறையை நிவர்த்தி செய்துகொள்ளலாம். மேலும் முக்கியமாகக் குரல்நாண்களை அசையச்செய்யும் தசைகள், வெளிவிடும் சுவாசத்தைக் கட்டுப்படுத்தும் தசைகள் என்ற இரண்டும் ஒத்து இயங்கவேண்டும். இவ்வாறு இல்லாவிடில் உண்டாகும் கெடுதல்களைக்கவனிப்போம். வெளிவிடும்சுவாசத்தைக் கட்டுப்படுத்தும் தசைகள் முன்னதாக இயங்கத் தொடங்கினால், குரல்வளைவாய் பெரியதாய் இருந்து, காற்று, குரல் நாண்களை நன்றாக அசைக்க முடியாமல் வெளியே வந்துவிடுகிறது. அதனால் சாரீரம் சன்னமாகவும் வன்மையற்றும் போய்விடுகிறது. மற்றும் குரல்நாண்களின் தசைகள் முன்னதாக இயங்கத் தொடங்கினால் குரல்வளைவாய் முன்னதாகவே குறுகிவிடுகிறது. அதனால் வெளிவரும் காற்றுக்குத்தடை ஏற்படுகிறது. எனவே அதிகவலிமையுடன் காற்றை வெளியே அனுப்பவேண்டியிருக்கிறது. இதன் விளைவாகத் தொண்டை சீக்கிரத்தில் சோர்வு அடைந்துவிடுகிறது. பாடும்போது தொண்டைக்கு யாதொரு சிரமமுமில்

லாமல், ஒலி, மார்பு தலை வாய் முதலிய இடங்களிலிருந்து வருவதுபோல் உணர்ச்சி ஏற்படுவதே நல்ல குரல் பயிற்சிக்கு அடையாளமாகும். இப்பொழுது குரல் பயிற்சிக்குத் தானம் பாடுவது எத்தகைய உதவியை அளிக்கின்றது என்று கவனிப்போம். தானம் அல்லது மத்திய மகாலம் பாடுவது இராக ஆலாபனையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். தன்யதே இதி தானஹா என்று வடமொழியில் தானத்திற்கு லக்ஷணம் கூறுவது வழக்கம். இராகத்திற்குண்டான ஸ்வரபிரஸ்தார கிரமங்களின் தொகுதியில் அடங்கிய பாகங்களை எவ்வளவு விதமாக மாற்ற முடியும் என்பதை இது மேற்கொண்டிருக்கிறது. இதை ஆனந்தம் என்ற சொற்களைக்கொண்டு பாடவேண்டும். ஆனந்தம் என்பதில் அடங்கியுள்ள ஆ இ நம், தம் என்ற ஒலிகளை எழுப்பும்போது முறையே மார்பு, தொண்டை, மூக்கு முதலிய இடங்களில் ஏற்படும் உடனியக்கத்தினால் ஒலியின் சில பரிவார சுருதிகள் பலப்படுத்தப்படுகின்றன. கீழ்ஸ்தாயி, நடுஸ்தாயி, மேல்ஸ்தாயிகளில் அடங்கியுள்ள எல்லா சுருதிகளும் கிளம்புவதால் இடைப்பரப்பி மார்பெலும்புகள் முதலியவற்றின் தசைகளின் உதவியும், தொண்டைநாண்கள், வாய், மூக்கு முதலியவற்றின் உதவியும் நன்கு பெற்றாலன்றி தானம் நன்றாகப் பாட முடியாது. மேலும் வெளிவரும் காற்றின் வேகத்தை நன்றாக அடக்கி ஆளக் கற்றுக் கொள்ளவேண்டும். சாதகத்தினால் மூன்று காலங்களிலும் தானம் பாடமுடியும். துரிதகாலத்தில் நன்றாகத் தானம் பாடி பெயர்பெற்ற கனம் கிருஷ்ணய்யரைச் சங்கீத உலகம் நன்கு அறியும். மானவ தானம், அச்வதானம், கஜதானம், மர்க்கடதானம், மயூரதானம், குக்குடதானம், மண்டூகதானம், சக்ரதானம் என்ற எட்டுவகைத் தானங்களைப் பாடி, குரலின் பயிற்சியைப் பெறலாம். எனவே கர்நாடக சங்கீதத்தின் மேன்மையை உணரலாம்.

(திருச்சி அகில இந்திய ரேடியோவில் செய்த பிரசங்கம்.)

மேதாஸ்

"பாஸ்பரஸ் தைலம்"

(வெளி உபயோகத்திற்கு மட்டும்)

முடக்குவாதம், கீல்பிடிப்பு, சகலவித வலிகள்

இவைகளுக்கு

நிகரற்ற கைகண்ட மருந்து

பிரபல டாக்டர்களும், பொதுஜனங்களும் புகழ்ந்து அத்தாட்சி கொடுத்திருக்கிறார்கள்.

தயாரிப்பவர்கள்:—

K. S. மேதா & கோ.,

மருந்து வியாபாரிகள்,

250, சைனா பஜார் (மாடி), சென்னை.

அனுபமையின் காதல்

(ஸ்ரீ சரத்சந்திர சட்டர்ஜீ)

தகப்ரியை மொழி பெயர்த்தது

— க —

விரகம்.

அப்பொழுது அனுபமைக்கு வயது சரியாய் பதினைந்து முடிந்திருந்தது. ஓயாமல் நாவல்களைப் படித்துப் படித்து அவளுடைய நடத்தையும் எண்ணங்களும் விசித்திரமாய் மாறி அவளுக்குக் கொஞ்சம் நஞ்சம் இருந்த புத்திசாலித்தனத்தையும் குட்டிச்சுவராக்கி விட்டன.

"மனிதர்களது இதயத்தில், எவ்வளவு காதல், எவ்வளவு இனிமை, எப்படிப்பட்ட சோபை, எவ்வளவு அழகு இவைகள் இருக்கின்றன என்று கணக்கிட்டு, தேர்ந்து எடுத்து என் மனதிலே சேமித்து வைத்துவிடுவேன். இந்தத் திறமையின் காரணமாக என் மனதை அன்பின் களஞ்சியமாகவும், அறிவின் களஞ்சியமாகவும், அனுபவத்தின் இருப்பிடமாகவும் ஆக்கிக்கொள்வேன்.

"ஒவ்வொருவரையும் முதல்முறை பார்க்கும் பொழுதே குணுகுணங்களை எடைபோட்டுப் பார்த்துவிடுவேன். உலகத்தில் நான் இன்னும் என்னென்ன கற்றுக்கொள்ளவேண்டியது இருக்கிறது? எனக்குத் தெரியாதது ஏதாவது இருந்தாலல்லவா ?" என்று நினைப்பாள்.

தவிர, "என்னைப்போல, கற்பு என்றுலென்ன? காதலென்றுலென்ன? வாழ்க்கையின் பயன் என்ன? என்பதைப் பற்றி ஆழ்ந்து படித்துத் தெரிந்துகொண்ட பெண் எவள்? நான் ஒரு மாதவிக் கொடிக்குச் சமானம். ஆனால் கொடிக்கு ஒருஅழகிய மரமல்லவோ ஆதாரம்" என்று எண்ணுவாள்.

இத்தகைய எண்ணங்களின் தொகுதியிலிருந்து ஒரு கற்பனைக்காதலன் தோன்றினன். அவன் யார்? அவன் தன்னிடம் அன்புகொள்ளக்கூடியவனு? தனக்கு எற்றவனு? என்பதைப்பற்றிச் சிந்திக்கவேண்டுமென்று கூட அவளுக்குத் தோன்றவில்லை. ஏதோ ஒரு வகையான தூண்டுதலினுல் அவனைக் காதலனுக வரித்துவிட்டாள்.

நாட்கள் செல்லச் செல்ல அந்தக் காதலனுக்கு மனம் இதயம், வாழ்க்கை, இளமை எல்லாவற்றையும் மானஸீகமாக அர்ப்பணம் செய்துவிட்டாள். மனத்துள் இவைகளையெல்லாம் செய்தாயிற்று. இப்பொழுது யார் அவனிடம் போய் நான்தான் உன்னுடைய நவமல்லிகைக்கொடி என்று தெரிவிப்பது? இதுதான் பரம சங்கடம். மாதவிக் கொடியின் பாடு பெரிய தடுமாற்றமாகிவிட்டது. இப்படியே அனுதரவாய்விட்டுவிட்டால் மாதவிக்கொடி வாடி உலர்ந்துவிடுமா?

அனுபமையின் காதல் நாளுக்குநாள் வளரத் தொடங்கிற்று. இனந்தெரியாத அந்தக் காதலனுக்கு உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருந்தாள். சில சமயங்களில் அவள் மனதிற்குள் "ஹே! ஸ்வாமி! நீங்கள் என்னை ஏற்றுக் கொண்டாலும் சரி அல்லது விட்டுவிட்டாலும் சரி, என்னை ஏறிட்டுப் பார்த்தாலும் சரி பாராவிட்டாலும் சரி, என்றென்றைக்கும் தங்கள் அடியாள்தான். காதல் போயிற் சாதலே நன்று என்பதுதான் காதலர் உலகின் மகாமந்திரம். தங்களைப் பிரிந்து ஒரு க்ஷணமும் உயிர்வாழ முடியாது. இந்த ஜன்மத்தில் தங்களை அடைய முடியாவிட்டாலும் மறுபிறப்பிலாவது தங்களை அடைந்தே தீருவேன். அப்பொழுது நீங்களே நேரில் கண்டு, இத்தகைய கற்பும் காதலும் ஒருங்கே அமையப்பெற்ற இந்தச் சிறு பெண்ணின் நெஞ்சம் இவ்வளவு பலமுள்ளதா என்று திகைத்து விடுவீர்கள்" என்று தானே சொல்லிக்கொள்ளுவாள்.

அனுபமை பெரிய வீட்டுப் பெண்தான். அவர்களுடைய பங்களாவைச் சுற்றிலும் மிகப் பெரிய தோட்டம். பங்களாவை அடுத்து இன்னும் சற்றே உள்நுழைந்து போனுல் மிகப் பெரிய தாமரைக் குளம். மானஸரோவரத்தையும் பழிக்கத்தக்கதாய்க் காட்சியளிக்கும்,

வானளாவிய மரங்களிலே குயில்கள் உட்கார்ந்து கீதமிசைக்கும். கிளிகள் மாமரங்களில் உட்கார்ந்து பழங்களைக் கோதும். அணில்களின் சப்தம் விட்டுவிட்டுக் கேட்டுக்கொண்டே இருக்கும். பெரும்பாலும் அனுபமா இந்தத் தோட்டத்திலேதான் சுற்றித் திரிவாள். தன் காதலனைப் பிரிந்த துயரத்தை இங்கே சமனம் செய்துகொள்ளுவதாக அவளுடைய அந்தரங்கமான எண்ணம்.

சரியாய்ச் சாப்பிடுவதுமில்லை. சின்னஞ் சிறு பெண் அழகாயத் தலைசீவிக்கொண்டு வீட்டிலே உற்ற தோழிகளுடன் விளையாடுவதில்லையா? என்பாள் தாய். அவள் ஒன்றையுமே சட்டை செய்யாதவளாய்த் தோட்டத்தைப் பிரதக்ஷிணம் செய்வாள். நாளடைவில் அவளுடைய அழகிய பொன்மேனி காய்ந்துகறுக்க ஆரம்பித்தது. சரியாய்ச் சாப்பிடுவதுமில்லை. கேட்ட கேள்விகளுக்குச் சரியானபடி பதில் சொல்வதுமில்லை. ஏதாவது இருந்தால்தானே பதில் சொல்வாள். ஏதோ முணு முணுப்பாள்.

அனுபமையின் தாய் ஒரு நாள் ஜகத்பந்து பாபுவிடம் "நீங்கள் இந்தப் பெண்ணைப்பற்றி ஏனென்றே கேட்கிறதில்லை. நமக்கோ இருப்பது இந்த ஒரே ஒரு பெண். அவளும் வைத்தியம் செய்வாரில்லாமல் சாகும் நிலைக்கு வந்து கொண்டிருக்கிறாள்." என்றாள்.

"ஏன்? அவளுக்கு என்ன?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டார் பாபு.

என்ன? உங்களுக்கு அதுகூடத் தெரியாதா? டாக்டர் சாஹேப், பார்த்துவிட்டு அவளுக்கு உடம்பில் ஒரு வியாதியுமில்லை என்று சொல்லிவிட்டார். ஆனால் அவளென்னமோ நாளுக்கு நாள் துரும்பாய்ப் போகிறாள்".

"எனக்கென்ன தெரியும்?" என்று கோபத்துடன் சொன்னார்.

"ஆனால், இருந்தால் இருக்கட்டும். செத்தால் சாகட்டுமென்கிறீர்களா?"

"நீ சொல்லுகிறது மிகவும் அழகாயிருக்கிறதே. டாக்டரோ ஒன்றுமில்லை என்கிறார், நமக்குத் தெரிந்தமட்டில் குளிரா? ஜ்வரமா? ஒன்றுமில்லை. இளைத்துப் போவானேன்?"

இதற்குமேல் பேச அவள் இஷ்டப்படவில்லை. நத்து அசைய அசைய, பெரிய மருமகளைக் கூப்பிட்டு "ஏனடியம்மா? அனு ஏன் இப்படி எப்பொழுது பார்த்தாலும் தோட்டத்தைச் சுற்றுகிறாள். உடம்பும் நாளுக்குநாள் கயிறுய்ப் போகிறது?" என்றாள்.

"எனக்கெப்படியம்மா தெரியும்"?

"ஏன் நீயும் அவளும் சகஜமாய்ப் பேசுவதில்லையா?

"இல்லையே?" மாமியாரின் முகம் அதிருப்தியைக் காட்டிற்று.

"இப்படியே விட்டுவிட்டால் என்னவாகும்? நான் சொன்னால் காதிலேயே ஏறவில்லை. இப்படிச் சோறுந் தண்ணீருமில்லாமல் எப்பொழுதும் தோட்டத்திலேயே குடியிருந்தால்-உடம்பு எதற்காகும்? நீதான் அவளை ஏதாவது சொல்லிச் சரிப்படுத்து. இல்லாவிட்டால் நான் குளத்திலே விழுந்து சாகவேண்டியதுதான், என்றாள்.

பெரிய மருமகள் சற்றுநேரம் சிந்தையில் ஆழ்ந்தாள். பிறகு மெதுவான குரலில், "அவளுக்குப் பொழுது போவதற்குத் தகுந்த வேலையில்லை. அதனால்தான் பித்துப்பிடித்தாற் போலிருக்கிறாள். சீக்கிரம் வரனைத்தேடி, கல்யாணத்தை முடித்துவிட்டால், குடும்ப பாரம் ஏற்பட்டு எல்லாம் தானே சரியாய்விடும்."

மருமகளுடைய இந்தப் பதிலினால் மாமியாருடைய முகம் மலர்ந்தது. "சரிதான். அவரிடம் சொல்லுகிறேன்" என்றாள்.

ஃ ஃ ஃ

தாயாரும் மதனியும் சேர்ந்து அனுபமையைப்பற்றிச் சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்டு ஜகத்பந்துபாபு கலகலவென்று சிரித்தார். "சரி! அதையும் செய்துவிடுகிறது. முதலில் அடுத்த வருஷம் பார்ப்போமென்றிருந்தேன். எப்பொழுதானால் என்ன இப்பொழுதேதான் பார்ப்போமே" என்றார்.

மறுநாள் புரோகிதர் வந்தார். அனுபமையோ பெரிய இடத்துப் பெண். நல்ல அழகி. வரனுக்குத்தானா பஞ்சம். ஒரு வாரத்திற்குள் வரனைத்தேடிக் குறிப்பிட்டார். அவர் மனைவியிடம் சொல்ல, அவள் மருமகளிடம் சொல்லி, விஷயம் அனுபமையின் காதுகளில் வீழ்ந்தது.

ஒரு நாள் பகலில் எல்லோரும் உட்கார்ந்து கலியாணப் பேச்சுப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது கையில் ஒரு பூங்கொத்துடன் சித்திரம்போல் அங்கே வந்து நின்றாள் அனுபமா. அவள் தாயார் சிரித்துக்கொண்டு "அனு, என்னைப்போல, யோகினி மாதிரி ஆகிவிட்டாள்" என்றாள்.

"கலியாணமான பிறகு பாருங்கள், உங்கள் யோகினிப்பெண் மோகினியாக ஆகிவிடுவாள்". என்றாள் மதனி. எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

"ஆனால் எப்பொழுது?" என்றாள் மதனி.

"இன்னும் தீர்மானிக்கவில்லையே?"

"பிள்ளை என்ன செய்கிறான்?"

"பீ. ஏ. பரிக்ஷைக்குப்போகிறுன்"

"ஆனால் நல்லதுதான், பரவாயில்லை" என்று சொல்லிவிட்டு விஷமச் சிரிப்புடன், "பார்ப்பதற்கு எப்படியோ? அழகாயில்லாவிட்டால் எங்கள் நாத்தனார் சம்மதிப்பாரா?" என்ருள். "சம்மதிக்கிறதாவது, செக்கச்சிவக்க ராஜாவைப்போலிருக்கிறுன்"

இதற்குள் இந்த வார்த்தைகளைக் கவனித்த அனுபமை தரையை நகத்தாற் கீறிய வண்ணம், "நான் கலியாணம் செய்துகொள்ளப் போவதில்லை" என்ருள்.

இந்த வார்த்தைகள் தாயாரின் செவிகளில் விழவில்லை.

ஆனல் மதனி கவனித்துவிட்டாள். அவள் பலமாய்ச்சிரித்து, "அம்மா நாத்தனார் கலியாணம் செய்துகொள்ளமாட்டாராம்." என்ருள்.

"ஆனல் சரி" என்று சொல்லியவளாய் மனத்துள் நகைத்தவண்ணம் எழுந்து சென்ருள் தாயார். அவள் எழுந்து போன பிறகு மதனி அனுபமையின் அருகில் வந்து, "என்ன? கலியாணம் செய்துகொள்ளப்போவதில்லை என்கிருயே".

அனுபமை முன்போலவே கம்பீரமாக "ஆம்" என்ருள். "ஏன்?"

"எவன் கழுத்திலேயோ கொண்டுபோய் வலுக்கட்டாயமாய்த் தள்ளுவதற்குப் பெயர் தான் விவாகமோ? மனம் பிடித்திருந்து செய்வதுதான் விவாகம். மனப்பொருத்தமில்லாமல் தோன்றியபடி செய்வது பிசகு."

மதனி ஆச்சர்யத்திஞல் திகைத்துப்போனுள். "வலுக்கட்டாயமாய்த் தள்ளுவது என்று எதனுல் சொல்லுகிருய்? பெரியவர்கள் பார்த்து ஒப்புவிக்காமல், பெண்கள் தாங்களே தேந்தெடுத்து நிச்சயம் கொள்ளுவார்களா?"

"ஏன் பெண்கள் தாங்களேவரிக்கக்கூடாது?"

"அப்படியானுல் உன் அபிப்பிராயப்படி என்னுடைய கலியாணம் கூடச் சரியான கலியாணமல்ல. ஏனென்ருல் முந்தினநாள்வரை உன் தமையன் கறுப்பா சிவப்பா என்று கூட எனக்கு நிச்சயமாய்த்தெரியாது."

"ஆனல் எல்லோரும் உன்னைப்போலவே தானு?"

அவள் சிரித்தவளாய், "ஏன் அனு! உன் மனதுக்குப் பிடித்த யாராவது ஒருவர் இருக்கிருரா?"

மதனியின் இந்த விஷமச் சிரிப்பும் பரிகாசமும் அவளுக்குப் பிடிக்கவில்லை. சற்றுக் கோபங்கலந்த குரலுடன், "என்ன? மதனி! என்னேடு விளையாடுகிருயா? இதுதான் விளையாட்டுப் பேச்சுப் பேசுகிற தருணமா?" என்ருள்.

"ஏன்? என்ன வந்துவிட்டது?"

"என்ன வந்துவிட்டதா? கேள்"

அவள் மனதிற்குள் அவள் கணவனை அவள் எதிரிலேயே கொன்றுவிடுவதுபோல் தோன்றிற்று. உடனே கட்லூகானுடைய கோட்டையில் வீரேந்திரஸிம்மனது தண்டனைக் காட்சியும், விமலை அருகே நிற்பது அவள் மனக்கண்ணின் முன்பு தோன்றலாயின. அவள் மேலும் எண்ணத் தொடங்கினுள். கற்புள்ள பெண் உலகத்தில் எதற்குப் பயப்படவேண்டும்? என்று எண்ணியவளாய் உரத்த குரலில், "பிரபுவே! என் ஸ்வாமி! பிராணநாத! இந்த உலகத்தின் முன்னிலையில் நான் தங்களுடையவள். இதோ தங்களுடைய திருவடிகளில் அடைக்கலம் புகுந்துவிட்டேன். தர்மமே சாக்ஷியாக நான் நெடு நாட்களுக்கு முன்னரே தங்களைக் கணவராக வரித்துவிட்டேன். தங்களது திருவடிகளைத் தொட்டுச் சொல்லுகிறேன். இந்த உலகில் தங்களைத்தவிர வேறெருவனும் என்னை விரலாலும் தொடவும் முடியாது. உயிருள்ள வரையில் நம்மைப் பிரிக்கவும் முடியாது." என்று கூவினுள்.

மதனி வீறிட்டுக் கூவியவளாய் வெளியே வந்து, "லல்லிக்கு என்னமோ வந்துவிட்டது!" என்ருள். மாமியார் சமையலறையிலிருந்து ஓடி வந்தாள். மருமகளின் இந்தக் கூக்குரல் வீட்டிற்கு வெளியிலும் கேட்டது.

ஜகத்பந்து பாபுவும் "என்ன? என்ன?" என்றவராய்ச்சந்திரபாபு பின்தொடர உள்ளே நுழைந்தார்.

அனுபமை மூர்ச்சையாய்க் கீழே கிடந்தாள். வீட்டிலுள்ள யாவரும் அங்கே கூடியிருந்தார்கள். ஒருவன் டாக்டரை அழைக்க ஓடினுன்.

நெடு நேரத்திற்குப் பின் அவளுக்குப் பிரக்ஞை வந்தது. மிகவும் தீனமான குரலில் "நான் எங்கேயிருக்கிறேன்?" என்ருள்.

மிகுந்த அன்பும் பரிவும் கலந்த குரலில் "அனுபமா! நீ என் மடியில்தானிருக்கிருய்" என்ருள் தாய்.

"உன் மடியிலேயே இருக்கிறேன். ஆனல் நான் ஏதோ ஒரு கற்பனை உலகில் அவருடன் கூட எங்கேயோ சென்றுகொண்டிருந்தேன்" என்ருள். அவளுடைய மிருதுவான கன்னங்கள் கண்ணீரால் நனைந்துகொண்டிருந்தன. தாயார் அவள் கண்களைத் துடைத்து, "ஏன் அழுகிருய்? யாரைப்பற்றிப் பேசுகிருய்?" என்ருள்.

அனுபமை நெடுமூச்செறிந்தாள். மதனி, சந்திரபாபுவிடம் "எல்லோரையும் வெளியே போகச் சொல்லுங்கள். இனிமேல் ஒன்றும் பயமில்லை. லல்லி நன்ருகத்தானிருக்கிருள்" என்ருள். எல்லோரும் ஒருவர்பின் ஒருவராக வெளியே சென்றனா.

ஃ ஃ ஃ

இரவு சுமார் பத்து மணி இருக்கும். மதனி மெதுவாக அனுபமையின் அருகில் வந்து உட்கார்ந்தாள். மெதுவாக அவனிடம் 'அனுபமா! யாரை மணந்துகொண்டால் நீ சௌக்யமாக இருக்கலாமென்று எண்ணுகிருய்?"

"சுகம், சௌக்யம் இவைகளைப்பற்றி எனக்குக் கவலையில்லை. நான் ஒருவரை நினைந்தேன் அவர்தான் என் கணவர்."

"ஆனல் சரி—அவர் யாரோ?"

ஸுரேச்—ஸுரேச்தான் என்—

"யார்? ராகல் மஜும்தார் பிள்ளை ஸுரேசனு?"

"ஆம்! அவர்தான்"

உடனே இந்த விஷயம் தாயாருக்கு அறிவிக்கப்பட்டது.

மறுநாள் அனுபமையின் தாய் சுரேசன் வீட்டிற்குச் சென்ருள். சற்றுநேரம் லோகாபிராமமாகப் பேசிவிட்டுப் பின்பு, "உங்கள் ஸுரேசனுக்கு எங்கள் அனுபமையைக் கொடுத்தால் மிகவும் ஏற்றமாயிருக்கும்" என்ருள்.

சுரேசனது தாயார் நகைத்தவண்ணம். "ஆகா! பேஷாய்ச் செய்துவிடுவோம் ரொம்ப சரி" என்ருள்.

"ரொம்ப சரி என்று சொல்லிவிட்டால் போதும். சட்டாயம் இந்தச் சம்பந்தம் நடக்க வேண்டுமென்றேதான் ஆசை."

"ஆனல் பையனைக் கேட்டுவிட்டுப் பதில் சொல்லுகிறேன்."

சுரேசன் பீ. ஏ. பரீக்ஷைக்குப் படித்துக் கொண்டிருந்தான். ஒரு க்ஷணம்கூட வீணுக்காமல் அவ்வளவு அக்கரையுடன் படித்துக் கொண்டிருந்தான். தாயார் உள்ளே நுழைந்து மெதுவாய்க் கலியாணப்பேச்சைத் தொடங்கினுள். அது அவன் செவியிலேயே விழவில்லை. தாயார்—"சுரேச்! கலியாணம் இந்த வருஷம் முடித்துவிடவேண்டியதுதான்."

"சரிதான். ஆனல் அதைப்பற்றி இப்பொழுதென்ன? படிக்கும் பொழுது இதென்ன கரடிவிடுகிருய்?"

தாயார் சற்றே முகஞ்சுண்டி, "இப்பொழுது அவசரமில்லை. பரீக்ஷை முடிந்த பிறகுதான்."

"எங்கே?"

"இந்தக்கிராமத்திலேதான் ஜகத்பந்துபாபுவின் பெண்"

"ஓகோ! சந்துவின் தங்கையோ? லல்லி என்கிருனே அவளே?

"லல்லியல்ல, அவள் பெயர் அனுபமை"

சுரேசன் நகைத்தவனுய், "ஆம்! அனுபமைதான், அடிசக்கை, பார்ப்பதற்கு ரொம்ப சுமாராய்த்தானிருக்கிருள்"

"சுமாராவது, நீ எப்பொழுது பார்த்தாயோ? செக்கச்சிவக்கச் செந்தாழை மடல் போலிருக்கிருளே?"

"இருக்கலாம், ஒரே கிராமத்திலே பெண் கொள்வது எனக்கு இஷ்டமில்லை, அது பெரிய தொந்தரவு"

"அட, ராமா! இதிலென்னவந்தது? இதென்ன கெடுதலா?"

"நல்லதா பொல்லாததா என்பதைப்பற்றிப் பிறகு யோசிப்போம்; நீ போ அம்மா! எனக்குப்பாடங்கள் ஏகமாய்க் குவிந்து கிடக்கின்றன" என்ருன்.

சுரேசன் தாயார் அனுபமையின் தாயாரிடம் வந்து, "என்னமோ அம்மா! வேறொரு ஆக்ஷேபமுமில்லை. உள்ளூரில் கலியாணம் செய்துகொள்வதில் அவனுக்கு இஷ்டமில்லையாம்"

"ஏன்?"

"எனக்கெப்படித்தெரியும்?"

அனுபமையின் தாயார் சுரேசனது தாயாரின் கைகளைப்பற்றியவளாய், "அப்படிச் சொல்லலாமா? வேறுவிதமான ஆக்ஷேபனையில்லையென்ருல் உள்ளூரில் இருப்பதனுல் என்ன பிரமாதம், கலியாணத்தை நிச்சயிக்கத்தான்வேண்டும்" என்ருள்.

அவள் மிகுந்த வருத்தத்துடன் "பையன் இஷ்டப்படாவிட்டால் நான் என்ன செய்யட்டும் சொல்லு" என்ருள்.

"முடியவே முடியாது, அவள் உங்கள் மருமகள்தான்."

"இன்றைக்கு விட்டுவிடு. நான் பிறகு சொல்லிப் பார்க்கிறேன். ஒப்புக்கொள்ளுகிருனு என்று பார்ப்போம்."

அனுபமையின் தாயார் வீடுவந்து சேர்ந்தாள். ஜகத்பந்துபாபுவிடம் "நான் சுரேசன்

தாயாரைப் பார்த்தேன். நீங்கள் மேற்கொண்டு பேசி நிச்சயித்துவிடுங்கள்." என்றாள்.

"இதென்ன குறுக்கே கிளம்புகிறாயே, ராயக்கிராமத்து வரன் ஏறக்குறைய முடிக்கக்கூடிய நிலைமையிலிருக்கிறது. அந்தச் சம்பந்தத்தை விட்டுவிட முடியுமா?"

"ஆமாம், விடவேண்டியதுதான்."

"ஏனோ?"

"அதற்குத் தகுந்த காரணமிருக்கிறது."

"என்ன?"

"வேறொன்றுமில்லை. சுரேசனுக்குச் சமானமான பிள்ளை நமக்கு அவ்வளவு சுலபமாய்க் கிடைக்கமாட்டான். நல்ல அழகு. பீ. ஏ. படிக்கிறான். உள்ளூரிலே இருக்கிறார்கள். குழந்தையைக் கண்ணிலே வைத்து இமையால் மூடிக்கொண்டிருப்பாள் அவள். அப்படிப்பட்டவளை மாமியாராய் அடையக்கொடுத்து வைத்திருக்கவேண்டும்" என்றாள்.

"சரி. பார்ப்போம்."

"பார்க்கிறதாவது, ஏறவோ தாழவோ நிச்சயித்துவிடுங்கள்" என்றாள்.

சாயங்காலம், மஜூம்தார் வீட்டிலிருந்து திரும்பிவந்தார் பாபு. மனைவியிடம் "கலியாணம் நடக்காது" என்றார். "ஏன்?" "அவர்களுக்கு இஷ்டமில்லை. அப்படிப்பட்ட இடத்திலே வலுக்கட்டாயமாய்ப் பெண்ணைக்கொண்டு போய்த் தள்ளச் சொல்லுகிறாயா?"

"ஏன் இஷ்டமில்லை?"

"உள்ளூரிலே கலியாணம் செய்துகொள்ளக் கூடாது என்கிறானாம் பிள்ளையாண்டான்."

"ஹூம்! எல்லாம் நாம் செய்த பாபம்" என்று தலையிலே அடித்துக்கொண்டாள்.

மறுநாள் அனுபமையின் தாயார் சுரேசன் வீட்டிற்குச்சென்றாள். மெதுவாகச் சுரேசன் தாயாரிடம், "மதனி! இந்தக்கலியாணத்தை நீங்கள் தான் பெரிய மனது செய்து முடித்து வைக்கவேணும்" என்றாள்.

"எனக்கும் ஆசைதான். பையன் ஒப்புக்கொள்ளவில்லையே? நாங்கள் என்ன பொன் காத்த பூதம்தானே? அவன் தானே ஆயுள் முழுதும் அன்பாயிருக்க வேண்டியவன்"

"நான் ஒருவருக்கும் தெரியாமல் ரூபா ஐயாயிரம் கொணர்ந்து உங்கள் கையில் கொடுத்து விடுகிறேன். அவனை எப்படியாவது இணங்கச் செய்து விடுங்கள்"

பணம் பத்தும் செய்யுமல்லவா? விஷயங்கள் சுரேசனது தகப்பனாரின் செவிகளுள் புகுந்தன. பிள்ளையைக் கூப்பிட்டு, "சுரேச்! நீ அனுபமையைக் கலியாணம் செய்துகொள்ளத்தான் வேண்டும்."

"ஏன்?"

எனக்கும் அந்தச் சம்பந்தம் ரொம்ப பிடித்திருக்கிறது. உன் தாயாருக்கும் இஷ்டம். தவிர வேறொரு காரணமும் உண்டு.

அவன் தரையைப் பார்த்தவனாய், "இப்பொழுது படிக்கவேண்டும்; இதிலெல்லாம் பொழுதைச் செலவிட்டுக்கொண்டிருந்தால் பரீக்ஷை போகவேண்டியதுதான்."

"அது எனக்கும் தெரியும், பரீக்ஷை முடிந்த பிறகுதான்"

"ஆனால் சரி! உங்களிஷ்டப்படி."

அனுபமையின் தாய் ஆனந்த மிகுதியினால் பூரித்தாள். ஒவ்வொருவராய் விஷயம் எல்லாருக்கும் தெரிவிக்கப்பட்டது: மதனி அனுபமையைக் கூப்பிட்டு "லல்லி! உன் புருஷன் பிடிபட்டுவிட்டான்" என்றாள்.

நாணத்தால் முகம் சிவக்கப் புன்முறுவலுடன் "எனக்கு முன்னமே தெரியும்" என்றாள்.

"ஏன்? ஏதாவது கடிதப் போக்கு வரத்து உண்டோ" என்று விஷமச் சிரிப்புடன் கேட்டாள் மதனி.

"காதல் அந்தர்யாமி. இதற்கு வெளிப்படையான கடிதங்கள் எதற்கு? மனத்திற்கு மனமே சாக்ஷி. மனமே சொல்லும்."

அவள் வெளியே சென்றதும் மதனி "சின்னவர்கள் வாயில் பெரிய வார்த்தைகளைக் கேட்டால் பற்றியெரிகிறது. நான் மூன்று குழந்தைகளுக்குத் தாயார். இந்த நேற்று முளைத்த நண்டு அசட்டுப்பிசட்டென்று என்னிடம் காதலைப்பற்றி வர்ணிக்கிறாள்" என்றாள்.

(தொடரும்.)

உங்கள் வியாபாரம் பெருக

நம் 'காவேரி' யில்

விளம்பரம் செய்யுங்கள்

பாம்பாட்டி

பாசரசு

மருதம் என்னும் ஊர். ஊரின் எல்லையில் ஒரு மலை. அந்த மலையடிவாரத்தில் ஏழெட்டுக் குடிசைகள். அதில் மூன்று குடிசைகளில் வசித்த பாம்பாட்டிகள் கதைதான் இது. இவர்கள் இருளர் (வில்லியர்). அந்த மூன்று குடிசைகளில் ஒன்றில் மாரி இருந்தாள். கதாநாயகியாகிய மாரி ஒரு அழகியல்லள். அவள் அப்படியிருந்தாலும் அவளைக் காதலிப்பவர்களும் இருந்தார்கள்.

இருளர் வயல்களில் உள்ள எலி வளைகளைத் தோண்டி, எலிகள் சேகரித்து வைத்திருக்கும் நெற்கதிர்களைத் திருடி எடுத்து வருவார்கள். எப்பொழுதாவது எலிகளோ, பாம்புகளோ, அவ்வளைகளில் அகப்பட்டால் அவைகளையும் பிடித்துக்கொண்டு வந்துவிடுவார்கள். நல்ல பாம்புகளை வீடு வீடாக எடுத்துச் சென்று, அவைகளை ஆடவைத்து அரிசியோ, பணமோ வாங்கிவருவார்கள். மாரியும் எலிவளைகளைத் தோண்டுவதில் கைதேர்ந்தவள். அதோடு செல்லன், பாலையம் இருவர் உள்ளங்களையும் தோண்டி அவைகளுக்குள் இவள் நுழைந்து கொண்டாள்.

ஒரு நாள் மாரி வயலில் எலிவளையொன்றைத் தோண்டிக்கொண்டிருந்தாள். அதே வயலில் வேறொரு இடத்தில் செல்லன் இன்னொரு எலி வளையைத் தோண்டிக்கொண்டிருந்தான். மாரி தோண்டிய வளையிலிருந்து ஒரு எலி தப்பி ஓடியது. அவள் அதைத் துரத்திக்கொண்டே போனாள். எலி, செல்லன் தோண்டிக்கொண்டிக்கொண்டிருந்த வளையில் போய்ப் புகுந்து கொண்டது. அதைப் பிடிக்கச்சென்ற வேகத்தில் மாரியின் கை செல்லன்மீது பட்டுவிட்டது. அவளுக்கு எங்கிருந்தோ என்றுமில்லாத கூச்சம் வந்துவிட்டது. செல்லன் மாரியைத் தன்வசப்படுத்த எவ்வளவோ கைதேர்ந்த முறைகளைக் கையாண்டு பார்த்தவன். ஆனால் ஒன்றும் பலிக்கவில்லை. இன்று மாரி தன் வலையில் விழுந்து விடுவாள் என்று அவன் மனம் சொல்லிற்று. அவன் மூளை பல யோசனைகளில் குழம்பியிருந்தது. அவன் திடீரென்று, "மாரி, இரு இதோ ஒன் எலியெப் புடிச்சித் தரேம்பார்" என்று சொல்லி வளைக்குள் கையை விட்டான். கையை விட்டதும் அவன் வீரிட்டு அலறினன். கையை வெளியே எடுத்து "ஐயோ என்னைப் பாம்பு கடிச்சுடிச்சே," என்று அலறினன். அவன் கை விரல்கள் ஒன்றில் இரத்தத்துளி ஒன்று தென்பட்டது. மாரி துடித்தாள். ஓடி ஒரு பச்சிலையைக் கொண்டு வந்து கசக்கி அவன் வாயில் பிழிந்தாள். செல்லன் மயக்கத்துடன் சாய்ந்தான். மாரி கூச்சமில்லாமல் அவன் தலையைத் தன் மடிமீது வைத்து, மேலும் பச்சிலைச் சாற்றைப் பிழிந்தாள். மாரி மனதை அலக்கழித்தான்—செல்லன். அவன் தன் நகத்தினலேயே விரலில் காயத்தை உண்டாக்கிக்கொண்டு பாசங்கு செய்தானென்று அவளுக்கு எப்படித் தெரியும்?

அன்றுமுதல் மாரியும் செல்லனும் அன்னியோன்யமாக இருந்தார்கள். இருந்தாலும் அவள் மனம் சாந்தமடையவில்லை. இவர்களுக்கிடையில் பாலையம் குறுக்கே நின்றுன். பாம்பாட்டிப் பாலையம் பாம்புகளைத் தன் குழலால் ஆட்டிவைப்பதுபோல் மாரியையும் ஆட்டிவைத்தான். அவன் வாசிக்கும் மகிடிக்குப் பாம்புகள் கட்டுண்டன. அதே மகிடிக்கு மாரியும் அடிமையானுள். பாலையத்திற்குப் பாம்புகளிடம் பயமில்லை. இருட்டுக்கும் அவன் பயப்படமாட்டான். அவன் சதா இருட்டில் பாம்புகளுடனே வசித்து வந்தான் என்று சொல்லலாம். அவன் இருட்டில் சொந்தமான இடத்தில் உட்கார்ந்து பொழுது போவது தெரியாமல் மகிடி வாசிப்பான். அவன் மகிடி வாசித்தால் இவளால் ஒரு வேலையும் செய்யமுடியாது. மகிடி இவளைப் பாலையத்திடம் அழைத்துச்செல்லும். மாரி பாலையத்திடம், "ஐய நிறுத்து, அத ஊதாத." என்று கெஞ்சுவாள். பாலையமோ விடாமல் வாசிப்பான். மாரி அவன் மடிமீது தலையை வைத்து அப்படியே மெய்மறந்து தூங்கிவிடுவாள். பாலையம் மகிடியை நிறுத்தினல் மாரி ஒன்றும் சொல்லிக்கொள்ளாமல் எழுந்துபோய் விடுவாள். அவள் பாதி தூரம் செல்லும்பொழுது பாலையம் திரும்பவும் வாசிப்பான். மாரி திரும்பவும் ஓடிவந்து அவன் கழுத்தைத் தன் கரங்களால் கட்டி அன்புடன், "இதோ பாரு, நீ அத ஊதனு யென் மனசு என்னமோ பன்னுது, கொஞ்ச நிறுத்தே," என்று வேண்டிக்கொண்டு அவன் முகத்தை நோக்குவாள். ஆனல் இருட்டில் மாரியின் கண்களில் வெளிப்படும் காதலைப் பாலையத்தினல் பார்க்கமுடிகிறதில்லை. இப்படியாக மாரியின் மனம் செல்லனுக்கும் பாலையத்துக்கும் நடுவே நடனமாடிக்கொண்டிருந்தது.

ஒரு நாள் பாலையம் அதிகநோம் மகிடி வாசித்துக்கொண்டிருந்தான். மாரி பாலையத்தைவிட்டு அப்பால் செல்லவில்லை. மாரி அவள் குடிசைக்குச் சீக்கிரத்தில் திரும்பாதது செல்லனுக்கு வேதனையை உண்டாக்கிற்று. அவனுக்குப் பாலையத்தின்மேல் சந்தேகம். மகிடி

ராகம் உண்டான திசையை நோக்கிச் செல்லன் நடக்கலானான். மலையடிவாரத்தில் ஒரு பாறையின்மேல் இரண்டு உருவங்கள் இருட்டில் தோன்றின. அவை யாருடையவை என்பதைச் செல்லன் தெரிந்துகொண்டான்.

மறுநாள் வெகு நேரம் கழித்துச் செல்லன் தன் குடிசைக்குத்திரும்பினான். அவன் ஒரு பானையில் ஏதோ ஒன்றைப் போட்டு மூடினான். அதே சமயம் மாரி உள்ளே வந்தாள். "பானலே இன்னா?" என்று கேட்டாள் மாரி. செல்லன் பதில் ஒன்றும் சொல்லாமல் அவளை முறைத்துப் பார்த்தான். மாரி நிஜமாகவே பயந்துபோய்விட்டாள். அவள் நேராகத் தன் குடிசைக்குப்போய் விட்டாள்.

எங்கும் நிசப்தம். இரவு பன்னிரண்டு மணி. குடிசைகள் ஒன்றிலாவது விளக்கு வெளிச்சம் கிடையாது. சந்திரன் மட்டும் மேகங்களுக்கு அப்பால் மங்கலாகத் தெரிந்தது. கீழே மருதத்தில் நடக்கப்போகும் சம்பவங்களைப் பார்க்க நிலாவுக்குப் பிரியமில்லை போலும். மேகங்களுக்கும் இக்காட்சிகளைக் காணப் பிரியமில்லாமல் அதிவேகமாக ஓடிக்கொண்டிருந்தன. அதனால் நிலவு, சில சமயங்களில் மருதத்தின் மேல் தன் ஒளியை வீச நேரிட்டது. செல்லன் ஒருவன் மட்டுமே விழித்திருந்தான். அவன் பானையருகே சென்று அதிலிருந்து ஏதோ ஒன்றைக் குடிசைக்கு வெளியே கொண்டுவந்தான். அந்த மங்கலான நிலவொளியில் கருநாகம் பளபளவென்று இருந்தது. கருநாகம் வாலைக் குழைத்துக்கொண்டிருந்தது. செல்லன் நேராகப் பாளையத்தின் குடிசைப்பக்கம் சென்று கருநாகத்தைக் குடிசைக்குள் விட்டுவிட்டு ஓடிவந்து தன் குடிசையில் படுத்துக்கொண்டான்.

அவன் பாளையத்தின் கூக்குரலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவன் எதிர்பார்த்தது போல் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் பாளையத்தின் கூக்குரல் கேட்டது.

எல்லா இருளரும் பாளையத்தின் குடிசைக்கெதிரில் கூடிவிட்டார்கள். அக்கூட்டத்தில் செல்லனும் இருந்தான். விளக்குக்களை ஏற்றிப் பார்த்தார்கள். மாரி செல்லன் முகத்தைப் பார்த்தாள். அவன் முகம் பயத்தினால் வெளுத்திருந்தது. மாரி செல்லன் குடிசைக்குள் ஒரு விளக்குடன் சென்றாள், செல்லன் அவளைப் பின்தொடர்ந்தான். அன்று மாலை செல்லன் ரகசியமாக மூடிய பானை திறந்திருந்தது.

"இது ஒன் வேலையா?" என்று கேட்டாள் மாரி. செல்லன் பதில் சொல்லவில்லை. மேலும், "இது மாதிரி மனுஷன் எனக்கு பிடிக்கல..." என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து விர் என்று வந்துவிட்டாள். செல்லன் மனதில் பற்பல எண்ணங்கள் தோன்றின. பாளையம் படுத்திருந்த இடத்திற்குச் செல்லன் வந்தான். பாளையத்தைப் பாம்பு கடித்த இடத்தில் வாயை வைத்து விஷத்தை உறிஞ்சினான்.

"செல்லா, பத்ரமா உறிஞ்சி கீயெ மூஞ்சுடு" என்றாள் ஒரு கிழவி.

செல்லன் அப்படிச் செய்யவில்லை. அவன் விஷ ரத்தத்தை உறிஞ்சியதும் வேண்டுமென்றே அதை உட்கொண்டான்.

செல்லன் இறந்து ஒரு வருஷம் ஆயிற்று. பாளையமும் மாரியும் இப்பொழுது ஒரே குடிசையில் இருந்தார்கள். அவர்கள் குழந்தையின் பெயர் செல்லன் என்று சொல்வதில் ஆச்சரியமில்லை.

Telegrame 'FLOWER' 'Telephone No. 66

SOUTH INDIA CORPORATION
(MADRAS) LTD.,

Dealers in all kinds of Hardware, Electric, Sanitary, Piece goods and Produce goods

CHAKRAPANISWAMI KOIL SOUTH GATE,
KUMBAKONAM.

எல்லாவிதமான இரும்பு, எலக்டிரிக் சானிடரி சாமான்களும், நவதான்யங்களும் நியாயமான விலைக்கு மொத்த வியாபாரம் செய்பவர்கள்,

ஸௌத் இந்தியா கார்ப்பொரேஷன்
(மதராஸ்) லிமிடெட்

சக்ரபாணிஸ்வாமி தெற்குக் கோபுர வாசல்
கும்பகோணம்.

விடிந்தது

எம். எஸ். கமலா

'மணியை'ப் பரீக்ஷைகள் முடிந்ததும் நேராய் ஊர்வந்து சேரும்படி 'மிராஸ் மீனாக்ஷிசுந்தரமய்யர்' கடிதம் எழுதினார். அவன் பரீக்ஷை என்று முடிவடையும் என்று தந்தைக்கு எழுதியிருந்தானே, அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே பரீக்ஷைகள் முடிந்துவிட்டதினாலும், இரண்டாண்டுகளாய்ச் சொந்தக்கிராமத்திற்கு வராததினாலும், தந்தை கடிதத்தைப் பார்த்ததும் கிராமத்திற்கு வந்தான். அவர்கள் கிராமத்திற்கு ஐந்து மைலுக்கப்பால் 'ரயில்வே ஸ்டேஷன்.' அன்று அருமையான காளைகள் பூட்டியவண்டி, 'மணி'க்காக மணிக்கணக்காய்க் காத்திருந்தது. பட்டணத்திலிருந்து பெரியய்யர் வீட்டுப் பையன் இன்னிக்கு வருதாம் என்று எங்கே கண்டாலும்பேச்சு. உரிய காலத்தில் புகைவண்டித் தொடரும் வந்தது. வலதுகையில் இரண்டோர் புத்தகங்களும் இடதுகையில் கைக்குடையுமாய் 'மணி' ரயிலிலிருந்து இறங்கினான். ஒவ்வொரு பெட்டியாய்ப் பார்த்துக்கொண்டிருந்த படையாச்சி "எசமான்! இதோ வந்திருக்கேனுங்க" என்று சொல்லி ரயிலிலிருந்து ஹோல்டாலையும் டிரங்கையும் வெளியில் ' எடுத்தான். "அடே! அதோ மூலையிலிருக்கும் இரண்டு கூடைகளையும் எடுடா!" என்றான் மணி.

சற்று நேரத்தில் மயிலைக் காளைகள் பூட்டிய வண்டி 'ஜல், ஜல்' என்று சப்தித்துக்கொண்டு அக்ரஹாரத்தினுள் சென்றது. மணி கால்கள் இரண்டையும் தொங்கப்போட்டுக்கொண்டு கையில் வைத்திருந்த புஸ்தகத்தைப் படித்தவாறே சென்றுகொண்டிருந்தான். அவன் கிராமக் காட்சிகளையும் காணவில்லை. விநோதமான அக்காலைக்காட்சி அவனை ஆகர்ஷிக்கவில்லை. அவன் கையிலிருந்த புஸ்தகம் அவன் முழுமனதையும் இழுத்தது. வேகமாய்ப் போய்க்கொண்டிருந்த வண்டியின் சக்கரங்களுக்கிடையில் ஓர் பெரிய கல் தடுக்கவே வண்டி அதிக வேகமாய் மேலெழுந்து அசைந்து கொடுத்தது. அவன் நினைவு கலங்கி முன்புறம் நோக்கினான். ஓர் சிறிய வீட்டின்முன் சம்பங்கி மரத்தின் மேல் ஒய்யாரமாய்ச் சாய்ந்துகொண்டு ஓர் மங்கை நின்றுகொண்டிருந்தாள். 'கிராமாந்தரத்திலும் இவ்வளவு அழகுள்ள மங்கையா?' என்று அவன் மனம் அவனையே கேட்டது. கிராமத்திற்கும் அழகிற்கும் சம்பந்தமில்லையா? காலிவிட்ட செம்பஞ்சுக் குழம்பு, காற்றிற் பறக்கும் சுருண்ட கூந்தல், இளம் ரத்தம் தங்கு தடையின்றிப் பிரவகிக்கும் சௌந்தர்ய முகம், யௌவனத்தின் பரிபூரணத்தையறிவிக்கும் மங்கைப் பருவம், இவ்வளவும் மணியை ஆகர்ஷிதன. "படையாச்சி! இது யார் புதுசாயிருக்கிறது!"

"ஆமாங்கோ! புதுசுதான். எங்கிட்டோ மேற்குச்சீமையிலிருந்து தாயும் மவளுமாய் வந்திருக்கிறாங்கோ; இந்த வீட்டெ நம்ப சோசிய அய்யர் (ஜோதிடர்)கிட்ட. ஆயிரத்துக்கோ..... வாங்கிக்கிட்டாங்க. முருகன் மவ வீராயிதான் அவுங்க வீட்டு வேலெ செய்துங்க"

"அவுங்கப்பன் என்ன செய்யறானாண்டா?"

"அது தெரியாதுங்க. வீராயியைத்தான் கேக்கணும். இவுங்கவேலெ எத்துக்கின புரவு (பிறகு) அவ ஊட்டுக்குக்கூட அதிகம் வாரதில்லே. அங்கிட்டே இருக்கிறு" இவைகளெல்லாம் அவன் காதில் விழவில்லை. "தாயும் மவளும் வந்திருக்கிறாங்கோ" என்றதுதான் மறுபடியும் மறுபடியும் அவன் காதில் ஒலித்தது. இவன் வண்டி நாலுகால் பாய்ச்சலில் தூரமாய்ப்போகப்போக அவள் உருவம் சிறுத்துக்கொண்டே வந்தது. அவள் உருவம் எவ்வளவு சிறுத்தாலும், அவன் மனதிலென்னவோ சிறுக்கவில்லை. "கிராமாந்தரத்திலும் இவ்வளவு அழகுள்ள மங்கையா?" என்னும் கேள்விதான் அவனுள் எழுந்தது. வண்டி வீட்டருகில் வந்து நின்றதையும் கவனிக்கவில்லை. ஏதோ யோசனை. படையாச்சி வண்டியைவிட்டு சடக்கென்று கீழிறங்கி, காளைகளைத் தட்டிக் கொடுத்து முன்புறமிருந்த 'ஹோல்டாலை' எடுத்துக்கொண்டு வீட்டினுள் சென்றான். உள்ளிருந்து வெளியில்வந்த மீனாக்ஷிசுந்தரமய்யர்! "என்ன? மணீ! வண்டியை விட்டிறங்க மனமில்லையா?" என்று கேட்டபின்தான் தன் நிலையடைந்தான். வண்டியை விட்டிறங்கித் தந்தையின் அருகில் சென்று நின்றான். அவன் மடிப்புக்கலையாச் சூட்டையும், வகிடுகலையாக் கிராப்பும், கருநீலக் கண்களையும், விசால நெற்றியையும், பட்டணவாச நாகரிகத்தையும் கண்டு மயங்கினார். அவர் கண்களின் நுனியில் பூர்வ ஞாபகம் என்ற கண்ணீர் துளித்தது.

காலைக்கிருத்தியங்களை முடிக்கச்சென்ற எத்தனையோ ஜனங்கள் 'மிராஸ்' வீட்டில் காலையிலேயே வண்டி நிற்பதைப் பார்த்து, உள் நுழைந்து பிள்ளையைப்பார்த்து க்ஷேம சமாசாரம் விசாரித்துச்சென்றனர். ஊர் பாட்டிகளும், அம்மாமிகளும் இடுப்பில் குடமும், தோளில் அழுக்குத் துணியுமாய் உள்நுழைந்து "அத்தை 'மருமான்' வந்திருக்காப்பலே

இருக்கு. இன்னிக்கு ஆற்றங்கரைக்கு வரச் சௌகரியப்படாதுபோல் இருக்கு" என்று கேள்வியும் விடையுமாய்க்கேட்டுச்சென்றனர். மிராஸின் வீடு இவ்வளவு அமர்க்களப்படும் போது 'மீனாக்ஷிசுந்தரமய்யர்' பெருமையுடன் மகனிடம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார். மகனுக்கோ மனது எங்கெங்கோ சஞ்சரிக்கிறது. தாயில்லாததன்னை அன்னையைவிட அதிக அன்பாய் வளர்க்கும் அத்தை தயாரித்த 'காபி'யைப்பருகி அவளருகில் அமர்ந்து ஆசையுடன் பேசிக்கொண்டிருந்தான். அத்தையோவெனில் அவன் ஊரைவிட்டுச்சென்றதுமுதல் கிராமத்தில் நடந்த அத்தனை விசேஷங்களையும் மறவாமல் கோர்வையாய்ச்சொல்லிக்கொண்டிருந்தாள். முன்பெல்லாம் கிராம விஷயங்களைக் கேட்க வெறுக்கும் அவன் இன்று கிராமத்தின் ஒவ்வொரு சிறு விஷயத்தையும் ஊக்கத்துடன் கேட்டுக்கொண்டிருந்தான்.

அந்தம்மாள் பேசிக்கொண்டிருக்கும்போதே "நீதான் ரெண்டு வருஷமாய் வரவில்லையே மணி! இந்த ஊரில் ஒரு விசேஷம். 'ஜோஸியர் அகோரமய்யர்' சில்லரைக் கடன் கட்ட வகையில்லாமல் அவர் வீட்டின்மேல் கொஞ்சம் பணம் உங்கப்பாவைக்கேட்டார். உங்கப்பா இந்த கிராமத்தில் வீடு எதற்கு வெட்டிக்கு. நஞ்சையோ, புஞ்சையோ ஆனாலும் வாங்கலாம் என்று கண்டிப்பாய்ச்சொல்லிவிட்டான். இப்போ அந்தவீட்டை ஆயிரத்துக்கோ என்னவோ 'அன்னபூரணி' அதை வாங்கிவிட்டாள். வீட்டை ரொம்ப நன்னா அலங்காரம் பண்ணி வெச்சிருக்காளாம். அவ பொண் 'ஷோக்கு' காலம்பர எழுந்தா தோட்டத்தைப்பார்த்துப்பார்த்து விதவிதமாய் செடிகளை நடுவது. பூவும், காயும் அவ வீட்டிலே இருப்பது இங்கு இந்த சுத்துப்புறம் எங்கும் கிடையாது. 'ஷோக்கு' ரொம்ப அழகுள்ளவள். சண்டைக்குப்பயந்துண்டு அவா இங்குவந்திருக்கா. அவ அம்மா எங்கும் வரதில்லை. பொண்தான் கொஞ்சம் ஆத்மீகமாய் இருக்கிறவா வீட்டுக்கு வரா. அந்தக்கொழுந்தெ பொண் நெல்லோ நீரோ வேணும்னா நம்பளிடம்தான் வாங்கிண்டு போவா. ரொம்ப நன்னா பாடரா" என்றெல்லாம் மூச்சுவிடாமல் கடகடவென்று சொன்னாள். 'மணி' தான் பார்த்த பெண் 'ஷோக்கு'' என்றறிந்தான். உண்மையில் அவள் 'ஷோக்'தான்.

"மணி! இந்த இரண்டு வருஷமாய் 'ரிஸர்ச்' 'ரிஸர்ச்'சென்று ஊர்புறமே வராமலிருந்தாய். மீனாவின் பெண்ணுக்கோ வயதாகி விட்டது. அவ ஆம்படையான் இந்த வைகாசியில் கட்டாயம் கல்யாணம் நடத்தித் தீரவேண்டுமென்கிறான். அதனால்தான் உன்னை இவ்வளவு அவசரமாய்ப் பரிக்ஷை முடிந்ததும் வா, என்றெழுதினேன். நீ கல்யாணம் பண்ணிண்டு அப்புறம் எவ்வளவு வருஷம் வேணுமானாலும் 'ரிஸர்ச்' பண்ணு" என்று அவர் சொன்னதும் மணிக்குச் சிரிப்பு அடக்கக்கூடாமல் வந்தது.

சிரித்தபடியே "அப்பா! எனக்கிவ்வருஷம் கல்யாணம் வேண்டாம். அப்படி அவாளுக்கு அவசரமாயிருந்தால் எங்காகிலும் கொடுக்கட்டும். அதைப்பற்றிஎனக்குக் கவலை இல்லை."

"வாஸ்தவம்தான். நானும் அப்படித்தான் சொன்னேன். சீமாச்சு (ஸ்ரீநிவாஸன்) கேட்டால்தானே! வேறிடமும் பார்க்கமாட்டானும். நீ தான்........"

தந்தையின் சொல் முடியும் முன்பே "என்ன நான் தான் அவா பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள வேணும். அதுவும் அவர்கள் இஷ்டப்படி! என் கல்யாணம் நான் இஷ்டப்பட்டபோதுதான் என்று கண்டிப்பாகச் சொல்லிவிடுங்கள்"

"இன்று அவன் வருவான். நீயே சொல்லிவிடு. நான் சொன்னால் அவன் நம்பமாட்டேன் என்கிறான்" என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே நாற்பது வயதுள்ளவர் ஒருவர் பதினாறு வயது மங்கையுடன் உள் நுழைந்து "எவன் நம்பமாட்டேன் என்கிறான்?" என்றார்.

"ஆயுஸ் நூறு. வந்தையா? வா! உன் சமாசாரம்தான். வேம்புவை இந்த வருஷமே கல்யாணம் பண்ணிக்கணும்னு 'சீமாச்சு' சொல்றான் என்றேன். மணி இவ்வருடம் கல்யாணம் வேண்டாம் என்கிறான். அதைத்தான் நான் உன்னிடம் சொன்னால் நீ நம்பமாட்டேன் என்கிறாயே! என்றேன்."

"என் அப்பா! மணி! உனக்கு இந்த வருஷம் கல்யாணம் நடந்தால் என்ன அசௌகரியம்? அதைச் சொல்லேன்"

"வருகிற வருஷம் நான் செய்துகொண்டால் என்ன? எப்படியும் அவளை எனக்குக் கொடுப்பதாய்ச் சொல்லிவிட்டீர்கள். இந்த வருஷமே செய்யவேணுமென்று பிரார்த்தனை ஒன்றுமில்லையே?"

"அதொன்றுமில்லை"

"அப்படியானால் வருகிற வருஷம்தான் செய்து கொள்வேன்" என்றான். அடுக்களையில் வேம்புவும் அத்தையும் பேசிக்கொண்டிருந்தனர். 'மீனா' மிராசின் ஒன்றுவிட்ட சகோதரி. அவள் பெண் வேம்பு. "பெரியம்மா! மணி எப்பொழுது வந்தான். இப்பொ ரொம்ப நன்னா இருக்கான் இல்லே?" என்றாள் அத்தையிடம். அவள் அசட்டுத்தனத்திற்கு அத்தை வாய்க்குள் சிரித்துக்கொண்டு காதுகேட்காதவள் போல தன் வேலையில் ஆழ்ந்தாள். மாலை ஆறு மணி அடித்துவிட்டதால் மணி எழுந்து வெளியில் புறப்பட ஆயத்தமானான். நேராய்க் களத்திற்குச் சென்றான். அங்கிருந்த புக்கை மரத்தின் கீழே சற்று வீற்றிருந்தான். அவ்விடம் இவனுக்கு வண்டியோட்டிய 'படையாச்சி' வந்து ,"சின்ன எஜமானர்களா? நம்ப ஊரில்

புதுத்தோட்டம் வெச்சிருக்காங்கோ பாக்கறீங்களா? கிளிகொஞ்சுது தோட்டம்" என்று கேட்டவாறு அருகில் வந்தான். "நான்ஸென்ஸ்" என்று முணு முணுத்துக்கொண்டே வெறுப்புடன் எழுந்தான். அவன் மனதில் அளவற்ற யோசனை அலைகள். அதை அடக்கவோ, தள்ளவோ கூடாமல் அவன், (தன் சிந்தனைகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் போது ஏதோ குடி முழுகியதைப்போல் அழைத்தால் யாருக்குத்தான் வெறுப்பேர்ப்படாது.) 'படையாச்சி' முன்செல்ல அவன் பின்தொடர்ந்தான்.

அக்கிராமத்தில் மேற்கு அக்கிரஹாரத்திற்கப்பால் தெருக்களே இல்லை. மேற்கு அக்கிரஹாரத்தைத் தாண்டினால் அழகிய 'கபிலை' (ஆறு) ஓடுகிறது. அதற்கிருமருங்கிலும் தனித்தனியாய்ச் சிறு சிறு யுத்த வீரர்களின் கூட்டத்தைப்போல் மூங்கிற்புதர்கள். அப்புதர்கள் வளைந்து வளைந்து, வருபவர்களை வா! வா! என்றழைப்பனபோன்றன 'கபிலை மேற்கிலிருந்து கிழக்கு முகமாய் ஓடுகிறாள். மேற்குத் தெருவிலும் கிழக்குத் தெருவிலும் இருப்பவர்கள் வீட்டின் பின்புறம் ஆற்றிற்குச்செல்ல ஒவ்வொரு படித்துறையுண்டு. மணி மேற்குப்புறம் நடந்துகொண்டிருந்தான். அக்கிரஹாரத்தின் கோடியில் ஓர் சிறிய வீட்டிலிருந்து இனிய சங்கீதம் வெளிவந்து மலையாநிலகுமாரன் (காற்று) செல்லும் திசைகளிலெல்லாம் வருவோர் போவோரை மெல்லத்தட்டி எழுப்பிவிட்டுச் சென்றுகொண்டிருந்தது. 'கபிலை' யின் மேற்குக்கரையோரமே சென்றுகொண்டிருந்த மணி "சீமர்ச்சு பெண் 'வேம்பு' பேரை பார்க்கல்லை, பேரை" என்று தன்னுள்தானே முணுமுணுத்துக்கொண்டு சென்றவன்காதில் "அருமை மிகு தருக்காள்! செழும் செடிகாள்! இசைக்குயிலே!" என்ற ராகமாலிகை வெகு இனிமையாய் காதில் விழுந்தது. கானம் வந்த திக்கை நோக்கித் திரும்பி நின்று பார்த்தான்.

"அந்தப்பாடரவங்கத்தான் புதுத்தோட்டக்கார அம்மா" என்றான் படையாச்சி. மணியின் கண்ணிற்கு யாரும் தென்படவில்லை; சங்கீதம்தான் கேட்டது. இரண்டடி முன் சென்றான்; முட்களால் தடுக்கப்பட்ட வேலிக்கு அப்புறம் ஓர் பதினெட்டு வயது மங்கை புடைவையை வரிந்து கட்டிக்கொண்டு செடிகளுக்கு நீர் பாய்ச்சியபடி மேற்படி பாட்டைப் பாடிக்கொண்டிருந்தாள். 'வன்ய திருச்யங்களுக்கேற்றபடி பாட்டு, அவள் ரூபம், எல்லாம் ஏர்வையாய் இருந்தன. இளம் மேகவர்ணச் சேலை, வெண்பட்டு ஜாகெட். மலர்ந்தும் மலராமலும் இருக்கும் மல்லிகை மலர்கள், அதன் அழகை அதிகப்படுத்த அதன்மேல் இலைகளும், மொக்குக்களும் சேர்ந்த ஓர் சிறிய ரோஜாக்கொத்து அவள் கூந்தலில் கட்டுண்டு அழகிற்கு அழகு செய்ததைப்போல் இருந்தது அக்காட்சி. மாலை நேரமும், மனதை வசீகரிக்கும் தோற்றமும் மையலை எழுப்பும் மங்கையும் இவைகளைக் கண்டு.........யௌவனத்தின் உத்வேகத்தைக் கிளப்புவதாயிருந்தது வசந்தருது. வாலிபன் மனதை மயக்கும் சங்கீதம். மாலை வேளை இன்பத்தை எழுப்பும் இயற்கைத்தோற்றம். சௌந்தர்ய பிபாஸிக்குவேண்டிய சௌந்தர்ய நீரோடை. மணி மயங்கி கற்சிலைபோல் நின்றான்.

"எசமான்! நான் சொன்ன தோட்டம் இதுதான். ஓர் அறியா பொம்பிள்ளையின் சமர்த்து என்றான்" படையாச்சி.

மணியின் காதில் இவன் சொல்வதொன்றும் விழவில்லை. கிராமத்தின் மாலைக்காட்சி மஹா தபஸ்வியையும் மயக்கும்விதமாய் இருந்தது. பலதிறப்பட்ட த்வனியுடன் கிராமிய பாஷைகள்எதிரொலியுடன் வெளிவருவதும் பசுக்கள், எருமைகள், ஆடுகள் முதலிய வீட்டு மிருகங்கள் தங்கள் தங்கள் வீட்டை நோக்கி 'அம்பா' என்று ஆர்வத்துடன் தங்கள் தங்கள் சந்தானங்களை அழைத்துக்கொண்டு செல்லும் காட்சி, திக்கு நோக்கித் தங்கள் பார்வையைக் கனிவுடன் செலுத்திக்கொண்டு குதித்தோடும் கன்றுக்குட்டிகள், தங்கள் மேனியில் படிந்த கஷ்டசின்னங்களான புழுதியை (அழுக்குக்) கழுவிக்கொண்டு கந்தைத் துணியையும் கால்வயிற்றுக் கஞ்சியையும் இன்பமுடன் ஏற்று, ஆனந்தத்துடன் ஆரோக்கியமாய் வீடு நோக்கிவரும் உழவர்கள், கன்னிப்பெண்கள் பசும்பொன்னையும் தோற்கடிக்கும்படி தேய்த்த பித்தளைக் குடங்களில் நீர் நிரப்பிக்கொண்டு, மாலைக் கதிரவனின் மனதை மயக்கும் செம்பொன் கிரணங்கள் பளபளப்பாய் இருக்கும் பாத்திரங்களின்மேல் மின்ன, தங்கள் மீன்விழிகளை நாற்புறமும் திருப்பியபடி பெண் யானைகளைப்போல் அசைந்து ஆடிக்கொண்டு நடந்துவரும் காக்ஷி மணியின் மனதை மயக்கியது. அவன் தன்னை மறந்துநின்று பார்க்கலானான். "கிராமத்திலும் இவ்வளவுசௌந்தர்யம் நிரம்பி இருக்கிறதா? அழகிற்கு இடம் வேண்டுமா? இனம் வேண்டுமா? கருப்பிலும் அழகு; கள்ளிமுள்ளியிலும் பசுமை. முட்செடிகளைக் கண்டால் வெறுக்கிறோம்; பிடுங்கி எறிகிறோம்; அதன் பசுமையான இனிய தோற்றத்தில்மயங்குகிறோம். ஸ்ருஷ்டி தேவியின் சித்விலாஸத்திற்கு மயங்காதவர் யார்? வன்ய மிருகங்களே .... "நாய்க்கும் சூலழகு, பன்றிக்குட்டியும் பருவத்திற்கு அழகு" என்பது மூதுரை. கிராமத்தில் அன்யாதர்ச அழகு. என்ன ஆச்சரியம்? அவனையறியாமல் அவன் கண்கள் காந்தத்தால் ஆகர்ஷிக்கப்பட்ட இரும்பைப்போல் அவளிடம் சென்று லயித்தன. அவள் தன் வேலைமேல் கண்ணாய் இருந்தாள், வேலையின் அசதியால் நெற்றியில் வியர்த்து வடிந்தது. நெற்றியில் துளிர்த்த நீரை விரலால் சுண்டி எறிந்துவிட்டு, அவ்விடமே மாமரத்தில் கட்டியிருந்த ஊஞ்சலில் அமர்ந்து வேகமாய் ஆடினாள்.

வேலியின் ஓரம் ஓர் பெரிய சம்பங்கி விருக்ஷம். அதன் மணம் விபரீதமாய் இருக்கிறது. அதன்கீழ் ஓர் சிறிய கருங்கல் திண்ணை. அதின் மேல் விவித வர்ணைப்பாடுள்ள வாசனை மலர்கள். இவையெல்லாப் பார்த்த மணிக்கு அது தேவலோகமாயும், அவள் ஊர்வசியாகவும் தோன்றயிாயிற்று.

"படையாச்சி! இத்தனை பூவை இவள் என்ன செய்கிறாள்?" என்று கேட்கும்போதே சில பெண்கள் அவ்விடம் வந்தார்கள். "அக்கா! எங்களுக்குக் கொஞ்சம் பூ வேண்டும்." அதில் ஓர் சிறுமி "அக்கா! நாளைக்கு எங்கக்காளுக்குப் 'பூச்சூட்டல்', அம்மா சொன்னாள். உங்காத்தில் எவ்வளவு தினுசு 'பூ' இருக்கோ எல்லாத்திலும் ரெவ்வெண்டணாவுக்கு வாங்கி வரச் சொன்னாள்" என்றாள்.

அப் பெண் புன்முறுவலுடன் எழுந்து "வீராயி! வீ...ரா...யி!" என்று குயிலைப்போல் கூவினாள். கறுத்த மேனியும், மினுமினு என்று கோதிமுடிந்த கொண்டையும், அதில் மரு, மருக்கொழுந்து, சம்பங்கியும், எந்நேரமும் வெற்றிலை சுவைத்துக் காவி ஏறிய பற்களுமுடைய ஒரு ஸ்திரீ "ஏன் கண்ணா!" என்றழைத்தவாறே கையிலிருந்த சுண்ணாம்பை உருட்டி வாயில்போட்டபடி அவ்விடம் வந்தாள். "இவர்களுக்கு வேண்டிய 'பூக்களை' க்கொடு" என்று அவ்விடம் விட்டகன்றாள்.

3

காலை மணி ஆறடித்தது. மணி மெள்ள தன் படுக்கையை விட்டெழுந்தான். அத்தை அவனுக்குக் 'காப்பி' கொடுத்து, "மணி! நேத்தி ராத்திரி எல்லாம் என்னடா அப்படிப் பினாத்தினே! மீனாக்ஷிகூட (மீனாக்ஷிசுந்தரமய்யரை அந்தம்மாள் அப்படி அழைப்பது) பயந்துட்டான். ராத்திரியெல்லாம் உன் பக்கத்தில் உட்கார்ந்து தொட்டுப் பார்த்தபடி இருந்தான்".

"அத்தை! நான் என்ன பிதற்றினேன். சரியான தூக்கம் இல்லை."

"என்னவோ 'ஊர்வசி' 'பூந்தோட்டம்' 'அவள் ஊஞ்சல்தான் சரியில்லை, இதென்னடா அதிசயம்?"

அவன் முகம் அசடுதட்டியது; உடம்பு சிலிர்த்தது; குபீரென்று வியர்த்தது. மேலே போட்டிருந்த துவாலையால் முகத்தைத்துடைத்துக்கொண்டான். முதல்நாள் பூந்தோட்டத்தருகில் நின்று தன் கால்கள் பெயராவிடினும் தன் புத்தி வலிமையினால் 'முரட்டுப் பசுவை இழுத்துச் செல்லும் இடையன்போல்' தான் அவ்விடம் விட்டகன்றதும், இரவு முழுதும் சிங்காரியின் நினைவும் மனதை ஆகர்ஷிக்கும் அந்நந்தவனமும் அவனைச் சரியாய் நித்திரை கொள்ளவிடாமல் தொந்தரை செய்தன.

போன்: 66 தந்தி: 'FLOWER'

கமர்ஷியல் எம்போரியம்

பட்டு, சுதேசி ஜவுளி வியாபாரம்,

பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

நவநாகரீகம் பொருந்திய பட்டு & நூல் புதுரகச்சேலை தாவணி ரகங்களும், எங்கள் சொந்த கைத்தறிகளிலேயே தயாரிக்கப்படுவதால் மிக உறுதியாகவும் நீடித்த உழைப்பிற்கு ஏற்றதாகவும் கெட்டிச் சாயத்திற்கு உத்தரவாதமுள்ளதாகவும் கிடைக்கும்.

தவிர பீஸ்குட்ஸ் ரகங்களும், வாயில், ஷர்ட்டிங், கோட்டிங், காடா பீஸ் முதலியவைகளும் சுதேசி ஜவுளி வகைகளும் கிடைக்கும்.

ஒருமுறை விஜம் செய்து பார்க்கக் கோருகிறோம்.

South India Corporation [Madras] Limited,
Chakrapaniswami Koil South Gate,
KUMBAKONAM.

ஆனால் அவன் திரனுதலால் தன்னைத்தான் அடக்கிக்கொண்டான். எவ்வளவுதான் அடக்கிக் கொண்டாலும் கனவும் நினைவும் சேர்ந்து அவன் வாய் பிதற்றி விட்டது. தன்னை யறியாமல், "ஆமாம். அத்தை. நினைவு வருகிறது. நல்ல அழகான பூந்தோட்டம். அதில் அழகு விக்கிரகம் ஒன்று மாங்கிளையில் கட்டியிருந்த கயிற்று ஊஞ்சலில் ஒய்யாரமாய்ப் பாடிக் கொண்டு ஆடுகிறாள். சில பெண்கள் அத் தோட்டத்திற்குள் நுழைந்து அவளைப் புஷ்பம் கேட்கிறார்கள். அவ்விக்கிரகம் அவர்கள் வேண்டிய புஷ்பங்களைத் திருப்தியுடன் அளிக்கிறாள். எவ்வளவு அழகான கனவு அத்தை?"

அத்தை அவன் சொல்வதைக்கேட்டு "நல்ல சகுனம்தான். கன்னிப் பெண்கள் புஷ்பம் வாங்கிக்கொண்டு போனதால் சீக்கிரம் உனக்குக் கல்யாணம் ஆகிவிடும். நேற்று சீமாச்சு கூட இது விஷயமாய்ப் பேசிவிட்டுப் போனான் என்று மீனாக்ஷி சொன்னாள்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது மிராஸ் உள் நுழைந்து, "அக்கா! சீமாச்சு வீட்டுக் கல்யாணத்திற்கு அந்த நான்கு நாளும் அழகிய மாலைகளையும், புஷ்பங்களையும் அந்த அகோரமய்யராத்திலிருக்கும் பெண்ணைச் 'சப்ளை' செய்யச் சொல்லு. என்ன ஆறதோ கொடுக்கலாம்."

"அவகிட்டே ஒரு கல்யாணத்துக்குச் 'சப்ளே' பண்ணறம்புட்டு 'பூ' இருக்கா? என்னவோ கொழுந்தேபொண் போதுபோகாமே செடியே வந்து அதுலே பூக்கும் பூக்களைக் காலனு அரையனுக்குக் கொடுத்துண்டிருக்கான்னு, அவள் கல்யாணத்திற்குக் 'பூ' சப்ளை பண்ணனும்னு சொல்றயே?"

"நானும் அப்படித்தான் நினைச்சிண்டிருந்தேன். நேத்து சீமாச்சு சொன்னான், போன மாசம் கோபு வீட்டுக்கல்யாணத்திற்கு அம்புட்டுப்பூவும் தினுசுதினுசா கொடுத்தது இவதானும். போனமாஸம் ரெவின்யூ இன்ஸ்பெக்டரும், தாசில்தாரும் வந்தபோது மாலைகள் கட்டிக்கொடுத்ததும் இவள்தானும். நீ எதுக்கும் அவளிடம் சொல்லி அச்சாரம் (அட்வான்ஸ்) ஒரு அஞ்சுரூபாய் கொடுத்துவை, கடைசியில் விழிக்கவேண்டாம்" என்று சொல்லி, "மணி! என்னுடன் வரையா? நான் வளையல் பட்டிக்குப் (ஓர் சிறு கிராமம்) போகிறேன்; மீனுவை நேரில் பார்த்துப் பேசி முகூர்த்தம் எப்போ வைக்கலாம்னு யோசனை செய்து கொண்டும் மத்த விஷயங்களையும் நேர்படவே பேசிக்கொண்டும் வந்து விடுகிறேன். இதைக் கேட்டதும் அவன் தலையில் பெரிய பாறாங் கல்லை எடுத்துப் படீர் என்று போட்டதுபோல் தோன்றிற்று. "என்னடா சாயங்காலம் வந்து விடுவேன். வா! மீனுவை நேரிடையாகவே உனக்கு என்னவேண்டுமோ கேட்கலாம்"

தன்னை மெள்ளச் சமாளித்துக்கொண்டு "இல்லையப்பா! நான் வரவில்லை. இன்னொரு நாள் பார்க்கலாம்" என்று முடித்தான். அவர் அவ்விடம்விட்டகன்றார். அச்சமயம் வீராயி வந்து "அம்மா! இந்தாங்க பூ" என்றாள். அத்தை அவைகளைப் பெற்றுக்கொண்டு "ஏண்டி வீராயி! ஷோக்கு ஏன் வரல்லேடி?"

"அவுங்க என்னவோ புது செடிகளை நட்டுக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டுச்சென்றாள்.

அவ்வூரில் புதுத்தோட்டம் என்றாலே எல்லோருக்கும் அலாதி அன்புதான். அத்தோட்டத்திலிருக்கும் அளவற்ற புஷ்ப ஜாதிகளின் வாசனை அரை மைல் தூரத்திற்கப்பால் வீசும். மணி ஒரு நாளைப்போல் மாலைப்பொழுதையும் மங்கை தரிசனத்தையும் ஆவலுடன் எதிர் பார்ப்பான். புஷ்பங்களுக்கெப்படித் தங்களைத் தேடிவரும் பிரமரங்களைக்கண்டு லக்ஷியமில்லையோ, அப்படியே அவளுக்கும் அவனைப்பற்றி லக்ஷியமில்லை. அவள் அவனை இதுவரை பார்த்ததில்லை. பார்த்தாலன்றோ... அன்று அவன் வண்டியில் சென்றதைப் பார்த்தாள். அவன் மிராஸின் பிள்ளை என்று அறியாள். ஆனால் பராபரியாய் எல்லோரும் மிராஸின் பிள்ளை பட்டணத்திலிருந்து வந்திருப்பதாய்ச் சொல்வதைக் கேட்டிருக்கிறாள். அவன் அவளைத் தேடி வருகிறானென்பதும் அவளுக்குத் தெரியாது. மணி கிராமத்திற்கு வந்து ஒருவாரம் ஆயிற்று. அத்தையும் 'ஷோக்கை' எதிர்பார்த்து அவள் வராததால் 'வீராயி' இடம் அவளை வரச்சொல்லிச்சொல்லியனுப்பினாள். அன்று அவள் வருவாள் என்று அத்தை சொன்னதால் அவன் வெளியில் செல்லாமல் வீட்டிலேயே இருந்தான். அவளுக்கு அன்று வேலை சரியாயிருந்ததால் வரவில்லை.

மறுநாள் மத்தியானம் மூன்று மணி இருக்கும். வெயில் வெகு தீக்ஷண்யமாய்க் காய்கிறது. 'மணி' தன்னறையில் நாற்புறக்கதவுகளையும் திறந்துவைத்து, அரவிந்தமில் ஒற்றைச்சுற்று (நான்கு முழ) வேஷ்டி ஒன்றையுடுத்து வெற்றுடம்புடன் ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். அத்தையும் அவன் அறை வாயிலில் உட்கார்ந்து சுவாமிக்குத் திரி முறுக்கிக்கொண்டிருந்தாள். எழுதிக்கொண்டிருந்தவனுக்கு ஷோக்கின்மேல் நினைவு செல்லவே "அத்தை! உன் சிங்காரியைப்பற்றி ரொம்பத்தான் புகழுரையே! ஏன் அந்த ரம்பை நம்மாத்துக்கு வரல்லே?"

"அதாண்டா எனக்கும் அதிசயமாயிருக்கு; நானாவது அவள் வீட்டுக்குப் போய் பார்த்து விட்டுவரேன். அவளிடம் உன் கல்யாணத்திற்குப் புஷ்பம் வேண்டுமென்றும் சொல்ல வேண்டும். நல்ல வேளை நினைவு மூட்டினையே?" என்று சொல்லும்போதே, இடை மறித்து "அத்தை இவ்வருஷம் கல்யாணம் வேண்டாம்னு வேண்டாம்தான். நீங்கள் முகூர்த்தம், கிகூர்த்தம் வைத்தேளோ நான் அன்னிக்கே இங்கி

ருந்து போய்விடுவேன். இது நிச்சயம்தான்; நான் வரவருஷம் வேலைக்குச்சேர்ந்தபின்தான் கல்யாணம் செய்துகொள்வேன். இதை நீ அப்பாவிடம் சொல்லிவிடு. பிறகு மனஸ்தாபம் வேண்டாம்" என்று சொல்லி இடக்கரத்தை நெற்றியில் அழுத்திக்கொண்டு கண்களை மூடி யோசனையிலாழ்ந்தான். அவன் முன் நின்ற உரு வெளித்தோற்றம்...........அத்தை அதிர்ந்து விழுந்தவளைப்போல் அவனையே பார்த்தவாறிருந்தாள். அச்சமயம் சுகந்தமான மல்லிகை வாசனை மெல்ல வீச ஷோக்கு 'அத்தை' என்றழைத்தபடி உள் நுழைந்தாள். அவள் சிருங்காரத்தைக்கண்டு அத்தையே மயங்கி விட்டாள். விதவிதமான பூக்களால் தொடுக்கப்பட்ட 'கதம்பம்' கூந்தலில்; பல வர்ணப்பூக்கள்போட்ட "பிரிண்டெட்" ஸில்க் புடவை, அதே ஜம்பர், உடைகளின்மேல் மல்லிகை அத்தர், காதில் நடுவில் வைரம்பதித்த பச்சைக்கல் ஓலை, கழுத்தில் நவரத்தினமாலை, கைகளில் இனுமல் பூசப்பட்ட தங்கவளையல்கள், பிடியிலடங்கும் இடையில் நாகசர்ப்பம் படமெடுத்து விளையாடுவதைப்போன்ற மேகலை (ஒட்டியாணம்), காலில் செம்பஞ்சுக் குழம்பு கை நகங்களில் மருதாணி, உதட்டில் வெற்றிலைச் சிவப்பு, ஒய்யார நடை, உயர்ந்த கம்பீரப்பார்வை, உற்சாகத்தையூட்டும் ரூபம், மங்கைப்பருவம், மையலை யூட்டும் சித்திரம், வெண் நிலவைப்போன்ற அவள் சரீர காந்தியும், வனக்கன்னியைப் போன்ற சிங்காரமும் அவளைப் பன்மடங்கு அழகுள்ளவளாய்ச் செய்தன. அவள் குரலைக்கேட்டதும் அத்தை "அடி என் கண்ணே! என்னடி பத்துநாளாய் உன்னைக்காணும்? உனக்கு உடம்பு என்ன? என் மருமான்கூட ஊரிலிருந்து வந்திருக்கான். அவனிடம் உன்னைப்பத்தி சொன்னேன்" என்று சொல்லி அவள் கன்னத்தைத் தன் இரண்டு கைகளாலும் வருடி தன் கன்னத்தில் சொடுக்கிக்கொண்டு திருஷ்டி கழித்தாள்.

அவள் கையைப்பிடித்து தரதரவென்றிழுத்துக்கொண்டு மணியின் அறைக்கு வந்து "மணி! மணி! என்னை, 'அத்தை உன் ரம்பை எங்கே காணும்' என்று பரிஹாசம் செய்துகொண்டிருந்தயே, இதோபாருடா; என் ரம்பை" என்று அவனருகில் இழுத்துச்சென்று நிறுத்தினாள்.

அத்தையின் குரலும் வருகையும் தன் அறைக்குள் ஏககாலததில் பிரவேசிக்கவே கலைந்த கிராப்பும், திறந்த உடலும், திகைத்த பார்வையுமாய் எழுந்து நின்றான். அவன் கண்களை அவனே நம்பவில்லை. 'புஷ்ப கன்னி' என்று வாய்க்குள் சொல்லிக்கொண்டே மற்றோர் அறைக்குள் சென்றான்.

"ஷோக்கு! இங்கேயே உட்கார். ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்." என்று அத்தை மருமானைத் தேடச்சென்றாள். 'சகுந்தலை' (அதுதான் அவள் பெயர். ஷோக்கு என்று அழைக்கிறார்கள்) அறையினுள் நுழையும்போது

உங்கள் கூந்தலைக் காப்பாற்ற மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

பாட்டில் ஒன்றுக்கு	....	ரூ. 1 0 0
3 பாட்டில்	....	ரூ. 2 13 0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்தமற்றது.

ஒரு டிராம் பாட்டில் 1-க்கு அணா 14

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

சோல் ஏஜண்டுகள்:

ஆங்கிலோ-இந்தியன்
டிரக் & கெமிகல் கம்பெனி,
பம்பாய்-2.

'மணி'யைப் பின்புறம் பார்த்துக்கொண்டே நுழைந்தவளாதலால், சிவந்த அவன் மேனியையும், உருண்டு திரண்ட தோள்களையும், எழுந்து நின்றதும் அவன் அகன்ற மார்பையும், வசீகரமுள்ள பெரிய கண்களையும், கண்டானந்தித்தாள். அவ்வறையை ஓர் சுற்றுச் சுற்றுப் பார்த்தாள். மேஜையின்மேலிருக்கும் புஸ்தகங்களை ஒவ்வொன்றாய்ப் பார்க்கலுற்றாள். அவ்விடம் விட்டகன்ற அத்தை மணியைப் பின்தொடர்ந்து" ஏண்டா! இப்படி பொம்மண்டாட்டிபோல் ஓடிவந்துவிட்டாயே? நல்ல அழகுபோ! வா!" என்று கையைப் பிடித்திழுத்தாள்.

"இரு அத்தை; உடம்பின்மேல் துணியில்லை. நீ போய் அவளுடன் பேசிக்கொண்டிரு. வரேன்" அத்தை போகத் திரும்பினாள். "அத்தை ஒரு வார்த்தை. அவள் படித்தவளா?"

"அதென்னவோ எனக்குத் தெரியாது. அவளுக்குக் குடியானவச்சிபோல் நட்டுப் பயிராக்கத் தெரியும். கண்கூடாய்ப் பார்க்கிறேன். அவளுக்கு என்ன தெரியும், என்ன தெரியாதென்று இனிமேல்தான் கேட்கவேண்டும்" என்று சொல்லிச் சென்றாள்.

'மணி' நன்றாய்க் கிராப்பை வாரிக்கொண்டு 'ஸில்க் ஜிப்பா' ஒன்று தரித்து, சப்தமில்லாமல் தன் அறையை அடைந்தான். அங்கே அத்தை இல்லை. "அட அவஸ்தையே! அவளிடம் முதலில் எப்படிப் பேச்சை எடுப்பது?" என்று சலிப்புடன் உள் நுழைந்தான். அவள் 'ஷேக்ஸ்பியர்' நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் சலிப்பு இருந்த இடம் தெரியாமல் அகன்றது. அவளெதிரில் சென்று அவளுக்கு மாலை வந்தனமளித்துவிட்டு, தானும் ஓர் ஆஸனத்தில் அமர்ந்து அவளுடன் ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினான். அவளும் சஹஜமாய் அவன் கேள்விகளுக்கு விடையளித்தாள். அத்தை அவள் பேசும் அழகை வாய் பிளந்துகொண்டு பார்த்தாள். மணி ஐந்து அடித்தது. அவள் விழிப்புக்கண்டவள் போல், "அதிக நேரமாயிற்று. வேலையிருக்கிறது, வருகிறேன்" என்று எழுந்தாள்.

அவ்வழகி அவ்விடம் விட்டகன்றதும் அவ்வீடே வெறிச்சென்று சூனியமாய்த் தோன்றிற்று 'மணி'க்கு. அவள் செல்லும்போது அவளை தற்செயலாய்ப் பார்த்த 'மீனாக்ஷிசுந்தரமய்யர்' தம்மை மறந்து அவளையே பார்த்தபடி இருந்தார். தம் வேலை முடிந்து உள்ளேவந்த அவர் "அக்கா! நம் வீட்டிலிருந்து போன அப்பெண் யார்?"

"அவதான் 'அகோரமய்யர்' வீட்டை வாங்கி இருக்காளே அவா பெண்தான்."

"என்ன புதுத்தோட்டத்தின் சொந்தக்காரியா? எவ்வளவு அழகாய் இருக்கிறாள்? நல்ல அழகுள்ள பெண்" என்று சொல்லி அவள் சென்ற திக்கைப் பார்த்தார். அவ்விடம் அவர் மனதைப்போல் வெறிச்சென்றிருந்தது. அறையிலிருந்த மணியோ அவளைத் தியானித்தவாறே படுத்திருந்தான். இரவு மிகவும் கடினமாய் அவனை அவஸ்தைப்படுத்திற்று. நித்திராதேவி அன்று அவனை அணைத்து முத்தமிட அடியுடன் மறுத்தாள். அவன் ஹிருதயத்தினுள் வேறோர் ஸ்திரீ மூர்த்தியைப் பார்த்த பகையோ?

219012

4

மறுநாள் விடிந்ததும் அவன் தன் சிந்தனையை உருவாக்கிக்கொண்டு, எப்படியோ அவளிடம் தன் மனோநிலையை அறிவித்துவிடுவதென்று புதுத் தோட்டத்திற்கு வந்தான். 'சிங்காரி சகுந்தலை' மெல்லிய வெள்ளைச் சீலை ஒன்றையுடுத்தி ஸ்னானம் செய்த தலை விரிந்து காற்றில் பறக்க, கால்மேல் கால் போட்டுக்கொண்டு ஒருபுறம் சாய்ந்தவாறு சம்பங்கி மரத்தடியிலிருக்கும் கற்றிண்ணையில் அமர்ந்து இடது கையைக் கன்னத்தில் ஊன்றி, வலக்கரத்தில் புஸ்தகத்தை வைத்துப் படித்துக்கொண்டிருந்தாள்.

"ஹல்லோ ஷோக்!" என்று அன்பு ததும்ப அழைத்தான். அவள் முகம் சிறிது சிவந்தது. வெட்கத்தினால் ஏற்பட்ட அச்சிரிப்பு அவளுக்கு அதிக அழகைக் கொடுத்தது. அவள் கடைக்கண் வேல்விழிப் பார்வை அவன் ஹிருதயத்தை அம்பைப்போல் துளை செய்தது. அவள் புன்முறுவலுடன் எழுந்து அவனிருக்கும் இடமணுகி, "ஏன் அங்கு நிற்கிறீர்கள்? தாராளமாய் வரலாம்" என்று அவனை வீட்டிற்குள் அழைத்துச்சென்றாள். ஆபரணங்களற்றஅவள் இயற்கை ரூபம் அவனைப் பரவசப்படுத்தியது.

"அம்மா! இதோ 'மிராஸ்'பிள்ளை வந்திருக்கிறார்" என்று தாயை அழைத்தாள். அடுக்களையில் சமையல் செய்துகொண்டிருந்ததாய் பெண்ணின் குரலைக் கேட்டு வெளிவந்து 'மணியைப்'ப் பார்த்து, தன் மகளையும் பார்த்தாள். "வா அப்பா! எங்கோ வெகு தூரத்தில் படிக்கிறதாகச் சொன்னார்களே? ஷோக்! காபி கொண்டுவந்து கொடம்மா!" என்றாள். அந்தம்மாளின் அன்பொழுகும் சொற்களையும் நிதானமான பேச்சையும் கேட்டு உள்ளூர மகிழ்ந்தான். இப்படி நீடித்தது இவர்கள் நேசம்.

மீனாக்ஷிசுந்தரமய்யர் அன்று ஊரிலில்லை. தங்கள் பந்துக்கள் வீட்டில் நடந்த ஏதோ விசேஷத்திற்குச் சஹோதரியுடன் சென்றிருந்தார். மணி மாத்திரம் வீட்டிலிருந்தான். அவனுக்கு ஒருவனாய் பொழுதைப்போக்க மிகக் கஷ்டமாய் இருந்தது. புதுத்தோட்டத்திற்கு வந்துவிட்டான். அன்று முழுமதி வெகு நேர்த்தியாய் பிரகாசித்துக்கொண்டிருந்தது. எங்குக் கண்டாலும் காதலைக் கிளப்பும் காட்சியே நிறைந்திருந்தது. கபிலையும் சாந்தமாய்ப் பிரவஹித்

துக்கொண்டு, சந்திரனைப் பிடிக்கச் சென்றுகொண்டிருந்தாள். நந்தவனத்திலிருக்கும் புஷ்பங்களிலிருக்கும் மதுவைப் பிரமரங்கள் அளவில்லாமற் பருகி மயங்கி, புஷ்பங்களின் மேலேயே வீழ்ந்து கிடந்தன. சம்பங்கியைத் தழுவிக்கொண்டு ஓடும் முல்லைக்கொடிகள் அசைந்து அசைந்து ஆடி அம்புலியை அழைத்துக்கொண்டிருந்தன. ஷோக்கிற்குப் படுக்கை கொள்ளவில்லை. அவள் அன்னை அயர்ந்து நித்திரை செய்கிறாள். 'வீராயி' குரட்டை விட்டுக்கொண்டிருந்தாள். அவள் எழுந்து சம்பங்கி மரத்தருகில் வந்தமர்ந்தாள். தன் கைகளால் பயிராக்கப்பட்ட புஷ்பச் செடிகளைப் பார்த்தாள். அவள் வாய்திறந்து.

"காதலா லூறுங் களியொன்று மில்லாக்கால்,
வாதமயமே யாகுமாஞானம்—மேதினியில்
ஞான உழைப்பின் பயனாய், நன்மலர்தாம்
[பூத்திடலால்
ஞான மலரன்றுநாடு" என்று பாடிக்கொண்டிருந்தவள் குரலைக்கேட்டு 'மணி' அவள் பின்புறம் வந்து அவளை அணைத்தான். அவள் திடுக்கிட்டுத்திரும்பினாள். 'ஏன் ஷோக் பயந்தையா?' அவள் புருவத்தை நெறித்துக்கொண்டு அவனைப்பார்த்த பார்வை அகாலத்தில் வந்து என்னைத் தொட்டு.........என்று சொல்வதைப் போல் இருந்தது. அவள் உடலில் சிறு நடுக்கம். அது பயமோ, இன்பமோ, துன்பமோ, அவளால் அறியக்கூடவில்லை. அவன் மெள்ள அவள் முதுகை வருடினான். அவள் தன்னை மறந்தாள், தன் தலையை அவன் மார்பினுள் சாய்த்தாள். சந்திரனும் இவர்கள் பரபரப்பைக்கண்டோ என்னவோ தன் நண்பனை மேகராஜனின் மறைவில் நின்று தன் ஆட்சியை செலுத்தினான். அவன் வலக்கரத்தால் அவள் இடுப்பைச் சுற்றிக்கொண்டான். இடக்கரத்தால் அவள் முகத்தைத் தன் முகத்தருகில் இழுத்துக்கொண்டான். அவள் அரைக்கண் மூடி, சம்பங்கியைத் தழுவிக்கொண்டிருக்கும் முல்லைக்கொடியைப்பார்த்து முறுவல் பூத்தாள். அவனோ மயங்கிக் கிடக்கும் பிரமரங்களைக்கண்டு மகிழ்ந்தான். மன்மதன் தொடுத்துவிட்டுச்சென்றான் தன் அம்பை. அவள் 'சகுந்தலை'யாய்ச்சரித்தாள். அந்நிலவும் 'நந்தவனமும்' அவளுக்கு 'பிருந்தாவனம் மானஸாதீரம் முதலியவைகளை நினைப்பித்தன. உடலிலூறும் ஆனந்தவெறியில் கலகலவெனச்சிரித்து அப்படியே.........த்தாள். அவள் கூந்தல் விரிந்து அவிழ்ந்தது, வெறியின் ஆனந்தம் சகிக்காது வாய் சிரித்தது. அவள் உடல் பளிங்கென மின்னியது. அவன் அவளிடம் உள்ளத்திலெழுந்த உணர்ச்சிகளுடன் லயித்தான். அவன் கண்களுக்கு நள்ளிரவின் வெண்ணிலவும். அந்நிலவில் குளிக்கும் நந்தவனமும், புஷ்பக்கொடிகளால் படர்ந்திருக்கும் பசும்புற்றரையும், மல்லிகையும் ரோஜாவும் மலர்ந்து ஆடும் கிளைகளும், 'கந்தர்வர்' விஹரிக்கும் அற்புத வனமாய்த்தோன்ற 'காந்தர்வத்தில் ஆழ்ந்தான். ஊடல் பிணங்கல் அதிகமாக அதிகமாக புதிய காதலர்கள், புதிய முறையில்..... திகழ்ந்தார்கள் சலிப்பு எங்கெ? கோழியும் கூவிற்று. இவர்கள் வேட்கையும் வெற்றிப் பெற்றுக் கூவிற்று.

'மணியும்' 'ஷோக்கும்' வெகு அன்யோன்யமாய்ச்சரித்தார்கள். இவர்கள் அன்யோன்யத்தை அறியாத கிராம ஜனங்கள் மிகக்கேவலமாய் அக் காதலர்களைத் தூற்றினார்கள். 'ஷோக்' அதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. 'உண்மையன்பிற்கு என்றும் தீங்கில்லை' என்று த்ருட நம்பிக்கை கொண்டிருந்தாள். தாயும் ஊருக்குகந்த விதம் நடக்கவேண்டுமென்று கற்பித்தாள்.

மூன்றுமாத கோடை விடுமுறை முடிவடைந்து, 'மணி' கலாசாலையைப்பார்க்கச்சென்றான். 'மிராஸ்' மகனின்மேல் வெறுப்படைந்தார். அவளுக்கு எத்தனையோ தீங்கை இழைத்து ஊரைவிட்டு விரட்டவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டார். ஆனால் பிள்ளையிருக்கும்வரை ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் சென்ற மறுநாளே தொடங்கிவிட்டார் தன் நாட்டாண்மையை. அவள் வீட்டிற்கு வண்ணான் முதல் யாரும் போகக்கூடாது, ஊரில் விளையும் விளை பொருள் எதையும் அவளுக்குக்கொடுக்கக் கூடாது, அவள் வீட்டுத்துறைக்கு நீர் பாயாமலும் கட்டிவிட்டார். இரு பெண் ஜீவன்கள் துடிதுடித்தன. கிராமத்தின் பெரிய மிராஸ். அவர் சொல்லுக்கு மறுசொல் இல்லை. சுக்ரீவ ஆக்ஞைதான். அன்னபூரணி கர்ப்பிணியான பெண்ணையும், கடின கஷ்டங்களையும் ஏககாலத்தில் ஏற்கச் சக்தியற்றவளாய் வாடித்துவண்டாள். புதுத்தோட்டமும் நித்திய தரித்திரனின் அலங்கோல ரூபத்தையடைந்தது. கிளிகளும் குயில்களும் கொஞ்சும் வனத்தில் கொசுவும் எறும்பும் வாடி வதங்கிய இலைகளுமாய், பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. கஷ்டத்தை இன்பமுடன் சகித்தாள் 'சகுந்தலை' பொறுமையுடன் ஜனங்களின் அறிவில்லாமைக்குச்சிரித்தாள். மணியின் மனதைக் கவரும் ரூபத்தை நினைப்பாள். அவன் ஜீவனுள்ள கடிதங்கள் இவளுக்கு உயிரையூட்டும்.

5

மணியும் வேலைக்காக எங்கெங்கோ விண்ணப்பங்கள் போட்டுக்கொண்டிருந்தான். 'வேலை கிடைத்தால்'ஷோக்கு' உடன் சென்று இல்லறம் நடத்துவது. தந்தையோ 'வேம்பு'வை மணந்தால் தான் வீட்டிலிருக்கச்செய்வார். சொத்து சுதந்திரம் கொடுப்பார். கண்டிப்பான பேர்வழி. ஆதலால்தான் இன்பமுடன் இருக்க வேண்டுமானால் தற்சமயம் அவனுக்கு வேலை முக்கியம். அவன் கலாசாலைக்குச்சென்றாலும் அவன் மனம் நந்தவனத்தையும், நங்கையின் நகைப்பையும் காண, கிராமத்தை நோக்

கிச் செல்லும். மூன்று மாதத்தை மூன்று யுகமாய்க்கடத்தினான். கடிதங்களினால்தான் உயிருடன் இருந்தான் என்றும் சொல்லலாம். விடுமுறைகள் தசராவிற்காக. அச்சமயம் அவன் வருவான் என்று மீனாக்ஷிசுந்தரமய்யருக்குத் தெரியும். அவன் வரும்போது அவள் அவ்விடம் இருக்கக்கூடாதென்று அவள் விட்டிற்குச் சென்று தாயையும் மகளையும் கண்டபடி ஏசியதுமன்றி முதலில் ஊரைவிட்டுச்செல்லவேண்டும், இல்லாவிடில்.........என்று சொல்லி வந்தார்.

மறுநாள் மணி வரப்போகிறான். முதல் நாள் அவள் ஊரைவிட்டுத்தாயுடன் புறப்பட்டுவிட்டாள். வீராயி மாத்திரம் நன்றியுடன் தான் பெற்ற சம்பளம் முழுதையும் அப்பெண்ணிற்குக்கொடுத்தாள். அவள் அத்தோட்டத்தையும் வீட்டையும் அவளுக்களித்துவிட்டுச்சென்றாள். அவள் செல்வதைத்தெருவே வேடிக்கை பார்த்தது, கருப்புக்கரை போட்ட வெள்ளைப் புடவை, மையிட்ட கண்களில் ஓர் சலனம், மல்லிகை மலர் சூடிய மந்தஹாஸமான முகம், அம்மல்லிகைக்கிடையில் சிறு வேப்பம் துளிர். குங்குமத்திற்குமேல் விபூதி. ஒரு ஜீவனுக்குள் மற்றோர் ஜீவன் புகுந்திருக்கும் இரட்டிப்புக் களைகொண்ட ஷோக் வண்டியில் ஏறினாள். அவளைப்பார்த்துக்கொண்டிருந்த அத்தையின் கண்களில் நீர் மல்கியது. மிராஸின் கண்களிலோ கர்வக்குறியும் அவர் உதட்டில் "நாமாகக் கொண்டு இப்பேர்ப்பட்ட கனகார்யம் செய்தோம்" என்ற வெற்றிப் புன்னகையும் தோன்றிற்று. வெகு சாவதானமாய் தம்பாரமெல்லாம் தீர்ந்ததுபோல் பெருமூச்சு விட்டார்.

'மணி' மறுநாள் வந்து ரயிலை விட்டிறங்கியதும் நேராய், 'ஷோக்' வீட்டு வாயிலில் வண்டியை நிறுத்தி உள்ளே சென்றான். முதல் நாள் அவன் ரயிலில் ஏறும்பொழுதே அவன் மனம் சஞ்சலமடைந்தது. மனதில் சொல்லமுடியாத வேதனையும் சங்கடமும் வருத்திக்கொண்டிருந்தன. களையற்றிருக்கும் தோட்டத்தை பார்த்தபடியே வீட்டினுள் சென்றான். 'வீராயி' கண்ணீர் வடித்தபடி வீட்டைப்பெருக்கிக்கொண்டிருந்தாள். அவன் ஒவ்வொரு அறையாய் ஓடோடிப் பார்த்தான். வீடு இவன் மனதைப் போல் அலங்கோலமாய் இருந்தது. 'சம்பங்கி' மரத்தடிக்குச்சென்றான். உலர்ந்த வனத்தைப் பார்த்ததும் இவன் நெஞ்சம் உலர்ந்ததோ என்னவோ? கண்ணீர் சோர உள்ளே ஓடினான். "வீராயி! வீராயி! என் 'ஷோக்' எங்கே? சொல்லு, சொல்லு, அவள் என்ன ஆனாள்" என்று வெறிபிடித்தவன்போல் அவளை உலுக்கினான். அவளும் கண்ணீர் வடித்தாள். வாயைத் திறக்கவில்லை. அவள் சென்ற இடம் அவளுக்குத் தெரிந்தாலன்றோ சொல்வாள். சுவரை உற்றுப் பார்த்தான். அங்கு மாட்டப்பட்டிருந்த இவன் புகைப் படத்தின்மேல் வாடிய கதம்பமாலை தொங்குகிறது. அது அவள் கையால் பயிரிட்ட செடிகளில் பறித்து அவள் மலர்க்கரத்தால் கட்டிய மாலை. அவன் மனதிற்கு அதுசற்று ஆறுதலளித்தது. அதையப்படியே (புகைப்படத்துடன்) எடுத்துக்கொண்டு வெளியில் வந்தான். ஏறினான் வண்டியில். வந்த வழியைப் பார்த்து ரயிலடிக்குச்சென்றான்.

'மணி' வந்ததும் திரும்பிச் சென்றது 'மிராஸிற்கு' எல்லையற்ற கோபத்தையளித்தது. "அவன் கெட்டான், ப்ரஷ்ன்ட" என்று சொன்னார். ஆனால் எடுத்து வளர்த்த அத்தையின் மனது ஏங்கிற்று. நாட்கள் ஓடின. மாதங்கள் நடந்தன. வருடங்கள் நகர்ந்தன. காலகர்ப்பத்தினுள் மாதங்களென்னும் மொட்டுக்கள் வருடங்கள் என்று விகஸித்து ஐந்து உதிர்ந்தது. வருடப் புஷ்பத்தைத் தரிப்பவர் உண்டா? நிலையர்ய்க் கையில் பிடித்தெடுப்பவருண்டா? அன்று சென்ற 'மணி' எங்கோ வடக்கில் வேலையில் இருக்கிறான் என்றுகேள்வி. விவாஹமில்லை. கடினமாய்ப் பிரம்மசர்யத்தை அனுஷ்டிப்பதாய் சொல்லிக்கொண்டிருந்தார்கள். 'மிராஸ்' தான் செய்த தவறை மெல்ல உணர்ந்தார். 'சகுந்தலை'யைப்போல் கள்ளங்கபடற்றிருந்த 'கர்ப்பிணி'யைத் தான் ஆண் மகன், அதிகாரம் படைத்தவன் என்ற தற்பெருமையால் அவளைச் செய்த கொடுமைகளை நினைத்து நினைத்து கண்ணீர் வடித்தார். 'எளியாரை வலியாரடித்தால், வலியாரை தெய்வம் அடிக்கும்' என்பதைக் கண்கூடாய்க் கண்டார். தம் பிள்ளைக்கு உயிருக்குயிராயிருந்த 'ஷோக்கைப்' பிரித்ததால்தான், தம் மகன் தம் முகாவலோகனமும் செய்யாமல் ஐந்தாண்டுகளாய் இருப்பதை நினைத்து பாயும் படுக்கையுமானார். "பெற்றமனம் பித்து, பிள்ளைமனம் கல்லு" என்று வருவோர் போவோர் சொல்லினர். அவர் மனம் மாத்திரம்......அத்தையின் அவஸ்தையோ சொல்லத்தரமில்லை. ஒரு புறம் மனைவியற்ற ஸஹோதரன் படும் வேதனை, மறுபுறம் மகனைப்போல் வளர்த்த 'மணி'யைப் பார்க்காத துயரம், அவன் நேசித்த 'ஷோக்கை' அடையாமல் துறவிபோலிருக்கும் நிலைமை, இத்தனையும் சேர்ந்து அத்தையைப் பித்துப் பிடித்தவள் ஆக்கின.

மணி இப்பொழுது 'பர்ச்சஸ் டிபார்ட்மெண்டில்' தலைமைக் காரியதரிசி. கல்கத்தாவிலிருக்கிறான். அவன் ஒரு நினைவுமில்லாமல் 'ஆபீஸே' சுவர்க்கம் என்று அல்லும் பகலும் உழைத்ததால் யுத்தம் தொடங்கினதும் சேர்ந்தவன் இந்நான்காண்டுகளில் மேன்மேல் உயரிய பதவியையடைந்தான். அதைப்பற்றி அவனுக்குச் சந்தோஷமில்லை. அவன் மனது 'சகுந்தலை'யைத் தேடுவதிலேயே இருக்கிறது. அவன் துஷ்யந்தனாய் அவளை மறந்திருந்தாலன்றோ.........

அன்று ஒருபுறம் தந்தைக்கு மிகவும் உடம்பு சரியாயில்லை என்ற கடிதமும் மறுபுறம் 'புனா'வில் நடக்கும் ஆபீஸர்களின் சர்ச்சைக்கு வரவேண்டுமென்ற தந்தியும் வந்தன. முதலில் ஆபீஸ் உத்தரவுப்பிரகாரம் 'புனா' சென்று வந்து, பிறகு இயன்றால் சென்று தந்தையைப்

பார்ப்பது, அதுவரை அவர் உயிருடனிருந்தாலும்...என்று நினைத்து அன்றே புறப்பட்டுவிட்டான். 'கல்யாண்' ஸ்டேஷனில் வண்டி நின்றதும் பற்பல சஞ்சிகைகள் விற்றுக்கொண்டிருந்தனர் சிறுவர்கள். ரயிலை விட்டிறங்கினான் மணி–அசல் ஆங்கிலேயனைப்போல்—நடை, உடை, பாவனை எல்லாவற்றிலும். அவனை யாரும் ஹிந்து என்று சொல்லமாட்டார்கள். அவன் உண்பதும், ரொட்டி, பிஸ்கட், பால், பழம் தான். 'ஹிக்கின்பாதம்ஸ்' அருகில் நின்று சில புத்தகங்களைப் பொறுக்கிக் கொண்டான். அவைகளுள் ஒன்று தமிழ் ஸஞ்சிகை. "சுகந்தம்" என்று பெயர். ஆசிரியர் மன்மதகுமாரால் வெளியிடப்படுவது. புத்தகத்தின் மேலட்டை அழகிய பூந்தோட்டத்தால் மூடப்பட்டது. அப்புத்தகம் அவன் மனதிற்கின்பத்தையளித்தது. புத்தகத்தைத் திறந்தான். அதற்குள் காதலைப்பற்றி வெகு சிறப்பாய் எழுதியிருந்தது. அது கீழ்க்கண்டவாறு—

1. "கள்ளமில்லாக்காதலிற் காமவிருப்ப மேதுமிரா
தெள்ளளவு முள்ளேயா னென்பதிலை
தெள்ளியதண் ணீர்ப்பரப்பை நோக்கி
நிலத்துநதிகளெலாஞ் செல்வதியல்பென்றே
தெளி,"

2. "நாரதர் சாண்டில்யர் நல்லதெனப்போற்றும்,
ஆராவமுதன்பாற் சேருங் காதல்,
ஆராயிற் 'காதல'ரும்பலரச் சாதனமா
ஞானமுமக் காதலு'க்கொப்பாமோ கழறு?"

"காதல். காமத்துடன் கூடிய காதல். ஒன்றைவிட ஒன்றை அழகாய்க்காணும்போது முன்னதை மறந்துகொண்டே வருகிறது. சௌந்தர்யம் 'காதலி'ன் கவசத்தைத் திருடிய தொருநாள். அதைத் தரித்த துர்ப்பலர்களைத் த்வம்சம் செய்கிறது. சௌந்தர்யம் ஜடப்பொருள்; 'காதல்' ஜீவனுள்ளது. காதலில்லாச் சௌந்தர்யம் பயங்கரமானது. ஆதலால், சௌந்தர்யம் காதலல்ல. 'காதலே' சௌந்தர்யம். அது நிச்சயமானால் சௌந்தர்யத்தை இச்சிக்காது. 'காதல்' எவ்வளவு தீர்க்கமாய் வளர்கிறதோ அவ்வளவு சௌந்தர்யம் காணப்படுகிறது. அப்பொழுது புல், பூண்டு, க்ரூர மிருகம், சத்துரு, பைத்தியம் எல்லாம் சௌந்தர்யம்தான். அப்பொழுது சௌந்தர்யம் எங்கோ இருக்கிறதென்று தேடும் கஷ்டமில்லை. அதையறிந்து பக்குவத்திற்கு வந்து அன்புடன் ஜகத்தையே நேசிக்கலாம். தன் அன்பில் காமம் இருந்தால் அது தன்னலத்தால் நிரம்பி அங்கே நின்று விடுகிறது. காமத்தை ஜயித்து நிர்மலமாய்ச் சமத்துவத்துடன் பார்த்தால் அது விச்வவ்யாபகமாய் மஹோபகாரம் செய்யும்."

அதைப் படித்தான். சுகந்தத்தின் பரிமளச் சொற்கள் இவன் நிர்மலக் 'காதலை' இன்னும் பிரகாசப்படுத்தின. 'பூனா' வந்திறங்கினான். காலை ஆபீசில் நடக்கவேண்டிய சர்ச்சை முடிந்தது. மாலை தேநீர் விருந்து. தலைமை உத்தியோகஸ்தர்களுக்கு மாலைகள் போடப்பட்டன. மாலைகள் தொடுத்திருக்கும் நேர்த்தியையும், வர்ண வேலைப்பாடுகளையும் கண்டதும் அவன் ஹிருதயம் துடிதுடித்து. ஐந்தாண்டுகளுக்கு முன்சென்றது. மாலையைக் கழற்றி மேஜையின் மேல் வைத்தான். மாலையை உற்றுப் பார்க்கப் பார்க்க ஐந்தாண்டுகளின் வாழ்க்கை முழுதும் அதில் பிரதிபலித்தது. முதல்முதல் 'சம்பங்கி மரத்தின்மேல் ஒய்யாரமாய்ச் சாய்ந்திருந்த ஷோக்கைக்கண்டு அவளிடம் தன் மனது லயித்ததும், மறுமுறை அத்தை அவளைத்தன்னிடம் அழைத்துவந்து சேர்த்ததும், பிறகுதான் அவசரப்பட்டு அவளை அனுபவித்ததும், அதையறியாமல் தன் தந்தை அவள்மேல் தப்பபிப்பிராயம்கொண்டு அவளைத் தூஷித்தும், அவள் அவன் ஊருக்கு வருவதையறிந்தே அவன் நன்மையைக்கருதி ஊரை விட்டகன்றதும் இந்நாள் வரை அவள் இருப்பிடம் தெரியாமல் தான் அவஸ்தைப்படுவதும், ஆகியஇவைகளை எல்லாம் நினைத்து, மலர் மாலையைக் கண்டதும் 'ஷோக்'கின் நினைவு தடுக்கக்கூடாத விதத்தில் அவனை வேதனைப்படுத்தியது. அவன் பெருமூச்சுடன் முகத்தில் துளிர்க்கும் வியர்வையைத் துடைத்துக்கொண்டிருந்தபோது — அவன் நண்பன் மேஜையின் மேலிருந்த மாலையை அவன் கழுத்தில் போட்டான். மாலை கழுத்தில் மறுபடியும் விழுந்ததும் அவன் மனம் திக்கென்றது. பரபரவென்று அதைக் கழற்றிக்கையில் வைத்துக்கொண்டு அதை உற்றுப் பார்த்தான்.

"இப்புஷ்ப மாலைகளை எங்கிருந்து வரவழைத்தீர்கள்?' என்று கேட்டான் 'மணி'. அவர்கள் எங்கிருந்து வரவழைத்தார்களோ அதைச்சொன்னார்கள். வீடடைந்தான் பெட்டியை வெகு அவசரமாய்த் திறந்தான். வாசனையடங்கி உலர்ந்த கதம்ப மாலையுடன் அவன் புகைப்படம் அப்பெட்டியிலிருந்தது. அவ்வாடிய மாலையைப் பார்த்ததும் அவன் முகமும் வாடியது. காலையில் தான் படித்த 'சுகந்தத்தின் சொற்சுவைகளை நினைவுபடுத்திக்கொண்டு அவ்வாடின மாலையிலும் சௌந்தர்யத்தை, அல்ல, ஜடப் பொருளான சௌந்தர்யமல்ல, ஜீவமுள்ள 'காதலை'க் கண்டான். "ஷோக்! நான் உன்னை அனியாயம் செய்துவிட்டேன். முதலில் நான்; பிறகு என் தந்தை; நாங்கள் கொடிய அரக்கர்கள்" என்று வாய்விட்டுக் கூவினான்.

6

மாலை ஆறு மணி, புனாவிற்கடுத்த கிராமத்தில் 'பிரமதவன'த்தை நோக்கி ஓர் 'ஷவர்லெட்'கார் வெகு வேகமாய்ப்பறந்துக்கொண்டிருந்தது. அதில் போகும் யுவனுக்கு ஒன்றின் மேலும் நினைவில்லை. மறுபடியும் மறுபடியும் 'சுகந்தத்தின்' வியாசத்திலேயே புத்தி ஆழ்ந்திருந்தது. கார் டக்கென்று நின்றது. காருக்குள்ளிருந்து தலையை நீட்டிப்பார்த்தான். சடக்கென்றிறங்கினான். 'பிரமதவன'த்திற்குள் நுழைந்தான். அவ்வுத்தியான வனநடுவில் சிறிய லதாகுஞ்சம். அதனுள் சலவைக்கல்லால் நிர்மிக்கப்பட்ட சிறு பாலகனின் விக்கிரகம். காவற்காரனின் உத்தரவுபெற்று நந்தவனத்தினுள் நுழைந்தான். தங்கள் ஊர் மேற்குத்

தெரு பூந்தோட்டத்தைப்போல் தோன்றிற்று அவனுக்கு. காவற்காரனிடம்வந்து அவ்வனத்து சொந்தக்காரரைப்பார்க்கவேண்டுமென்றான். அவனை அவன் அவ்வுத்தியான வனத்திற்குப் பின்புறமிருந்த ஓர் சிறிய வீட்டிற் கழைத்துச் சென்றான்.

அச்சமயம் இருபத்திமூன்று வயதுள்ள மங்கை ஒருவள் நான்கு வயதடைந்த சிறுவனுடன் விளையாடிக்கொண்டிருந்தாள். அச்சிறுவன் கையில் புஷ்பவில் ஒன்றிருந்தது. புஷ்பங்களால் கிரீடத்தைப்போல் தொடுத்த புஷ்பச் செண்டை தலையில் தரித்து, கழுத்தில் பொற் சங்கிலியும், கைகளில் விதவிதமான வளையல்களும் குலுங்க, அவ்விடம் சுவறில் மாட்டப்பட்டிருந்த (வெற்றுடம்புடன் எடுக்கப்பட்ட) புகைப் படத்தின்மேல், வில்லில் புஷ்பங்களை தொடுத்து நாணை இழுத்து விண்விண் என்று புஷ்பங்களைக்குறிப் பாய்த்தொடுத்துக்கொண்டிருந்தான். அவன் அழகைப் பருகிக்கொண்டு மாத்ருதேவி விற்றிருந்தாள். அச்சமயம் யாரோ வெளியில் காத்திருப்பதற்கறிகுறியாய் மணியடித்தது. அவள் குழந்தையைக்கூட எடுக்காமல் வந்தவரை வரவேற்கச்சென்றாள். மணியும் காவற்காரனும் ஏககாலத்தில் உள்நுழைந்தனர். அங்கிருக்கும் 'மன்மத குமாரனைக் கண்டதும் மணிக்குத் தூக்கிவாரிப்போட்டது. தன்னை மறந்து நின்றான். புதியவனைக்கண்ட குழந்தை காவற்காரனையணுகி ''மனஸா! ம...ன...ஸா! என்னை எடுத்துக்கோ'' என்று அவன் கால்களை கட்டிக்கொண்டான். அச்சிறுவனின் குரல் மணியை மயக்கியதுமன்றித்தாபத்தை தணித்தது. அதற்குள் மறுபடியும் மணியோசை கேட்கவே அருகிலிருந்த அறையில் நுழைந்தனர்.

அங்கு இவனை வரவேற்றவள் ஓர் முரட்டுப் புடவை, அரைக்கை வைத்த செக்ரவிக்கை, கையில் சங்கு வளையல், கோதி முடிந்த தலை, வறண்ட பார்வை, இத்தனை லக்ஷணமுள்ளவள். அவள் சிருங்காரம் அருவருப்பாய் இருந்தாலும் அவள் முகம் யௌவனத்தைப் பிழிந்துகொண்டிருந்தது. வறண்ட பார்வையாலும் 'காதல்' ஊறிக்கொண்டிருந்தது. உலர்ந்த உதட்டிலும் அவளையும் அறியாது புன்னகை துள்ளி விளையாடிற்று.

அவனைக் கண்டதும் அவள் ''நமஸ்தே'' என்றஞ்சலி செய்தாள். அவள் குரலைக் கேட்டதும் திகைத்து நாத்தடுமாற 'ந...ம...ஸ்...தே' என்றான். அவன் கண்களில் நீர் ஊறிற்று. குழந்தையை அவ்விடம் விட்டுவிட்டுக் காவற்காரன் அகன்றான். குழந்தை வில்லில் புஷ்பங்களைத் தொடுத்துவந்த புதியவன்மேல் நாணேற்றி சொரிந்தான். அன்னை அன்புடன் அவனைக் கடிந்து ஓர் பார்வைபார்த்தாள். பாலன் குவளையிலிருந்த புஷ்பங்களை தாயின்மேல் தொடுத்தான். தாய்கோபத்துடன் சிரித்தாள். வந்தவன் அவன் விளையாட்டில் வசியமாய்ச் சிரித்தான்.

''ஷோக்! இப்படி நீ செய்தது மிகவும் அனியாயம். நான் வருவதற்குள் ஏன் ஊரைவிட்டு வந்துவிட்டாய்?'' என்றதைக் கேட்டதும் திகைப்பூண்டு மிதித்தவள்போல் அவனைப் பார்த்தாள். அப்படியே சுவரில் சாய்ந்தாள். அவள் பேசமுடியாமல் தத்தளித்தாள்.

''என்னைச் சோதனை செய்தது போதும். வாயைத் திறந்து ஓர் பேச்சுப் பேசு. ஏன் ஊரைவிட்டு உன் உயர்ந்த நந்தவனத்தைவிட்டு இவ்வளவு தூரம் வந்தாய்? உன் புஷ்பங்களன்றோ இவ்விடமிருக்கும் உன்னையறிவித்தன. இக் குழந்தை.........

அவள் கண்களில் மடமடவென்று நீர் சொரிந்தது. ''நான்தான் நெறிதவறியவள். உங்கள் தந்தையின் விருப்பப்படி வேம்புவைச் சாஸ்திரோக்தமாய் மணந்து வம்சத்தை நிலைநாட்டுங்கள். எனக்கு என் 'மன்மதகுமாரன்' போதும். எங்கள் எளிய ஜீவனத்திற்கு இச்சோலை போதும்'' என்று சிறு பதட்டத்துடன் சொன்னாள்.

''என்ன? உன் மன்மதகுமாரன் உனக்குப் போதும். அப்படி என்றால்.........'' என்று அவன் முடிக்கும் முன்பே ''அம்மா! நானும் இன்னும் என்ன போதும்னே?'' என்றான் பாலகன். அச்சம்கொண்ட மணியின் மனது த்ருடம்கொண்டது. அவ்வழகிய பாலன் 'மன்மதகுமாரன்' ஆம்! அவன் மன்மதன்தான். புதுத் தோட்டத்தில் மன்மதனின் மலரம்பின் பாதையால் அதை தீர்த்த இடத்தில் உத்பவித்த அவன் 'மன்மதகுமாரன்.' மிக்க மகிழ்ச்சியுடன் அப்பாலனை எடுத்து முத்தமீந்தான். அவன் சோகம் நிறைந்த கண்களிலும் ஓர் பிரகாசம் பளிச்சென்று தோன்றி மறைந்தது. அச்சமயம் 'தர்வான்' (வாயிற்காப்போன்) சில கடிதங்களையும் புஸ்தகங்களையும் எடுத்து வந்து அவ்விடமிருக்கும் மேஜையின்மேல் வைத்துச் சென்றான்.

'மணி' அக்கடிதங்களை சற்றுக் குறிப்பாய்ப் பார்த்தான். ''ஆசிரியர் மன்மதகுமார்'' ''சுகந்தம்'' என்றிருந்தது. அவன் ஆச்சரியத்துடன் அதை எடுத்துப் பார்த்து ''இதுவும் உன் வேலைதானா?'' என்று முதலில் இவ்வுடைகளை மாற்றி முதல் முதல் எங்கள் வீட்டில் வந்தபோது அலங்கரித்து வந்தமாதிரி வா! என்றான்.

''நான் எல்லாவற்றையும் துறந்து எத்தனையோ நாட்களாகிவிட்டன.''

''எதற்காக?''

''எதற்காகவா? வாழ்க்கையின் வழியை விட்டகற்றப்பட்டவளுக்கு......... அகன்றவளுக்கு......'' என்று பரிதாபமாய் சொன்னாள்.

''இப்பொழுது உன் வாழ்க்கையை பிரகாசப்படுத்த வந்துவிட்டேனே? இனியேன் கவலை?

''எனக்கொன்றும் கவலையில்லை. என் 'மன்மதன்' என் மலர்ச்சோலை.........'' என்று கண்களைத் துடைத்துக்கொண்டாள். மணியால் பொறுக்க முடியவில்லை. சரேலென்று அவளை இழுத்து அணைத்தான். சிறுவன் பயந்து வீரிட்டான். அவள் சோகத்திலும் தன்னையறியாமல் கலீர் என்று சிரித்துவிட்டாள். அவள் சிரிப்புடன் அவன் சிரிப்பும் சேர்ந்தது. 'மன்மதன்' ஒன்றும் விளங்காமல் பிரமை பிடித்தவன்போல் இருவர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான்.

மறுநாள் காலை ஆபீஸிற்குச் செல்வதற்கு முன்பே "மீனாக்ஷிசுந்தரமய்யர் மரணப் படுக்கையிலிருப்பதாகவும், அவன் உடனே புறப்பட்டு வரவேண்டுமென்றும்" தந்தி வந்தது. 'ஷோக்'கையும், மன்மதனையும் அழைத்துக்கொண்டு அன்றே தன் கிராமத்தை நோக்கிப் பிரயாணமானான். ஸ்டேஷனை அடைந்ததும் அவனுக்குப் பற்பல யோசனை தோன்றிற்று. வீட்டிற்கு வந்து சப்தமில்லாமல் முன்புறத் தாழ்வாரத்தில் நின்றான். அச்சமயம் அவன் தந்தை தம் சகோதரியிடம் "அக்கா! நான் செய்த கொடுமையை நான் அனுபவிக்காமல் யார் அனுபவிப்பர்? அமாயகச் சிறுமியை அனியாயமாய்ப் பலதிறப்பட்ட கஷ்டத்திற்காளாக்கினேன் அவர்கள் வீட்டுத் துறைக்குத் தண்ணீர் பேர்காமல் தடுத்தேன். நெற்குவியலைப் பாழாக்கினேன். உணவுப் பொருள்கள் எட்டாமல் செய்தேன். ஆண் சஹாயமற்ற அபலைப்பெண்களை நஷ்டகஷ்டங்களில் ஆழ்த்தினேன். அக்குழந்தைப் பெண் வாய் திறந்து ஒரு பேச்சும் ஒருவரிடமும் சொல்லவில்லை. 'மணி' இவ்விடம் வருகிறானென்று நான் அவள் வீட்டிற்குச் சென்று அவர்களைக் கண்டபடி வைதும் வந்தேன். அவன் வருவதற்குமுன் இவ்வூரைவிட்டு இரவோடிரவாய் எப்படித்தான் அகன்றாளோ? அறியேன். அவள்தாயும் இறந்துவிட்டதாகக் கேள்வி. இத்தனை கஷ்டங்களையும் இன்பமாய் ஏற்ற இளம் நெஞ்சின் துடிப்பு வீணாகுமா? நான் துடிக்கவேண்டியதுதான், 'மணி'யைக் கண்டால் சொல்லு அவளைத் தேடி அவளுக்கோர் வழியைச் செய்யச்சொல்லு. அவள் கல்யாணம் செய்துகொள்வது சந்தேஹம்தான். இருந்தாலும் வம்சம் விளங்கவேண்டும், என்று சொல். 'ஐயோ! ஷோக்! என்னை நீயடித்திருந்தாலும் சஹித்திருப்பேனே! உன் மௌனமான புன்சிரிப்பன்றோ என்னை இத்தனை வாட்டுகிறது.' மணீ! மணீ! மணி வந்தானா? அவன் ஏன் வருவான்? நான் அவனுக்குச்செய்த அநியாயம் கொஞ்சமா?" என்று கண்ணீர் வடித்தார். புரண்டுபுரண்டு உடலைஅலட்டினார். இனி மணியால் பார்க்கக்கூடவில்லை. தந்தையின் பச்சாத்தாபத்தைக் கண்டதும் அவர்மேலிருந்த கோபம் அகன்றது. சறசறவென்று அவர் அருகிலமர்ந்து, "அப்பா!" என்று அவர் முகத்தைத் தடவினான். கண்களைப் பெற்ற குருடன் போல் அவர் தம் மகனின் ஸ்பர்ச சுகத்தையும் இனிய குரலையும் ஏககாலத்தில் அனுபவித்த ஆனந்தத்தால் கண்களை அகலத் திறந்து "மணி! என் மணி! கடைசியில் என்னை மன்னித்து வந்தையா?"

அப்பா! என்ன வார்த்தையது? அப்படிச் சொல்லாதீர்கள். நான் இவ்வளவு நாள் உங்களைப் பாராமலிருந்த கடினத்வத்திற்கு என்னை நீங்கள் மன்னித்தால் போதும். 'அத்தை! அப்பா இவ்வளவு கேவலமாகும் வரை நீ கூட எழுதாமல் இருந்தையே!" என்று வருத்தத்துடன் கேட்டான். சுந்தரமய்யர் மகனிடத்தில் மனதைவிட்டு எல்லாவற்றையும் பேசியபின் சற்று கண் அயர்ந்தார். 'மணி தந்தையின் மனதையறிந்துவிட்டதால் அத்தையிடம் சாவகாசமாய்ப் பேசிக்கொண்டிருந்தான். "அத்தை! உன் ரம்பை போன இடம் தெரியாதா?" என்று பரிதாபமாய்க் கேட்டான்.

"மணி! என்னை அதைப்பற்றிக் கேட்காதே! நான் ஒரு பெரும் பாவி. ஒரு பெண் வாழ்வைக் கெடுத்தேன். இன்னும் எத்தனை ஜன்மமெடுத்து இப்பாபத்தைத் தொலைக்கவேண்டுமோ? சிவனேன்னு இருந்த உன்னிடம் அவளை அழைச்சிண்டு வந்துகாட்டி, அதனால் நீங்களிருவரும் ஒண்ணா சேர்ந்து, மீனாக்ஷிக்குக் கோபம் வந்து எவ்வெளவெல்லாம் ஆச்சுப்பாரு" என்று கண்ணீர் வடித்தாள். மணியின் மனது இளகிவிட்டது. 'நான் சித்தெ வெளியில் போயிட்டுவரேன். அப்பாவெ பார்த்துக்கோ என்று வெளியில் சென்றான். சற்று நேரத்தில் 'வீராயி வீட்டில் விட்டிருந்த 'ஷோக்' கையும் குழந்தையையும் அழைத்துவந்து அத்தையிடம் விட்டான். 'ஷோக்'கைக் கண்டதும் அத்தை "அடி ஷோக்கு! வந்தையா? என் கண்ணே, உன் கஷ்டம் வெடிந்ததா?" என்னம்மா இத்தனை நாள் எத்தனை கஷ்டப்பட்டியோ?" என்று மன்மதனைப் பார்த்து, "இவன்........ அவன் தானே?" என்று துக்கத்துடன் கூடிய சிரிப்புடன் கேட்டாள். அப்பொழுதும் 'ஷோக்' தன் பொறுமையான புன்முறுவலைத் தான் தோற்றுவித்தாள். சிறுவனோ புதிய இடத்தையும் பாட்டியையும் கண்டு பயந்து 'அம்மா நாம் ஆத்துக்குப்போவாம் வாம்மா' என்று தலைப்பைப் பிடித்திழுத்தான். அதற்குள் விழிப்புக்கொண்ட 'மிராஸ்' "மணி! நான் செய்த பாபத்திற்குத் தண்டனையை அனுபவிக்கிறேன். குழந்தைப் பெண் எங்கு அவஸ்தைப் படுகிறாளோ? 'சகுந்தலை'யைப்போல் சென்றாள்டா' என்று பொருமிக் கண்ணீர் வடித்தார்.

மணி மன்மதனை எடுத்துக்கொண்டு ஷோக்கையும் அழைத்துக்கொண்டு தன் தந்தையருகில் போய் நின்று "அப்பா! உங்களுக்கு அந்த கவலை வேண்டாம். கொஞ்சம் கண்ணைத் திறந்து பாருங்கள்" என்று அவர் நெற்றியை வருடினான். அவர் கண்களை அகலத்திறந்து மணியின் கையிலிருக்கும் மன்மதனைப்பார்த்து, "இத்தேவக்குழந்தை யாருடா அப்பா!" என்று விழித்தபடி பார்த்தார். மன்மதன் மன்மதாலங்காரத்துடன்தான் இருந்தான். அவன் கையில் மலரம்பும் இருந்தது. குழந்தை கிழவரைப் பார்த்து, "அம்மா!" என்று தாயிடம் தாவினான். அவன் அம்மா! என்றதைக் கேட்டு மணியின் பின்புறம் நிற்கும் 'ஷோக்கையும்' பார்த்தார். குழந்தாய்! "ஷோக்" என்னை மன்னித்தாயா? உன் கஷ்டம் விடிந்தது என் குலமும் விளங்கித்து" என்று நாக்குழறச் சொல்லியவாறே அவளைச் சாந்தமாய்ப் பார்த்தார்.

Edited & Published by N. R. Ramanujam B.A., & Printed by S. Rangaswami, B.A.,
at The Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

விதவிதமான எழுத்துக்கள்! கவர்ச்சியான வேலைப்பாடு!!

கண்ணைக் கவரும் கலர் பிரிண்டிங்

இவைகளுக்குச் சிறந்த அச்சுக்கூடம்

காவேரி கலர் பிரஸ்

(கலர் பிரிண்டிங்குக்கென்றே
பிரத்தியேக உயர்தர அச்சு யந்திரம்
அமைக்கப்பட்டுள்ளது)

உங்கள் ஆபீஸ், வியாபாரம், குடும்பம்

இவைகளுக்குத் தேவையான பிரிண்டிங்கைக் கொடுத்துப் பாருங்கள். நீங்கள் பூரண திருப்தி அடைவது நிச்சயம்.

பெஸண்ட் ரோடு,
கும்பகோணம்.

காவேரி ஆபீஸ்.

Regd. No. M. 4405. CAUVE

PRINTED AT THE CAUVERI COLOUR PRESS KUMBAKONAM